கல்கி



KALKI

3·7·67 40 காசு





அவனுக்கு ஒவ்வொரு நாளும் இன்க்ரிமின்* கொடுங்கள்

தீவிரமான பசியைத் தூண்டவும், படிப்படியாக எடையை அதிகரிக்கவும்

இன்க்ரிமின்* செரி பழத்தின் மணம் நிறைந்தது. l-லைசின் என்ற இன்றியமையாத பொருள் அடங்கியது. இந்தப் பொருள் உடல் நலத்திற்கு உகந்த பசியைத் தூண்டி, உணவின் முழுப்பயனையும் சிறந்த முறையில் பெற உடலுக்கு உதவுகிறது. இன்க்ரிமின்* சாப்பிட்டு வந்தால் உங்கள் குழந்தை வயிறாரச் சாப்பிடுவான். அவனுடைய எடையும் படிப்படியாக அதிகரிக்கும். ஒவ்வொரு நாளும் அவனுக்கு இன்க்ரிமின்* கொடுங்கள்- அவன் மனமாரச் சாப்பிடுவதையும் வளர்ச்சியடைவதையும் கண்டு மகிழுங்கள்!



இன்க்ரிமின்* வளரும் குழந்தைகளுக்கெனவே உண்டாக்கப்பட்ட ஒரு லெடர்லி தயாரிப்பு.

இன்க்ரிமின்*... வளர்ச்சிக்கு மிகவும் சிறந்தது

நாள் ஒன்றுக்கு:
இன்க்ரிமின்* ட்ராப்ஸ்: 10-20 துளிகள்.
இன்க்ரிமின்* ஸிரப்: ஒரு தேக்கரண்டி.

* ரிஜிஸ்டர்டு டிரேட் மார்க்

ஸ்டேட் பாங்கும் அதன் துணைபங்குகளும், இந்தியாவெங்கும் பரவியுள்ள தங்கள 2100 கிளைகள் மூலம் தற்போது தங்கள் வாடிக்கையாளர்களுக்குக் கூடுதலான இரு வசதிகளை வழங்குகின்றன. அவையாவன : ''விசேஷ செக் மாற்றத் திட்டம்'' மற்றும் ''டெல்லர் திட்டம்''. இவற்றைச் சேர்த்தால் தற்போது, வாடிக்கையாளர்களுக்குத் திருப்தி கொணர எல்லா வகையிலும் ஓயாது உழைத்து வரும் ஸ்டேட் பாங்கின் புதிய சேவைகள் ஐந்து.

விசேஷ செக் மாற்றத் திட்டம்

செக் ஒன்றுக்கு ரூ. 2500 வரை, ஸ்டேட் பாங்கின் அல்லது அதன் துணைபகங்களின் எந்த கிளை மீதும் வரையப்படும் தனிநபர் செக்குகளை, கட்டணமின்றியே பாங்கின் எக் கணக்கிலும் வரவாக ஏற்கப்படும்.

டெல்லர் திட்டம்

தேர்ந்தெடுக்கபபட்ட சில நிலையங்களிலே தற்போது நடத்திப் பார்க்கப்படும் இத் திட்டத்தின் கீழ், டெல்லர் கவுன்ட்டர்களிலே ரூ. 1000 வரை பணச் செலுத்தல், டெபாசிட்டு அலுவல்கள் சொற்ப நேரத்திலே முடித்துக் கொடுக்கப்படுகின்றன. படிப்படியாக இத் திட்டம் அதிகக் கிளைகளுக்கும் பரப்பப்படுகின்றன.

நிதி மாற்றல் திட்டம்

எமது நிதி மாற்றல் திடடத்தின் கீழ், பாஙகின் எந்த அலுவகத்திலிருந்தும் நாள் ஒன்றுக்கு ரூ. 2500 வரை உங்கள் கணக்குக்கு மாற்றிக்கொள்ள முடியும். சொந்தக் கணக்குகள் யாவுமே இத் திடடத்தில் உள்ளடஙகும். நீங்கள் நேரில் பாங்குக்கு வரவேண்டுமென்பதில்லை... உங்கள் பிரதிநிதியே வந்து செலுத்தலாம்.

கர்ட்டஸி (கௌரவ)க் கார்டுகள்

அங்கீகரிக்கப்பட்ட வாடிக்கையாளர்களுககு கர்ட்டஸி கார்டுகள் வழங்கப்படுகின்றன இக் கார்டுகளைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஸ்டேட் பாங்கின் அல்லது அதன் துணைபகங்களின் எக் கிளையிலும், எந்த ஒரு நாளிலும் குறிப்பிட்ட ஒரு தொகைவரை பெற்றுக்கொள்ளலாம்.

பிரயாணிச் செக்குகள் கமிஷன் இன்றி வெளியிடபபடுபவை.

ரூ. 50 மற்றும் ரூ. 100 ஆகிய இனங்களிலே ஸ்டேட் பாஙக் பிரயாணிச் செக்குகள் வெளி யிடப்படுகின்றன. ஸ்டேட் பாங்கின் அல்லது அதன் துணைபகங்களின் எக் கிளையிலும் சரி, அல்லது விமான நிலையங்கள், ஒட்டல்கள், கடைகள் ஆகியவற்றிலுள்ள ரொக்கமாற்று ஏஜெண்டுகளிடம் அவற்றை ரொக்கமாக்கிக் கொள்ளலாம்.

ஸ்டேட் பாங்கின்

விரிவு படுத்திய ஐந்து கரப் பணிகள்



ஒவ்வொன்றும் ஒரு குறிப்பிட்ட
பிரசினையைத் தீர்க்க உருப்பெற்றது.
உங்களுக்கே வாய்க்கலாம்!

சேவை புரிவதற்கே
ஸ்டேட் பாங்க்

LPE Aiyara S. 265 TM



நிறுத்து! இனியும் என்னால் பொறுக்க முடியாது!
மட்டற்ற மகிழ்ச்சி..
ஹார்லிக்ஸ் அருந்தியபின்!
வீட்டிலும், வேறெங்கும் தொல்லைக்குக் காரணம் களைப்புதான். இன்னும் அதிக சக்தி இருந்தால் எவ்வளவு ஆனந்தமாக இருக்கலாம்! அதிக சக்திக்கு டாக்டர்கள் சிபாரிசு செய்வது ஹார்லிக்ஸ்! நீங்கள், செலவழிந்த சக்தியை மீண்டும் பெற்று, உறுதியும், தெம்பும் அடைந்து, எதையும் தாங்கும் திறனைப்பெற அது உதவும். மிகவும் விசேஷமானதொரு தயாரிப்புமுறையின் விளைவாக, சுலபமாக, விரைவில் ஜீரணமாகும் இயற்கை உணவுப் பொருள்களிலிருந்து தயாரிக்கப்படுகிறது ஹார்லிக்ஸ்.
Horlicks
ஹார்லிக்ஸ்
அதிக சக்தியை அளிக்கிறது!

கல்கி

நினைவுத்திரையில்.....

கடையில் பல புத்தகங்கள் உள்ளன. ஆகையால் நேற்று ஒரு புத்தகம் வாங்கினேன் என்று சொல்வதில் அர்த்தம் இருக்கிறது. ஆனால் இன்று காலையில் ஆற்றங்கரைக்குப் போனேன். கிழக்கே ஒரு சூரியனைக் கண்டேன் என்பார்களா? சூரியன் ஒன்றே ஒன்று தான் ஆகையால் ஒரு சூரியன் என்று சொல்வதில்லை. இது போலவே ஒரு சாதகன் தத்துவ விசாரணை செய்து கொண்டிருக்கும் வரையில் உலகில் கடவுள், ஜீவன் என்று இரண்டு பொருள் இல்லை இரண்டும் ஒன்று தான் என்று சொல்லி வருகிறேன். விசாரணை முடிந்து ஆத்மானுபவம் ஏற்படும் போது அந்த ஒன்றும் மறைந்து விடுகிறது. முதலில் சாதகனுக்கு இரண்டு என்பது இல்லையாகிறது. பிறகு ஒன்றும் இல்லையாகி விடுகிறது - ரா. கி.


"திருவாரூர்த் திருவிழா"

கல்கி மே 1, 1949

பொருளடக்கம்

பிலவங்க, ஆடி 7 ✲ ஜூலை 23

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.


ஏற்றுமதிக்குத் தயார்?
அ.இ.கா.க
தீர்மானங்கள்
தீர்மானங்கள்
தீர்மானங்கள்
தீர்மானங்கள்
தீர்மானங்கள்
தீர்மானங்கள்
தீர்மானங்கள்
தீர்மானங்கள்
தீர்மானங்கள்
தீர்மானங்கள்
மலிவு விலையில்
குப்பைக்
காகிதம்



தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

மலர் 26 □ இதழ் 51

வாக்கைக் காப்பாற்றுவோம்!

முன்னாள் மன்னர்களுக்கு அளிக்கப்படும் ராஜ மானியப் பென்ஷனை நிறுத்திவிட வேண்டுமென காங்கிரஸ் விரும்புகிறது. சென்ற தேர்தலில் காங்கிரஸுக்கு ஏற்பட்ட பல தோல்விகளுக்குப் பிறகு முன்னாள் சமஸ்தானாதிபதிகள் மீது பலமான கோபம் ஏற்பட்டிருக்கிறது. ராஜ மானியத்தை நிறுத்தி விட்டால் உண்மையில் நஷ்டமடைபவர்கள் காங்கிரஸ் கட்சியில் உள்ள பெருவாரியான மன்னர்கள் தான் என்பதை மறந்து விட்டது அக்கட்சி. எதிர்க் கட்சிகளில் ஒருசில மன்னர்கள் இருப்பதைப் பார்த்து விட்டு, தனது கட்சியில் பெருவாரியாக உள்ள மன்னர்களுக்கு மானியத்தை நிறுத்தினால் அவர்கள் காங்கிரஸிலேயே இருப்பார்களா? ஏற்கனவே பலவீனமடைந்துள்ள காங்கிரஸை இன்னும் பலவீனப்படுத்தும்படியான யோசனையை காங்கிரஸ் பின்பற்றுவது அக்கட்சியின் அறிவுக் குறைவையே காட்டுகிறது.

காங்கிரஸ் கட்சி பலப்பட வேண்டும் என்ற அக்கறை நமக்குத் தோன்றி இதை எழுதவில்லை. பிறரைக் கெடுப்பதற்காக காங்கிரஸ் தன் தலையில் மண்ணைத் தூவிக் கொள்ளவும் தயாராக இருப்பதைக் குறிப்பிடவே விரும்புகிறோம்.

ஆனால் இதனினும் முக்கியமான அம்சம் இந்த யோசனைக்குப் பின் தொக்கி நிற்கும் அநீதி ஆகும்.

பிரிட்டிஷார் இந்நாட்டைப் பிரித்து 1947ம் ஆண்டில் நம்மிடம் ஒப்படைத்து விட்டுப் போனபோது சுமார் 600 சுதேச சமஸ்தானாதிபதிகளுக்கு இந்தியாவுடன் சேரவோ, பாகிஸ்தானுடன் சேரவோ, சுயேச்சையாக இருக்கவோ பூரண உரிமை அளித்து விட்டுச் சென்றனர். அப்போது அத்தனை சுதேச மன்னர்களும் தேசப் பற்றுடன் சர்தார் பட்டேல் அவர்களின் வாக்குக்குக் கட்டுப்பட்டுத் தங்கள் ஆட்சி உரிமைகள் யாவற்றையும் துறந்து, ராஜமானியமாக சிறு தொகைகளை ஒப்புக் கொண்டு தங்கள் சமஸ்தானங்களை இந்திய யூனியனில் இணைத்தனர். பட்டேல் உறுதி கூறிய இந்த ராஜ மானியத்தை அரசியல் சாஸனமும் ஊர்ஜிதமாக்கியுள்ளது. இப்பொழுது அந்த மானியத்தை ரத்துச் செய்வது பாரத மக்களின் மதிப்புக்குரிய காலஞ்சென்ற சர்தார் பட்டேல் அவர்களின் வாக்கைக் காற்றில் பறக்க விட்டதாகும். தந்தை கடன் பட்டால் அவனுக்குப் பின் தனயன் தீர்க்கவேண்டும் என்று சட்டமும் நியாயமும் தர்மமும் பேசப்படும் பாரத நாட்டில் இது முறையாகுமா? இந்தியாவின் முதல் உள்துறை மந்திரியும், அப்பதவி வகித்தவர்களிடையே தலைசிறந்தவருமான பட்டேல் அவர்களின் வாக்குத்தத்தத்துக்குக் கரி பூசி நையாண்டி செய்கிறார் இன்றைய உள்துறை மந்திரி ஸ்ரீ சவான். கொள்கைக் கோஷங்களுக்காக உடன்படிக்கைகளை ஓர் அரசாங்கம் கைவிடுவது அவமானகரமாகும். நாகரிகமாக ஆட்சி நடத்துவதாக நினைப்பவர்கள், பழைய உடன்படிக்கைகளை மதித்துத் தான் ஆகவேண்டும்.

❖ ❖ ❖

ராஜமானியம் பெறும் மாஜி மன்னர்கள்தான் எத்தனை பேர்? 600 பேரில் 280 பேர்தான் பெறுகிறார்கள்! இதனால் இந்திய அரசாங்கத்துக்கு நான்கு கோடி ரூபாய்தான் செலவாகிறது! ஆயிரம் கோடி ரூபாயில் வரவு செலவு பட்ஜெட் தயாரிக்கும் இந்திய அரசாங்கத்துக்கு இந்த நான்கு கோடி ஒரு பெருந் தொகையா? பல உருப்படியற்ற திட்டங்களுக்குக் கோடிக் கணக்கில் செலவு செய்யும் இந்திய அரசாங்கம், வாய்மையை மீறி இந்த நான்கு கோடியை மிச்சப்படுத்தப் பார்ப்பது விசித்திரம். சோஷலிஸ மோகம் காரணமாக, கொடுத்த

வாக்கை மீறும் அநீதியைக் காங்கிரஸோ, மற்ற பல எதிர்க் கட்சிகளோ உணர்ந்திருக்கவில்லை. முன்னாள் மன்னர்களோடு மட்டுமின்றி அவர்களைச் சார்ந்து நிற்கும் ஆயிரம் ஆயிரம் உறவினர்களும் பணியாட்களும் சோஷலிஸம் என்ற பெயரில் எடுக்கப்படும் இந்த நடவடிக்கையால் நஷ்டமும் மனக் கசப்பும் உறுவார்கள் என்பதை இவர்கள் உணர வேண்டும்.

ஒரிஸ்ஸா முதன்மந்திரி ஸ்ரீ ஆர். என். சிங்தேவ் சில முன்னாள் மன்னர்களின் உறவினர்களுக்கு மாதம் 27 பைசா வழங்கப்படுவதாகக் கூறியிருக்கிறார். இந்த 27 பைசாவில் எப்படி வாழ முடியும்! இருப்பினும் இத்தொகை நிறுத்தப்பட்டால் இந்திய அரசாங்கம் சொன்ன வாக்கை மீறியது என்ற பொல்லாப்பும் கெட்ட பெயரும் ஏற்படும்! தனிமனிதனே சொன்ன வாக்கைக் காப்பாற்றியாக வேண்டும் என்ற பண்பாட்டைப் பேணிப் பாதுகாத்து வரும் தேசம் நம் தேசம். கைகேயிக்குத் தசரதன் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடி அறந்து காடு சென்ற ராமன் பிறந்து ஆண்ட தேசம். இராமாயணத்தை மறந்துவிடலாகாது. ராமன் காட்டுக்கு ஏன் போனான் என்பதை சிந்திக்க வேண்டும். மனைவியையும் விற்று வாக்கைக் காப்பாற்றிய அரிச்சந்திரன் பிறந்த நாடு இது. ராம சரிதத்தையும், அரிச்சந்திரன் கதையையும் போற்றி வந்த காந்திமகான் வளர்த்த காங்கிரஸ் இன்று வாக்கு மீறுவதற்குச் சிறிதும் தயங்காததிலிருந்து காந்தீயத்தின் அணுவளவு அடையாளமும் மறைந்துவிட்டது எனலாம்.

ஓர் அரசாங்கம் முந்தைய அரசாங்கம் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றாவிட்டால் ஜனங்களுக்கு எப்படி அ[illegible]னிடம் நம்பிக்கை இருக்கும்? பத்தாவது ஆண்டில் திருப்பித் தருவதாக அரசாங்கம் ஒரு கடன் எழுப்புகிறது. இதை நம்பக்கூட இனி மக்கள் தயங்கலாம். இன்றுள்ள காங்கிரஸ் அரசாங்கம், எதிர்காலத்தில் ஆட்சிக்கு வரக்கூடிய எதிர்க்கட்சி அரசாங்கங்களையும் பிணைத்துப் பல திட்டங்கள் மேற்கொள்கிறது. பின்னால் வரும் எதிர்க்கட்சி சர்க்கார்களும், முந்தைய காங்கிரஸ் அரசாங்கம் மக்களுக்கு அளித்துள்ள நிதி சம்பந்தப்பட்ட வாக்குறுதிகளை எவ்வளவு பிடிக்காவிட்டாலும் நிறைவேற்றி வருகின்றன. இதுதான் ஜனநாயகத்தில் உள்ள உயர்தரமான அம்சம். மக்களுக்கு இதில் நம்பிக்கையைத் தகர்த்து விட்டால், அப்புறம் நாட்டில் எதிலுமே உறுதிப்பாடோ நாணயமோ இல்லாது போய்விடும்.

பெல்ஜியத்தை ஒரு நடுநிலைமை நாடாகக் காப்பதென ஜெர்மனி, பிரிட்டன், பிரான்ஸ் முதலிய பல நாடுகள் உடன்படிக்கை செய்து கொண்டிருந்த போதிலும், முப்பதாண்டுகளுக்குமுன் பெல்ஜியத்தின் மீது ஜெர்மனி படையெடுத்தது. உடன்படிக்கையை மீறும் அக்கிரமத்தை உலக நாடுகள் எடுத்துக் காட்டியபோது ஜெர்மனி, 'உடன்படிக்கை என்பது ஒரு காகிதத் துண்டுதானே?' என்று கேலி செய்துவிட்டு துராக்கிரகத்தைத் தொடர்ந்தது. அதற்காக ஜெர்மனி மன்னர் கெய்ஸர் வில்ஹெல்மை இன்றளவும் சரித்திரம் தூற்றி வருகிறது. இந்த இழிநிலைக்கு இந்தியாவையும் ஆளாக்குவது தகாது.

காங்கிரஸ் நடந்து கொள்ளும் முறை நல்ல சம்பிரதாயத்தை நிலைநாட்டுவதாகாது என்று எச்சரிக்கை செய்ய விரும்புகிறோம்.

இதை மன்னர்களுக்கும்பணக்காரர்களுக்கும் பரிந்து பேசுவதாக யாராவது எடுத்துக் கொண்டால் அது தவறு. நமது அக்கறையெல்லாம் நல்ல ஜனநாயக சம்பிரதாயம் வளர வேண்டும்; சத்தியத்தை எக்காலத்திலும் காக்க வேண்டும் என்பதுதான்.

காமகோடியின் கருணைமொழி



நமக்கு ஜன்மி பிறந்தால் அதற்கு முன் நாம் செய்த காரியங்களுக்கு விரோதமாக நடக்க ஆரம்பிக்கிறோம். முன்பு நாம் ஒரு புத்தகம் எழுதியிருந்தால் அதை இப்போது ஜன்மியில் நாமே கிழித்துப் போடுகிறோம். எழுதியவனும் கிழித்தவனும் ஒரே பேர்வழிதான். இதே போல் வேறு ஒருவன் கிழித்தான் என்றால் அவனும் நாமேதான். ஒருவன் நம்மை அடித்தால் அந்நியன் அடிப்பதாக நினைப்பது தப்பு. நாமே நம்மை அடித்துக் கொள்கிறோம் என்பதுதான் சத்தியம். ஜன்மியில்லாத நிலையும் ஜன்மியும் முன் பின்னாக உள்ளன. அதனால் முதலில் செய்ததைப் பிறகு நாமே எதிர்க்கிறோம். ஆனால் மற்றவன் என்று சொல்லப்படுபவனும் நாமும் வெவ்வேறு தேகங்களில் இருப்பதால் எதிர்ப்புக் காரியங்கள் முன்பின்னாக இல்லாமல் ஒரே சமயத்தில் நடக்க முடிகிறது. அவ்வளவுதான் வித்தியாசம்.

உலகம் முழுவதையும் நாமாகப் பார்க்கிற அநுபவம் வரவேண்டும். இப்பொழுது கை நாமாகத் தோன்றுகிறது. கால் நாமாகத் தோன்றுகிறது. உடம்பு நாமாகத் தோன்றுகிறது. அப்படிப் போல எல்லாருமே, எல்லாமே நாமாகத் தோன்ற வேண்டும்.

ராஜாஜியின் கருத்துக்கள்

சென்னைச் சேரிகளில் ஏற்பட்ட தீ விபத்துக்குக் காரணமான சதிகாரர்கள் யார் என்று கண்டு பிடிப்பதைவிட, தீ வைப்புக்குக் கையாளப்பட்ட முறை என்ன என்பதிலேயே அதிக கவனம் செலுத்தப்படுகிறது. போலீசும் மக்களும் இவ்விஷயத்தில் கவனம் செலுத்தியதற்குப் பிற்பாடு ஏற்பட்ட தீ விபத்துக்களின் போக்கைக் கொண்டு முந்தைய விபத்துக்களின் காரணத்தைக் கண்டு பிடிக்க முடியாது. பிந்தைய விபத்துக்களின் அடிப்படையும் நோக்கமும் முற்றிலும் மாறுபட்டவை. சதிகாரர்கள் என்ற சந்தேகத்துக்கு ஆளானவர்கள், கவனத்தைத் திருப்புவதற்காக இத் தீவைப்புக்களில் இறங்கியிருக்கலாம். அல்லது தங்கள்குடிசைக்குச் சர்க்காரிடமிருந்து அஸ்பெஸ்டாஸ் கூரை பெறுவதற்காகக்கூட எரித்திருக்கலாம்.

அரசியல் துறையில் அடைந்த கோபம் மட்டும் தீ வைப்புக்குக் காரணமாயிராது என எண்ணுகிறேன். லஞ்சம் தந்து, அதற்குப் பிரதியாக ஒரு வாக்குறுதியைப் பெற்றுவிட்டு, பிறகு இவ்வாக்குறுதி மீறப்பட்டால் அப்போது லஞ்சம் தந்தவருக்கு ஏற்படக்கூடிய ஆத்திரமும் அரசியல் கோபத்தோடு சேர்ந்திருக்கலாம்.

* * *

சேரிகளில் வாழ்பவர்கள் நகர வாழ்வைக் காப்பதற்கு இன்றியமையாத மக்களாவர். கிராமப்புறங்களிலிருந்து வேலை வேண்டி நகரத்துக்கு வந்தவர்கள் இவர்களில் உள்ளனர். இவர்களில் கணிசமான பகுதியினர் பல விதமான தொழில்களில் ஈடுபட்டு, நகர வாழ்க்கைக்கு உதவுபவர்களாவர். இவர்கள் ஒரே இடத்தில் நிரந்தரமாக வசிக்காமல் இடம் பெயர்ந்து கொண்டே இருப்பதால் இவர்களுக்குத் தக்க ஜாகை வசதி செய்து தருவது சிக்கலாயிருக்கிறது. இன்று சேரியில் உள்ளவர்களின் இடத்தை நாளைக்குப் புதிதாக ஓர் இளம் ஜனத் தொகை பிடித்துக் கொண்டு, இதே வேலைகளைச் செய்ய முன்வருகிறது. வயதானவர்கள் தங்கள் பூர்வீகக் கிராமத்துக்கே சென்று விடுகிறார்கள். வயதில் சிறியவர்களே தங்குகிறார்கள். புதிதாகவும் இளைஞர்கள் வருகிறார்கள்.

எனவே, குறிப்பிட்ட ஒரு காலத்தில் ஒரு சேரிக் குடிசைகளில் வசிப்பவர்களது சொந்த உடைமையாக அவ்வீடுகளைச்செய்யமுடியாது. செய்ய முடிந்தாலும்கூட, இதனால் நகரம் விஸ்தரிக்கப்பட்டுப் புதுச் சேரிகள் தோன்றுவதும், அவற்றில் புதிதாக ஒரு மக்கட் தொகை வந்து குடியேறி இன்றைய சேரிவாசிகள் செய்கிற வேலைகளைத் தாங்களும் செய்ய முன்வருவதுமாக முடியும். சேரிவாழ் மக்களின் இடவசதிக்காகத் திட்டமிடும் போது இந்தச் சிக்கலைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

இடம் பெயர்ந்து கொண்டே யிருக்கும் மக்களுக்காகத் திட்டமிடும் ஜாகை நல்லதாகவும் இருக்க வேண்டும்; அதே போதில் அவர்களது சிறிய வருமானத்துக்குக் கட்டுப்படியாகுமளவுக்குக் குறைந்த செலவில் அமைக்கப்பட வேண்டும். அரசாங்கம், கார்ப்பொரேஷன், தொழிலதிபர்கள், வீட்டு வேலைக்கு ஆள் வைத்துக் கொண்டிருப்பவர்கள் அனைவரும் பிரதிநிதித்துவம் வகிக்கும் ஒரு போர்டு நிறுவப்பட்டு, இவ்வீடுகள் அதன் உடைமையாக்கப்பட வேண்டும்; இப்போது உத்தேசிப்பதைவிடப் பல மடங்கு அதிக முதலீடு இத்திட்டத்துக்குத் தேவைப்படும். இக்குடிசைகள் அவற்றில் வாழ்வோரின் அலுவலகத்துக்கு அருகில் அமைய வேண்டும்; போக்கு வரத்து வசதி உள்ள இடத்தில் இருக்க வேண்டும். நல்ல வெளிச்சம், குடிநீர், குளிக்கும் வசதி, கழிகால் வசதி இவையும், போலீஸ் பாதுகாப்பும் தரப்பட வேண்டும். இந்தியாவின் எல்லா நகரங்களிலுமே இது போல் செய்ய வேண்டும்.

குடிசைகளில் வாழ்கிற மக்களின் வாழ்க்கைக்கு ஏற்ப அவை அமைக்கப்பட வேண்டும். தாய்மார்களின் கவனிப்பைச் சார்ந்தே சேரிகளில் இளம் பரம்பரை வளருகிறது. கோழிப் பண்ணை நடத்தவும், ஓரளவுக்குக் கிராம வாழ்க்கைப் பண்புகளைக் கடைப்பிடிக்கவும் வசதி செய்து தரப்பட வேண்டும். இவர்களது தேவைக்கு அடுக்கடுக்காக மாடி வீடு கட்டித் தருவது பயன்தராது. நகரத்தின் பல பகுதிகளிலும் விஸ்தாரமான திறந்தவெளிகளில் இவர்களுக்கு இருக்கை ஏற்படுத்தித் தர வேண்டும். இவ்வீடுகள் முன் கூறியபடி பிரதிநிதித்துவம் கொண்ட பொதுச் சொத்தாக இருக்க வேண்டும். இன்று இக்குடிசைகளில் வசிப்பவர்கள் அவற்றைத் தங்கள் உடைமையாக்கிக் கொள்வதற்கு இடம் தரலாகாது. குடியிருப்பவர்களுக்கு உரிய நியாயமான உரிமைகளை மட்டுமே அவர்கள் பெற்று, புதிதாக நகருக்கு வரும் தொழிலாளிகளுக்காக இடத்தைக் காலி செய்து தருபவர்களாக இருக்க வேண்டும்.

* * *

சட்டத்தையும் ஒழுங்கையும் காக்க வேண்டும் என்பது நாகரிக வாழ்வின் ஓர் அடிப்படைத் தேவை. தொழில், விவசாயம் ஆகியவற்றின் மூலம் உற்பத்தி, விநியோகம் ஆகியவற்றில் ஈடுபட்டு வருகிறவர்கள் விஷயத்தில் ஒழுங்கும் சட்டத்துக்கு அடங்கி நடத்தலும் மிக மிக முக்கியமானவை. வன்முறைகளை மேற்கொள்ளுகிறவர்களின் நோக்கம் எதுவாயினும், அதனால் உற்பத்தியும் விநியோகமும் சிதைக்கப்படும். தொழிலாளர் செய்யும் கெராவுக்கு இதுவே ஆட்சேபனை. தேகபலத்தைக் காட்டிச் சூழ்ந்து கொள்வதையும் பயமுறுத்துவதையும் ஆட்சேபிப்பது, சட்டபூர்வமாகத் தொழிற்சங்கங்களுக்கு அளிக்கப்பட்ட கூட்டு பேர உரிமையை ஆட்சேபிப்பதாகாது. கெராக்கள் நீடித்தால் யாருக்குமே தொழில்கள் நடத்த அக்கறையிராது. விலை

வாக, வேலையின்மைக் கஷ்டம் அதிகமாகும். சட்டத்தைத் தொய்யச் செய்து, பௌதிக பலம் என்கிற குறுக்கு வழியில் செல்வதால் முடிவில் தொழிலாளிகளே அதிக நஷ்டத்துக்கு ஆளாவார்கள். ஆண்—பெண் அடங்கலாக மக்கள் அனைவரும் தங்களில் ஒருவரிடம் மற்றவர் பயந்து வாழ்கிற சமூகம் நாகரிக சமூகமாகாது. சட்டத்துக்கும் ஆண்டவனுக்கும் மட்டுமே பயந்து வாழும் சமூகம்தான் நாகரிகமானது.

ஃஃஃ

புதிதாகக் கல்லூரியில் சேர்ந்திருப்பவர்களிடம் பழைய மாணவர்கள் 'ராகிங்' என்ற பெயரில் செய்கிற துன்புறுத்தல் விளையாட்டுக்கள் நம் தேசப் பண்புக்கு ஒவ்வாதவை. மதுரையில் மாணவிகளிடம் மாணவர்கள் இவ்விதம் விளையாடியதும் கோவையில் இதன் விளைவாக ஒரு பொறி இயல் மாணவன் தற்கொலை செய்துகொண்டிருப்பதாகச் சொல்லப்படுவதும், இவ்விளையாட்டு எத்தகைய நெறிகெட்ட நடவடிக்கையாகிவிட்டது என்பதைக் காட்டுகிறது. இதிலிருந்தாவது இந்த வெட்கக்கேடான விளையாட்டு நம் நாட்டுக்கு உகந்ததல்ல என்ற உணர்ச்சி ஏற்பட்டு இது கைவிடப்படும் என்று எதிர்பார்க்கலாம். 'ராகிங்'கை நிறுத்தி வைப்பதற்குத் தொடக்கமாக, இச்செயலில் ஈடுபட்டவர்களுக்குக் கடுமையான தண்டனை தருவதும் ஒருகால் அவசியமாயிருக்கலாம்.

ஃஃஃ

இந்திய சர்க்கார் லட்சியம் செய்வது யாருடைய கருத்தை? இந்திய மக்களின் கருத்தையா? மற்ற நாகரிக நாடுகளின் கருத்தையா? அல்லது ஜனநாயக ஆட்சி முறையில் நம்பிக்கையற்ற சர்வாதிகாரிகளின் கருத்தையா?

மிக முக்கியமான பிரச்னைகளில் எல்லாம் இந்திய மக்களின் கருத்துக்கும், சர்க்கார் பிடிவாதமாகப் பின்பற்றும் கொள்கைக்குமிடையே பெருத்த இடைவெளி உள்ளது. இந்தியப் பொருளாதாரம், வெளி விவகாரம் இரண்டிலுமே மக்களுக்கும் சர்க்காருக்கும் உள்ள இடைவெளி விசாலமாகி வருகிறது.

நீதிக்கும், இந்திய மக்களின் கருத்துக்கும் இசைவாக, மேற்காசிய விவகாரத்தில் நமது சர்க்காரின் போக்கு நிச்சயம் மாற வேண்டும். 'இந்தியாவின் கருத்து' என்ற பெயரில் சர்க்கார் வெளியிடும் கருத்து பித்துக்கொள்ளித்தனமானது. காங்கிரஸ் தலைவர்களிடையே அபிப்பிராய பேதம் உண்டானால் கட்சியின் ஆதிபத்தியத்துக்கு ஊறு நேர்ந்துவிடுமே என்ற பயத்தில்தான் அ. இ. கா. க. வில் அனைவரும் பிரதமர் சொல்லுக்கு ஏகோபித்து அங்கீகாரம் தந்திருக்கிறார்கள். இது இந்திய மக்களின் பொதுக் கருத்தல்ல. மக்கள் கருத்து சர்க்காரின் போக்குக்கு நேர் எதிரிடையானது என்பது சர்வ நிச்சயம். அதற்கேற்ப அரசாங்கம் தன் கொள்கையை மாற்றிக் கொள்ள வேண்டும்; மாற்றிக் கொள்ளவும் முடியும். இது எளிதில் செய்துவிடக் கூடிய ஒன்றே.

இதேபோல் இன்னொன்று ஷேக் அப்துல்லா விவகாரம். காவலில் வைக்கப்பட்டுள்ள ஷேக் அப்துல்லா அவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்று 125 பார்லிமெண்ட் அங்கத்தினர் (இவர்களில் காங்கிரஸ்காரர்களும் உள்ளனர்) கையெழுத்திட்டு ஒரு கோரிக்கை விடுத்துள்ளனர். கடைசியாக அவர் ஒரு யாத்திரை சென்று திரும்புகையில், விமான நிலையத்திலிருந்து வெளிவருமுன்பே அவரைக் கைது செய்தனர். அவர் அன்றைய பிரதமருக்கு எழுதிய கடிதம் சில நாட்களுக்கு முன்பு வரையில் வெளிப்படுத்தப் பெறவில்லை. நம் சர்க்காரைப் பற்றி நாகரிக நாடுகள் என்ன நினைக்கும்? ஷேக் அவர்களைக் காவலிலேயே நீடித்து வைப்பதற்குச் சாதாரணத் தடுப்புக் காவல் சட்டம் போதாது. தலைமை நீதிபீடம் இந்தக் காவலை உறுதிப்படுத்தாது என்பது சர்க்காருக்குத் தெரியும். இதனால் நெருக்கடி காலத்தையே விஸ்தரித்து விட்டார்கள்.

காச்மீரப் பிரச்னையைத் தீர்க்க வேண்டுமாயின், சுதந்திரம் பெற்ற ஷேக் அப்துல்லாவின் உதவியுடன்தான் அது சுமுகமாகவும் விரைவாகவும் கைகூடும்.

காச்மீரப் பிரச்னையில் ஷேக் அவர்கள் இந்தியாவுக்குச் சாதகமாகக் கருத்து வெளியிடவில்லை என்பதாகச் சொல்லியே அவரை வருஷக்கணக்காகக் காவலில் வைத்துள்ளனர். ஒரு பிரஜை சுதந்திரமாக இருக்க விரும்பினால், அவன் எந்த ஒரு பிரச்னையிலும் ஒரு குறிப்பிட்ட அபிப்பிராயத்தை வெளியிட்டுத்தான் ஆகவேண்டும் என்பது பொருந்தாது. ஒரு கருத்தை வெளிப்படுத்தவில்லை என்பது மட்டும் கைது செய்வதற்குப் போதிய மூகாந்திரமாகாது. ஷேக் அவர்கள் வெளிப்படத் தம் கருத்தைச் சொன்னால்தான் அவரை விடுவிக்கலாம் என்று சில பிரமுகர்கள் கூறுகின்றனர். இது நல்லாட்சியில் தரப்படும் சுதந்திரங்களை மறுப்பதாகும். ஒருவருடைய சொந்தக் கருத்து குற்றச் செயலாக உருவாகாத வரையில், எவரும் தம் அந்தரங்கத்தில் தமக்கென்று சில கருத்துக்களைக் கொண்டிருக்க அநுமதிப்பதே ஜனநாயகம். பலதரப்பட்ட கருத்துக்கள் கொண்ட மக்களுடன் தீரமாகச் செயலாற்றுவதே ஜனநாயகம். பிரஜையொருவன் சர்க்காரில் ஒரு பதவியை ஏற்கும் போதுதான் அவனிடம் சர்க்கார் விசுவாசப் பிரமாணம் கேட்க உரிமை உண்டு. வெறுமே சுதந்திரமாக வாழ்வதற்கே பூரணமான கொள்கை விசுவாசம் வேண்டும் என்பது தகாது.

ஃஃஃ

நக்ஸல்பாரி பிரச்னை போலீஸின் ஒழுங்குப் பிரச்னை மட்டுமல்ல. அரசியல் சாஸனத்தையே குழிபறிக்கும் விவகாரம் இது. மத்திய சர்க்கார் இன்று செலுத்துவதைவிட மிகத் தீவிரமான கவனம் செலுத்த வேண்டிய பிரச்னை இது.


சோ
எழுதும் நகைச்சுவை நவீனம்
யாரோ இவர் யாரோ?
கல்கி
ஆகஸ்டு 6
ஆண்டு மலரில் ஆரம்பமாகிறது

இப்போது நான் சொல்லப்போவது ஒரு கழுதையின் கதை.

அதுவும் ஒரு நொண்டிக் கழுதை!

கதை என்னவோ கழுதையைப் பற்றியது தான் என்றாலும் அதன் பின்னணியில் உள்ள மனிதர்களும் இதில் பங்கு கொள்ளுகிறார்கள்.

வேலப்பனுக்கு இருந்த சொத்தெல்லாம் அந்தக் கழுதை ஒன்றுதான். தள்ளாத வயதில் அவனும், அவன் மனைவி வீரம்மாளும் சலவைத் தொழில் செய்து பிழைத்து வந்தார்கள்.

வைகையிலிருந்து பாய்ந்து வரும் முல்லைக் கால்வாயின் கரையில் இருந்த சுடுகாட்டுப் புறம்போக்கில் குடிசை போட்டு அதில் குடியிருந்தனர்.

காலையில் எழுந்ததும் அழுக்குப் பொதிகளை அந்தக் கழுதை மேல் ஏற்றி ஆற்றுத் துறைக்குப் போய், 'வெளு வெளு'வென்று வெளுத்துக் கட்டி மாலையில் அந்தக் கழுதை மீதே பொதிகளை ஏற்றிக் கொண்டு வீடு திரும்புவார்கள். அவர்கள் வேலை செய்ததெல்லாம் நான்கு வீடுகளுக்குத்தான். அந்த நான்கு வீட்டாரும் வேலப்பனுக்குப் பணம் எதுவும் கொடுப்பதில்லை. வருடத்துக்குக் கால் மூட்டை, அரை மூட்டை என்று தானியமாகக் கொடுப்பார்கள். அதைக் குடிசைக்குள் ஒரு மூலையில் கொட்டி வைத்திருப்பான். பெருச்சாளிகளும், எலிகளும் கொறித்தது போக மிஞ்சியது சாப்பாட்டுக்காகும்.

வேலப்பனைப் பற்றிச் சொல்ல வேண்டுமானால் இப்படிச் சொல்லலாம். கட்டை மேனி, கறுத்த நிறம், அரையில் நாலு முழ வேஷ்டி, தலையில் முண்டாசு, உதட்டை மறைக்கும் கருண்ட வெண்ணிற மீசை; சொக்குப் பிடித்த கண்கள்.

வீரம்மாளைப் பற்றிச் சொல்லத் தேவையில்லை. அவள் ஓர் அப்பாவி. ஆறும் தெரியாது, நூறும் தெரியாது.

வேலப்பனின் கழுதையைப் பற்றிச் சொல்ல வேண்டுமானால், அது ஒரு நொண்டிக் கழுதை; அவ்வளவுதான். இரவு முழுதும் ஊரெல்லாம் சுற்றிக் காகிதக் குப்பைகளை மேய்ந்துவிட்டுத் திரும்பி வந்து வேலப்ப



வின் குடிசைச் சுவரில் இதமாக நாலு தரம் உராய்ந்துவிட்டு முடங்கிக் கொள்ளும்.

வேலப்பனுக்கு ஒரு மகன் இருந்தான். தங்கவேலன் என்று பெயர். உள்ளூர் ஆரம்பப் பள்ளியில் ஐந்தாவதை முடித்ததும் 'தலைக்கு' ஏறி விட்டது.

''இந்த நீசத் தொழிலை எவன் செய்வான்? இதைச் செய்தால் என் படிப்பும் கௌரவமும் என்னாவது?'' என்று சொல்லிக்கொண்டு திரிந்தான்.

சிலகாலம் சினிமா, நாடகம் என்று சுற்றினான். அப்பனிடம் அடிக்கடி காசு கேட்டு நச்சரித்தான். சில சமயம் அப்பனை 'மிதிமிதி' என்று மிதித்தான். அப்புறம் ஒரு நாள் திடீரென்று யாரிடமும் சொல்லாமல் பட்டாளத்தில் போய்ச் சேர்ந்தான். போய் இரண்டொரு மாதங்களுக்குச் சிறிது பணமும் அனுப்பி வைத்தான். ஒரு நாள் 'சீனக்காரன் குண்டுக்கு இரையானான்' என்ற தந்தி வந்தது.

தங்கவேலன் போரில் மடிந்த சில வாரத்துக்கெல்லாம் வீரப்பனின் வீட்டைத் தேடி ஓர் அதிகாரி வந்தார். வேலப்பனிடம் குடைந்து குடைந்து கேள்வி கேட்டார். அவன் மூதாதையரிலிருந்து இன்றுவரையும் உள்ள விவரங்கள், அவன் தொழில், வருமானம் முதலிய விவரங்கள் கேட்டுத் துளைத்தெடுத்தார். அவனும் ஒன்றும் புரியாமல் ஏதோ பதில் சொன்னான்.

'ஜவான்களின் குடும்ப நிதி'யின் பேரால் அவனுக்கு ஏதோ 'பெரிய உதவி' வரும் என்றும், இனி அவன் கவலையில்லாமல் காலத்தை ஓட்டிவிடலாம் என்றும், அந்த ஊரில் உள்ள 'படித்தவர்கள்' ஆசை காட்டினர். ஒரு நாள் வீரம்மாளுக்கு ஏழரை ரூபாய்ப் புடவை ஒன்று வந்து சேர்ந்தது. அதன்பின் ஏதும் வந்ததாகத் தெரியவில்லை.


எப்படியோ தன் தொழிலை நம்பித் தன் மனைவியுடனும் அந்தக் கழுதையுடனும் காலத்தை ஓட்டிக் கொண்டிருந்தான் வேலப்பன். இந்த நிலையில்தான் தண்டபாணி அங்கு வந்து சேர்ந்தான்.

யார் இவன்?

இதே ஊரைச் சேர்ந்தவன்தான். மேலத் தெரு சொக்கலிங்கத்தின் ஒரே செல்வ புத்திரன். பிறந்தவுடன் அம்மாவை ஏப்பம் விட்டான். அடுத்த இரண்டாண்டுகளில் தகப்பனும் மறைந்தான். உள்ளூர்ப் பள்ளிக்கூடத்தில் படித்து முடித்துவிட்டு இருந்த

நொண்டிக் கழுதை

ஆத்தூரான்



வீட்டையும் தொலைத்து விட்டுப் பக்கத்து 'டவுனு'க்குப் போய்விட்டான். எப்போதாவது இங்கு வருவான். ஒருமுறை வந்த போது, ஏதோ 'பிஸினஸ்' செய்வதாகச் சொல்லிக் கொண்டான். மறுமுறை வந்த போது எதற்கோ 'ஏஜென்ஸி' எடுத்திருப்பதாகக் கூறினான். அவன் என்ன செய்கிறான், எதற்காக வருகிறான் என்று அந்த ஊரில் உள்ளவர்களில் யாருக்கும் தெரியாது.

இந்த முறையும் ஏதோ 'பிஸினஸு'க்காகத்தான் வந்திருக்கிறான் என்று நினைத்தார்கள்.

தண்டபாணி ஒரு மாதம் தங்கினான். தன் தொழிலையும் ஆரம்பித்தான். சலவைத் தொழிலாளர் குடும்பங்கள் அனைத்தையும் சந்தித்தான். தொழிலாளர்கள் அனைவரும் ஒன்றுபடவேண்டுமென்றும், எதிர்காலமே அவர்கள் கையில்தான் இருக்கிறது என்றும், அவர்களுக்குள்ளே சங்கம் ஒன்று அமைக்க வேண்டும் என்றும், அச்சங்கத்துக்குச் சர்க்காரிலிருந்து ஏராளமாகக் கடன் கிடைக்கும் என்றும், சோடா உப்பு, பொதி சுமக்கக் கழுதைகள், தேய்ப்புப் பெட்டிகள், மேஜைகள், நாற்காலிகள் இன்னும் என்னென்னவோ வாங்க இலகுவில் பணம் கிடைக்கும் என்றும் எடுத்து ஓதினான்.

அவன் கூறியதைக் கேட்ட சலவைத் தொழிலாளர் அனைவருக்கும் ஓர் ஆர்வம் கிளம்பியது. உடனடியாகச் சங்கத்தை ஆரம்பிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்கள்.

காரியங்கள் 'மளமள' வென நிறைவேறின. அந்த ஊரின் பெரிய புள்ளியான 'மாடி வீட்டுக்காரர்' தலைவர் ஆனார். தண்டபாணி காரியதரிசி ஆனான். சலவைத் தொழிலாளர்களிடம் பங்குத் தொகை என்று வசூலித்தார்கள். சங்கம் உருவாயிற்று. சங்கத்தின் உறுப்பினர் பட்டியலில் வேலப்பனின் பெயரும் சேர்த்துக் கொள்ளப்பட்டது. கடனுக்கு மனுப் போட்டனர். தலைக்கு இருநூறு ரூபாய் கடன் வழங்குமாறு மேலிடத்திலிருந்து உத்தரவு வந்தது. அதில் அதற்கு என்றும், 'இதற்கு' என்றும் பிடித்தது போக ஆளுக்கு இவ்வளவு என்று ஏதோ கொடுக்கப்பட்டது. வேலப்பன் கையிலும் இருபது ரூபாய் வந்து விழுந்தது !

தண்டபாணியின் உடலில் 'டர்லினு'ம் 'ட்வின் டவ்சர் பாண்ட்'டும் ஏறின. தோல் பை ஒன்றை இடது கையில் இடுக்கிக் கொண்டும், வலது கையில் சிகரெட்டும் முகத்தில் கூலிங் கிளாசுமாக அந்த ஊரில் வட்டமடித்தான். அடுத்தபடியாக ஒரு 'தோபிகானா' கட்டப் போவதாகவும் சங்கக் கட்டடம் எழுப்பவும், சலவையாளர் துவைக்கவும் துணிகளைக் காய வைக்கவும் பெரிய திட்டங்கள் உருவாகிக் கொண்டிருப்பதாகவும் கூறித் திரிந்தான். பிறகு ஒரு நாள் எங்கோ புறப்பட்டான். போனவன் போனவன்தான்! எங்கே சென்றான், என்ன செய்கிறான் என்று இன்று வரை யாருக்கும் தெரியவில்லை.

இங்கே, இருபது ரூபாயைக் கண்ட வேலப்பனுக்கு இருப்புக் கொள்ளவில்லை. மகிழ்ச்சி பிடிபடவில்லை. 'உடனே அந்த நொண்டிக் கழுதையை மாற்றிவிட்டு வேறு ஒரு புதுக் கழுதையை வாங்கிவிட வேண்டியது தான்' என்று தீர்மானித்தான்.

நினைப்பது போல் எதுவும் நடப்பதில்லையே? நாமும் நடப்பதை நினைப்பதில்லையே?

வேலப்பன் கையில் இருபது ரூபாய் வந்து சேரவும், வீரம்மாள் படுக்கையில் விழவும் சரியாக இருந்தது. அவளுக்கு வைத்தியம் பார்க்க நடுத் தெரு வைத்தியரை அழைத்து வந்தான். அவனிடமுள்ள இருபது ரூபாய் கரையும் வரையில் வைத்தியர் தவறாமல் வந்து போனார்.

ஒரு நாள் வீரம்மாளுக்கு நிலைமை மிஞ்சியது. வைத்தியர் வந்தார். வீரம்மாளின் நாடியைப் பிடித்துப் பார்த்தார். வேலப்பனை ஏறிட்டு நோக்கினார். 'பணம் தீர்ந்து விட்டது' என்ற பாவம் அவன் முகத்தில் தெரிந்தது. மீண்டும் வேலப்பனையும், வீரம்மாளையும் அவளது நாடித் துடிப்பையும் மாறி மாறிப் பார்த்து விட்டுச் சிறிது நேரம் கண்களை மூடியவாறு சிந்தனையை ஓட விட்டார். பிறகு வேலப்பனை உற்றுப் பார்த்தபடி உதட்டைப் பிதுக்கிவிட்டு எழுந்தார். அதோடு வீரம்மாளின் கதை தீர்ந்தது !

அடுத்த நாள் முல்லைக் காலின் வடகரை மண்ணுக்குள் அடைக்கலம் புகுந்தாள்.

வேலப்பன் குடும்பத்தில் எஞ்சி நின்றது அவனும் அந்தக் கழுதையும்தான்!

மறு வருஷம் சங்கத்திலிருந்து கொடுத்த கடனை வசூலிக்கும் தவணை வந்தது. அந்த ஊரில் கடன் வசூலிக்க ஓர் அதிகாரி நியமிக்கப்பட்டார். அவர் அங்கேயே முகாம் போட்டார்.

எலி வளை போன்றிருந்த வேலப்பனின் குடிசை முன்னால் ஒரு நாள் அந்த அதிகாரி வந்து நின்றார்.

''வேலப்பா, வேலப்பா!''

'லொட்டு லொட்'டென்று இரும்புலக்கையில் வெற்றிலை இடித்துக் கொண்டு அரைத் தூக்கத்திலிருந்த வேலப்பன், குரல் கேட்டு அந்த 'எலிவளை'யிலிருந்து வெளியேறினான்.

''வேலப்பன் என்பது நீர்தானே ஐயா?'' அதிகாரி அதிகாரத்துடன் கேட்டார்.

''ஆமாங்க.''

''கடன் வாங்கினீரே, திருப்பிக் கொடுக்க வேண்டாமா ?''

''உங்கிட்டே நான் எப்போ கடன் வாங்கினேன்? நீங்க யாருங்க?'' என்று ஒன்றும் புரியாமல் கேட்டான் வேலப்பன்.


அதற்குள் அடுத்த வீட்டு மாரியப்பனும், சாலையடி டீக்கடை நாயரும் இன்னும் நாலைந்து பேரும் அங்கு கூடினர்.

''என்னய்யா விளையாடுறீரா? எங்கிட்டே வேறே கடன் வாங்கணுமா? சங்கத்திலிருந்து வாங்கினீரே, அதைச் சொல்றேன்.''

''ஓகோ, அந்த இருபது ரூபாயா?''


அதிகாரி துணுக்குற்றார்.

''என்ன? இருபது ரூபாயா? என்னைய்யா ஒன்றும் தெரியாதது மாதிரி பேசுகிறீர்? இருநூறு ரூபாய் வாங்கியிருக்கிறீர். வட்டியுடன் திரும்பக் கொடுக்க வேண்டுமாக்கும். எடும், பணத்தை !''



திருவானைக்கோவில் ஸ்ரீ வி. வேங்கடராம அய்யர் அவர்கள் குமாரர் சிரஞ்சீவி **வி. சீதாராமன்** B.A., B.T., அவர்களுக்கும், கோயமுத்தூர் வி. துரைசாமி அய்யர் அவர்கள் குமாரத்தி சௌ. **ஆனந்தலக்ஷ்மி** B.Sc. க்கும் சமீபத்தில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

வாழ்க மணமக்கள்!



பம்பாய் சென்ட்ரல் ரயில்வேயில் பணி புரியும், ஸ்ரீ எம். வைத்தியநாதன் அவர்கள் குமாரர் சிரஞ்சீவி **வி. சீதாராமன்** அவர்களுக்கும், ஹைதராபாத் இந்தியன் ஓவர்ஸீஸ் பாங்க் ஏஜெண்ட் ஸ்ரீ டி. ஆர். கிருஷ்ணமூர்த்தி அய்யர் அவர்களின் குமாரத்தி சௌ. **சுஜாதா**வுக்கும் தஞ்சையில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

வாழ்க மணமக்கள்!

ஹாஸ்யத் துக்கடா!

மனைவியின் பெருமை!

கிளப்பில் சில பெரிய மனிதர்கள் அரட்டை அடித்துக்கொண்டிருந்தனர். திடீரென்று அவர்களிடையே தங்கள் மனைவியைப் பற்றிய பேச்சு வந்தது.

ஒருவர், "என் மனைவி மிக மிக நல்லவள். என்னைப் பத்து வருஷங்கள் சந்தோஷமாக இருக்கச் செய்தாள். ஆனால் திடீரென ஒரு நாள் என் சந்தோஷத்தைக் கெடுத்துவிட்டாள்" என்றார்.

இதைக் கேட்ட மற்றவர்கள் "ஏன், என்ன ஆயிற்று?" என்றனர்.

"பத்து வருஷங்களுக்குப் பிறகு அவள் பிறந்தகத்திலிருந்து என் வீட்டுக்கு வந்துவிட்டாள்!" என்று பதில் கிடைத்தது. — மைசூர் ராகவன்

"இருநூறு ரூபாயா? இருபது ரூபாய் தானே அந்தத் தண்டபாணித் தம்பி கொடுத்திச்சு? அதுவும் எம்பொஞ்சாதி வைத்தியச் செலவுக்கே சரியாப் போச்சே! இப்போ இருநூறு ரூபாய்க்கு எங்கே போவேன்?"

"கதையளக்காதேயும்; நான் பணம் வசூல் பண்ணியாக வேண்டும்" என்றார் அதிகாரி மிடுக்குடன் சுற்றுமுற்றும் நோட்டமிட்டவாறு.

"தாத்தா! இவரு சங்கத்திலிருந்து கொடுத்த பணத்தை வசூல் பண்ண வந்த ஆபீஸரு. எதையாச்சும் உளறி வைக்காதே!" என்று அறிவுரை கொடுத்தான் அடுத்த வீட்டு மாரியப்பன்.

அதிகாரிக்குப் பொறுமை பிடிபடவில்லை. தம் இடுக்கிலிருந்த தோல் பையை எடுத்தவாறே கேட்டார். "சரி சரி, உன்னிடம் என்ன சொத்து இருக்கிறது?"

"நானும் இந்தக் குடிசையுந்தான் சாமி!"

"வேறொன்றுமில்லையா?"

"ஒரு கழுதை இருக்கிறது!" என்றான் வேலப்பன்.

"அதுவும் நொண்டிக் கழுதே சாரே!" என்றான் டீக்கடை நாயர்.

"ஓகோ, அதை ஏலம் விட்டால் எவ்வளவு போகும்?" — அதிகாரி கேட்டார்.

"அதை எவன் ஏலத்தில் எடுப்பான்? இருபது கூடப் பெறுதே!" என்றான் மாரியப்பன்.

"சரி; வேலப்பா, நானே மறு நாள் வருகிறேன். பணத்தை ரெடி பண்ணி வை; இல்லாவிட்டால் உன் குடிசையும் கழுதையும் பறிபோகும்!" — ஒரு மிரட்டலைப் போட்டுவிட்டு நடையைக் கட்டினார் அதிகாரி.

மறு நாளைக்கு மறு நாள் சொன்னபடி அதிகாரி வந்தார். வேலப்பனிடம் பணம் கேட்டார். அவன் எங்கே போவான் அவ்வளவு பணத்துக்கு?

அவனது குடிசை பறிக்கப்பட்டது. நிலை, கதவு பெயர்த்தெடுக்கப்பட்டன. கழுதை 'பவுண்டி'ல் அடைக்கப்பட்டது. அடுத்த மூன்று நாட்களில் வேலப்பன் தனது குடிசையைப் பறிகொடுத்து விட்டுக் கழுதையைப் பிரிந்த ஏக்கத்தில் கஞ்சி குடிப்பதை மறந்தான். இலேசான காய்ச்சல் கண்டது. அடுத்த இரண்டாம் நாள் நினைவிழந்தான். மூன்றாம் நாள் அதே முல்லைக் கரை மண் அவனை விழுங்கிக் கொண்டது!

எத்தனை நாட்களுக்குத்தான் பவுண்டில் அடைபட்ட கழுதைக்குத் தீனி போட முடியும்? ஒரு நாள் அதை அவிழ்த்து விட்டார்கள். கழுதை ஊரைச் சுற்றிச் சுதந்திரமாக மேய்ந்து திரிந்தது. அதற்குச் சிறிது சதைப் பிடிப்பும் ஏறிற்று.

இந்த நிலையில் ஒரு தினம் அந்த ஊருக்கு இரண்டு பேர்கள் வந்தார்கள். மலைக்குப் 'பொதி கழுதைகள்' வாங்க வேண்டும் என்றும் விசாரித்தார்கள். அந்த ஊரினர் 'மாடி வீட்டா'ரைப் போய்ப் பார்க்கச் சொல்லினர். அவர்களும் மாடி வீட்டாரைப் போய்ப் பார்த்தனர்.

"வேலப்பன் என்று இந்த ஊரில் ஒருவன் இருந்தான். அவனுக்குச் சங்கத்துக்காகப் 'பங்குத் தொகை' என்று இருபத்தைந்து கொடுத்தேன். அந்தப் பயல் தன் கழுதையை என்னிடம் ஒப்படைத்துவிட்டு மண்டையைப் போட்டு விட்டான். நீங்கள் விரும்பிக் கேட்கிறபடியால் அதை உங்களுக்கு விற்கலாமென்று தீர்மானித்து விட்டேன்" என்றார் மாடி வீட்டார்.

"சரி, சந்தோஷம்; கழுதையைப் பார்க்கலாமா?"

"அதை ஏன் பார்க்க வேண்டும்? நானே சொல்கிறேனே? அதற்கு ஒரு கால்தான் சிறிது ஊனம். மற்றபடி நல்ல வலுவுள்ள கழுதை அது!"

பிறகு அயலூரார் இருவரும் பேரம் பேசினர். இருபது ரூபாய் விலை என்று மாடிவீட்டார் கூற, பத்து ரூபாய்க்கு இவர்கள் கேட்க, முடிவில் இழுபறியுடன் பதினைந்து ரூபாயில் பேரம் முடிந்தது. முல்லைக் கரையில் மேய்ந்து கொண்டிருந்த கழுதையை இழுத்துச் சென்றனர்.

மலையடிவாரத்திலிருந்த ஓர் ஊரில் தினமும் நாலரை ரூபாய்க்கு அந்தக் கழுதை 'வாழைக் காய்ப் பொதி' அடித்தது. மூன்று மாதங்களுக்குப் பிறகு எலும்பும் தோலுமாய்ப் பழைய இடத்துக்கே வந்து சேர்ந்தது! ஊரெல்லாம் மேய்ந்து வருவது வேலப்பனின் குட்டிச்சுவரில் தஞ்சம் புகுவதுமாக இருந்தது.

மழை பிசுபிசுத்துக் கொண்டிருந்த அன்று இந்தக் கழுதை முல்லைக்கரையின் தென்கரையில் மேய்ந்து கொண்டிருந்தது.

இடது கையில் தடியுடனும், வலது கையில் பல் குச்சியுடனும் தண்ணீர் பாய்ச்சும் மாயாண்டி அந்தப் பக்கம் வந்து கொண்டிருந்தான். கழுதை மேய்ந்து கொண்டிருந்த இடத்தை நெருங்கியதும் பல் குச்சியைக் குதப்பியவாறு அதை உற்றுப் பார்த்தான்.


அந்தக் கழுதை மேய்ந்து கொண்டிருந்த கரைக்குக் கீழ 'எவனுடைய' வயலிலோ, 'யாருடைய' கழுதைகளோ பயிரை மேய்ந்து விட்டுச் சென்றிருந்தன. அதைக் கண்ட 'இவனுக்கு' வந்தது ஆத்திரம்! மீசை துடித்தது; கண்கள் சிவந்தன. கோபத்தையெல்லாம் திரட்டித் தன் கையிலிருந்த கட்டைத் தடியால், குட்டைப் புற்களை மேய்ந்துகொண்டிருந்த கழுதையின் மேல் ஓங்கி ஒரு போடு போட்டான்!

அந்தக் கழுதையின் 'கதை' முடிந்தது!

எஸ். நாராயணன்



உணவு அகராதி



அரிசி :

☐ பழுப்பும் கறுப்பும் கலந்த நிறத்தில் கற்களுக்கிடையே காட்சியளிக்கும் ஓர் அத்தியாவசியமான உணவுப்பண்டம். 'அரிது அரிது, அரிசியைக் காண்பதரிது' என்று அரசியல் தலைவர்களை யெல்லாம் அலற வைக்கும் அதிசயப் பொருள்.

அவல் :



☐ வெறும் வாயை மெல்பவருக்கு இது கிடைத்தால் சந்தோஷந்தான். ஆனால், இப்பொழுது அவலை நினைத்துக் கொண்டு உரலையல்லவா இடிக்க வேண்டி யிருக்கிறது !

உபவாசம் :

☐ ஆசாரத்துக்காக இப்படி யிருப்பவர்கள் சிலர்; ஆகாரம் கிடைக்காததால் இதை மேற்கொள்பவர்கள் பலர் !

உப்புமா :

☐ அரிசியும் ரவையும் குதிரைக்கொம்பாகிவிட்ட இக்காலத்தில், அலட்சியப்படுத்தப்பட்டு வந்த இதுகூட ஓர் அபூர்வ ஆகாரமாகி விட்டது !



ஊறுகாய் :

☐ சாதத்துக்குப் பக்கவாத்தியமாக இருந்து வந்த இதற்கு இப்பொழுது சாதம் பக்கவாத்தியமாகி விட்டது!

எண்ணெய் :

☐ முன்பு தவலை நிறைய வாங்கிய பணத்துக்கு இப்பொழுது 'டம்ளர்'ரில்தான் வாங்க முடிந்தாலும், இதைவிட அவசியமான பண்டம் கிடையாது. 'சனி நீராடா' விட்டாலும் சமையலுக்கு வேண்டுமே !



காப்பிக்கொட்டை :

☐ அரிசி 'க்யூ'வுக்கு அடுத்தபடியாக அனுமார் வால் போல் எங்காவது 'க்யூ நீண்டிருந்தால் அங்கு தலைக்கு அரை கிலோ இது கொடுக்கப்படுகிறது என்பது குழந்தைகளுக்குக் கூடத் தெரியும் !



சப்பாத்தி :

☐ "எங்கள் வீட்டில் இன்றிரவு சப்பாத்தி, ஸார் !" என்று யாராவது பெருமையாகப் பேசினால், அவர் வீட்டில் அரிசி 'ஸ்டாக்' தீர்ந்து விட்டது என்று அர்த்தம் !

பொட்டுக்கடலை :

☐ இது இல்லாமலே 'சட்னி'யை எப்படித் தயாரிக்க முடியும் என்ற ரகசியம் ஹோட்டல் முதலாளிகளுக்குத்தான் தெரியும் !



ரவை :

☐ இன்றுள்ள நிலையில் இந்தப் பண்டத்துக்காக மிருதங்க வித்துவான்கள் எங்கெங்கே அலைகிறார்களோ ?

வாழைப்பழம் :

☐ சாப்பாட்டுக்குப்பின் ஜீரணத்துக்காக இரண்டு வாழைப் பழங்களை உரித்து உள்ளே தள்ளியது போய், இப்பொழுது சாப்பாட்டுக்குப் பதிலாக இரண்டு பழங்களை விழுங்கி விட்டுச் சமாதானப்படுத்திக்கொள்ள வேண்டி யிருக்கிறது!



மிளகாய்:

☐ விலைவாசி உயர்வுப் போட்டியில் முதல் பரிசு பெற்றுள்ள பெருமை இதற்குத்தான் !

ஸ்ரீ விசாலம் சிட் பண்டு லிமிடெட்

ஸ்தாபிதம்: 1947

உபரியின் சின்னம்


பதிவு செய்யப்பட்ட அலுவலகம்:
திருநெல்வேலி-6.

மத்திய அலுவலகம்:
51-B, உஸ்மான் ரோடு,
தி. நகர், சென்னை-17.
போன்: 442916


31.3.1967 அன்று
அதிகாரம் பெற்ற மூலதனம்: ரூ. 5,00,000.

மொத்த ஆஸ்திகள்: 123 லட்சம். சீட்டில் ஈடுபடுத்திய தொகை 230 லட்சம்.

கடந்த 20 ஆண்டுகளாக பொதுமக்களுக்கு சிறந்த சேவை செய்துவரும் புகழ் பெற்ற ஸ்தாபனம்!



வட்டி
9½% P.A.
வரை.



காரண்டி செய்த லோன்: கல்கத்தா ரிசர்வ் பாங்க், பாங்க் அல்லாத நிதி கம்பெனிகள் டிபார்ட்மெண்ட் 29-10-66ல் வெளியிட்ட நோட்டிபிகேஷன் DNBC. I/ED (s)-66 பாரா 2 (1) (f)ன் சப்ளாஸ் (X)ன்படி வாங்கப்படுகின்றன.

வட்டி விகிதம்

தவணை	ரூ. 300லிருந்து ரூ. 5000 வரை	ரூ. 5000க்கு மேல்
ஒரு வருடம்	8½%	9%
இரண்டு வருடம்	9%	9½%

தொழில் விவரம்

தினசரி, மாதம் மூன்று முறை, மாதம் ஒரு முறை உள்ள ஏலச் சீட்டுகள் நடத்துதல். ரூ. 10,000 வரை மதிப்புள்ள சீட்டுகள் எங்கள் 22 ஆபீஸ்களில் நடத்தப்படுகின்றன.

கம்பெனி நிர்வாகம்

மானேஜிங் டைரக்டர்:
ஸ்ரீ K.M.K. முத்தையா செட்டியார்

டைரக்டர்கள்:
ஸ்ரீ M.A.M. கோவிந்தன் செட்டியார்
ஸ்ரீமதி RM. மெய்யம்மை ஆச்சி

ஜெனரல் மானேஜர்:
ஸ்ரீ AR. ராமசாமி

மத்திய அலுவலக மானேஜர்:
ஸ்ரீ K. A. ராம், பி.ஏ., பி.எல்.

ஒவ்வொரு மாதமும் புதிய சீட்டு குரூப் 25,000 முதலுடன் ஆரம்பமாகிறது!
மாதம் ரூ. 1250 வீதம் 20 தவணைகள்.

ஏலங்கள் வழக்கம்போல் எங்கள் திருச்சி கிளையில் நடைபெறும்.

தணிக்கை செய்யப்பட்ட பாலன்ஸ்ஷீட்டுகள் சேர விரும்புவோர்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.
எமது கிளைகளுடன் தொடர்பு கொள்ளப் புதிய டெலிபோன் டைரக்டரியைப் பார்க்கவும்.

அனுமதித்த தேதி
27—6—67

K. M. K. முத்தையா செட்டியார்
மானேஜிங் டைரக்டர்

Paramount



செய்திப் படங்கள்

1. காஞ்சி காமகோடி பீடாதிபதிகளின் பீடமேற்பு வைர விழா தியாகராய நகரில் சமீபத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. ஆசாரியாரின் திருவுருவப் படஊர்வலக் காட்சியைக் காண்கிறீர்கள்.

2. அமெரிக்கத் தகவல் காரியாலயத்தைச் சேர்ந்த ஸ்ரீ டி. ராதாகிருஷ்ணன் அவர்களின் புதல்வி உஷாவின் பரத நாட்டிய அரங்கேற்றம் அமெரிக்கத் தகவல் காரியாலயத் தலைமை அதிகாரி மர்பீல்டு அவர்கள் முன்னிலையில் மியூஸியம் தியேட்டரில் நடைபெற்றது. நிருத்யோதயா இயக்குநர் குமாரி பத்மா அரங்கேறிய ஜெமி உஷாவை வாழ்த்தினர்.



3. பெர்லினில் ஒலிம்பிக் வெற்றி வீரர்களான இந்திய ஹாக்கி கோஷ்டியை ஜெர்மன் ஹாக்கி கோஷ்டியினர் வென்று வாகை சூடினர்.

4. இந்திய கிரிக்கெட் காப்டன் பட்டோடி முதல் டெஸ்டில் அபாரமாக ஆடிய பிறகு கேம்பிரிட்ஜில் தம் காதலி ஷர்மிளா டாகூரோடு அளவளாவி மகிழ்ந்து ஓய்வெடுத்துக் கொள்கிறார்.





'சாதம் படைப்போம்; பாலம் சமைப்போம்'


"சென்னை சிவில் ஜெயில் வாசத்தை முடித்துக் கொண்டு நாங்கள் இங்கு வந்திருக்கிறோம்."


"என்ன? சிவில் ஜெயில் வாசமா? செய்த குற்றம் என்னவோ?"

"பெண்ணாய்ப் பிறந்ததோடு தொழில் நுட்பக் கல்வி பயின்றது அல்லது பயில முயன்றது."

"என்ன சொல்கிறீர்கள் நீங்கள்?"

"எங்கள் தொழில் நுட்பப் பள்ளி அதாவது பெண்கள் பாலிடெக்னிக் பிராட்வேயில் உள்ள பழைய சிவில் ஜெயிலில்தான் தொடங்கியது. 1962ம் ஆண்டு தொடங்கிய இந்தப் பயிற்சிப் பள்ளி 'சிறுகக் கட்டிப் பெருக வாழ்' என்ற முதுரைப்படி அடையாறு பிரிட்ஜ் ஹவுஸுக்கு மாறிப் பிறகு ஸெண்ட்ரல் பாலிடெக்னிக்குக்கு இடம் பெயர்ந்து, இப்போது தனக்கெனவே பெரிய கட்டடம்





கட்டிக் கொண்டு வளர்ந்துள்ளது. அதோடு ஹாஸ்டல் போன்ற வசதிகளையும் சீரிய முறையில் பெற்றுச் சிறப்பாகத் திகழ்கிறது."

"பேஷ், பேஷ்! ஒரு நிமிஷம் திகைக்க வைத்து விட்டீர்கள்! ஆமாம், இங்கு என்ன சொல்லித் தருகிறீர்கள்?"

"என்ன என்ன சொல்லித் தருகிறோம் என்பதை நேரில் தான் பார்த்துத் தெரிந்து கொள்ளுங்களேன்!"



ஸ்ரீமதி மே ஜார்ஜ்

இப்படிக் கூறிய தொழில் நுட்பப் பள்ளியின் முதல்வர் ஸ்ரீமதி மே ஜார்ஜுடன் விசாலமானதோர் அறைக்குள் நுழைந்தோம்.

அழகிய நீண்ட மேஜைகள்; அவற்றை ஒட்டினாற்போல் 'டெமான்ஸ்டிரேடர்' வரை பலகை. அப்பலகையில் உள்ள வரைபடத்தை உன்னிப்பாகப் பார்த்துப் பெண்கள் ஏதோ செய்து கொண்டிருந்தார்கள். ஒரு சிலர் மின்சாரச் சூட்டுக் கருவியின் உதவி கொண்டு வளைந்த கம்பிகளை நிமிர்த்தினார்கள்.

"இவர்கள் என்ன செய்கிறார்கள்?"

"'ரேடியோ என்ஜினீயரிங்' கற்கிறார்கள். இது 'எலெக்ட்ரானிக்' பகுதி. இவர்களுக்கு ரேடியோப் பெட்டிகள் இணைக்கவும் பழுது பார்க்கவும் கற்றுத் தரப்படுகிறது."

"அப்படியா? இதில் தேர்ச்சி பெற எத்தனை ஆண்டுகள் பிடிக்கும்? இப் பயிற்சிக்குத் தேவையான குறைந்தபட்ச யோக்கியதாம்சம் என்ன?"

"மூன்றாண்டுகளில் தேர்ச்சி பெறலாம். குறைந்தபட்ச யோக்கியதாம்சம் எஸ்.எஸ்.எல்.சி.தான்!"

"இந்தத் தொழிலில் பெண்களுக்கு உள்ள வேலை வாய்ப்பு எப்படி?"

"வேண்டிய வேலை வாய்ப்புக்கள் இருக்கின்றன. ஓவர்சீஸ் கம்யூனிகேஷன் சர்வீஸ், டெலிபிரிண்டர் தொழிற்சாலை, பாரத் எலெக்ட்ரானிக்ஸ், டெலிபோன்


தொழிற்சாலை, போர்ப்படை சிக்னல் சர்வீஸ்—எதில் வேண்டுமானாலும் பணியாற்றலாம். ஆண்களுக்குச் சரிநிகர் சமானமாக நின்று நல்ல பெயர் எடுக்கலாம்.''

''பாடத் திட்டம் என்னவோ ?''

''எதற்கும் அடிப்படைக் கல்வியை அழுத்தமாகப் போதிக்கிறோம். ஆங்கிலம், கணக்கு, பௌதிகம், ரசாயனம் எல்லாம் பயிற்றுவிக்கிறோம். கோட்பாடுகளோடு நேரிடைப் பயிற்சியும் அளிக்கிறோம்!''

''அப்படியா? இந்த அறை....?''

''இது 'சிவில் என்ஜினீயரிங்'குக்கான பகுதி. சாலை அமைத்தல், கட்டட நிர்மாணம், சர்வே, டிராப்ட்மென் தொழில் ஆகிய அனைத்தும் இந்தப் பகுதியில் சொல்லித் தருகிறோம்.''



□ □ □ □ □ □ □ □ □ □ □

''எட்டு மறிவினில் ஆணுக்கிங்கே பெண் இளைப்பில்லை காண்''

மகாகவி பாரதியின் வாக்கை மெய்ப்பிப்பதே போல், பெண்கள் இங்கே தொழில் நுட்பக் கல்வி பெறுகிறார்கள். வாருங்கள், பெண்கள் பாலிடெக்னிக்கை நாமும் ஒரு முறை பார்த்து வருவோம்.

□ □ □ □ □ □ □ □ □ □ □

'' இந்தத் தொழில் பெண்களுக்குத் தோதுப்பட்டு வருமா? ஆண்களைப் போல் அவர்களால் வெய்யிலில் காய்ந்து மழையில் நனைய முடியுமா? 'மெல்லியலார்கள்' என்று பெயர் வாங்கிய பெண்கள் எப்படிக் கடுமையாக உழைக்க முடியும் ?''

''உங்களைப் போல் கூறுபவர்களுக்குத்தான் மகாகவி பாரதி பதில் சொல்லியிருக்கிறாரே. 'வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைப்போமென்ற விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்' என்று ! பெண் ஒரு தொழிலைக் கற்றால் நிறம்படக் கற்பாள்; செய்தும் காட்டுவாள். சொல்லப் போனால் நானே ஒரு சிவில் என்ஜினீயர்தானே ?''

''அப்படியா ?''

'' ஆமாம். நான் தொழிற் கல்வியில் பட்டம் பெற்றது 1947ம் ஆண்டு. என்னைப் போல் எத்தனையோ பெண் என்ஜினீயர்கள் பல துறைகளிலும் இருக்கிறார்கள். நான் பொதுநலத் துறையில் ஜூனியர் என்ஜினீயராகப் பணியாற்றியிருக்கிறேன். பின்னர் ஏ. வி. வி. லிமிட்டித் தொழிற்சாலையில் சேர்ந்து வேலை செய்திருக்கிறேன். சென்னை நகர அபிவிருத்தி டிரஸ்டில் நிர்வாக என்ஜினீயராக இருந்திருக்கிறேன். பெண்களுக்கென்று பிரத்தியேகமாக இந்தத் தொழில் நுட்பப் பள்ளி தொடங்கியது முதல் இதன் முதல்வராகப் பதவியேற்றுள்ளேன். என் புராணம் இருக்கட்டும், கட்டடக் கலை இவ்வளவு தூரம் வளர்ந்ததற்குக் காரணம் யார் என்று எண்ணுகிறீர்கள்?''

'' உங்கள் கேள்வியிலிருந்தே நீங்கள் பெண்கள்தான் என்று சொல்லப் போகிறீர்கள் என்று தெரிகிறதே !''

''சந்தேகமின்றிப் பெண்தான் காரணம். மூம்தாஜ் காரணமாக அழகிய தாஜ்மகல் உருவான கதையை நான் சொல்லப் போவதில்லை. கல்யாணத்தைச் செய்து கொண்டு வீட்டையும் கட்டிக் கொண்ட மனிதனுக்கு அந்த நாளில் சமையலறையை இருட்டறையாகத்தான், புகை சூழ் மண்டலமாகத்தான் நிர்மாணிக்கத் தெரிந்திருந்தது. கண்ணைக் கசக்கிக் கொண்டு சமையலறைக்குள் அடைந்து கிடந்த பெண்தான் அந்த நிலையை மாற்றி அமைத்தாள். காற்றோட்டமும், வெளிச்சமும் உள்ள அறை உருவானதற்கு அவள் பட்ட அவதிதான் காரணம் !''

''தகர்க்க முடியாத தர்க்கம்தான் !''

''குடும்பத்துக்குத் தேவையான பொருள்களைப் பங்கீடாக வைத்துக் கொள்ள அலமாரிகள், அம்மி, கல்லுரல், ஆட்டுக் கல் புதைக்கச் சௌகரியமான இடங்கள்—இவை பற்றிப் பெண்களுக்குள்ள அறிவு ஆண்களுக்குக் கிடையாது. சொல்லப் போனால்....!''

''கட்டடக் கலை நிபுணராயிற்றே நீங்கள்! உங்கள் யோசனையைக் கேட்டுத்தான் உங்கள் கணவர் வீட்டைக் கட்டினார் என்பீர்கள்.''

''உண்மை; பெண்கள் படித்துப் பட்டம் பெற்று, அதோடு அநுபவமும் சேர்ந்து கொண்டால், எப்படி உதவும் என்று புரிகிறதல்லவா? இதோ பாருங்கள்! இது டிராயிங் மேஜை. புது முறையில் தயாரிக்கப்பட்டது. பழைய மேஜைகளைக் காட்டிலும் வசதியானது. தேவைப்படும் உபகரணங்களைப் பக்கத்திலேயே வைத்துக் கொள்ளலாம்.''

''ஆமாம், பெண்களுக்கு நன்றாக 'டிராயிங்' போட வருமோ?''

''நல்ல கேள்வி கேட்டீர்கள்! கோலம் போட்டுப் பழகிய கை நம் நாட்டுப் பெண்களின் கை. புள்ளி வைத்துக் கோடிழுத்தார்களானால் இம்மிகூடப் பிசகாது. ஆண்களைப் போல் ரப்பருக்கு அதிக வேலை தராமலே பெரிய பெரிய பிளான்களைக் கன கச்சிதமாகப் போட்டு விடுவார்கள்.''



''ஏண்டா புத்திசாலி! நூறு பைசாவுக்கு எத்தனை ரூபாய் என்றால் அரை ரூபாய் என்கிறாயே?''
''ரூபாய் மதிப்பு குறைஞ்சு போன விஷயம் உங்களுக்குத் தெரியாதா?''

''இவர்களுக்கு எத்தனை ஆண்டு பயிற்சி அளிப்பீர்கள்?''

''மூன்றாண்டுகள் நிலவளம், நீர்வளம் முதற்கொண்டு, கட்டடக் கலை, சாலை சமைத்தல், பாலம் கட்டுதல் வரை எந்த வேலையையும் திறம்பட நிர்வகிக்கும் நேரிடைப் பயிற்சியை இவர்களுக்கு அளிக்கிறோம்.''

''இதென்ன, இங்கே ஏகப்பட்ட தையல் இயந்திரங்கள் வைத்திருக்கிறீர்களே!''

''ஆடைகள் தயாரிக்கவும், உடை தைக்கவும் இங்கே பயிற்சி தருகிறோம். எம்பிராய்டரியும் சொல்லித் தருகிறோம். இதுவும் மூன்று ஆண்டுகள் டிப்ளமாப் படிப்புதான். ஆடை தயாரிப்பதோடு அவற்றை விற்கவும் போதிக்கிறோம்.''

''தையல்களுக்கு ஏற்ற தையற் கலை தான்! ஆனால் இதைக் கற்பதற்குள் மலை போலத் துணிகள் அல்லவா பாழாகிவிடும்!''

''யார் சொன்னார்கள்? எந்தப் பொருளும் வீணாகக் கூடாது என்று கண்ணும் கருத்துமாயிருக்கும் பெண்களா துணிகளை வீணாக்குவார்கள்? ஆசிரியர்களாகப் பணியாற்றுகிறவர்கள்தான் அதற்கு இடம் கொடுப்பார்களா? முதலில் காகிதங்களில் 'டிசைன்'களை வரையவும், வெட்டவும் கற்றுத் தருவோம். நல்ல பயிற்சி பெற்ற பின்னரே இவர்கள் கைகளில் துணிகளைத் தருவோம். தையற் கலை கற்பதற்காக இவர்கள் துணிமணி வாங்க வேண்டிய அவசியமே இல்லை. நாங்களே 'சப்ளை' செய்கிறோம்!''

''அதோ அந்த அறையில் அத்தனை டைப்ரைட்டர்கள் இருக்கின்றனவே, எதற்கு?''

இங்கே 'காமர்ஷியல்' பயிற்சியளிக்கிறோம். இரண்டாண்டுகள் படிக்க வேண்டும். தட்டெழுத்து, சுருக்கெழுத்து, புக் கீப்பிங், வியாபாரக் கணக்கு வழக்குகள், பாங்கு அலுவல்கள், மற்ற நடைமுறை அலுவல்கள் என்று கற்றுத் தருகிறோம். ஆண்டு ஒன்றுக்கு முப்பது பெண்களை இந்தத் துறையில் பயிற்சிக்காக எடுத்துக் கொள்ளுகிறோம்.''

இப்படியெல்லாம் பெண்கள் நலனில் அக்கறை எடுத்துக் கொண்டுள்ள ஸ்ரீமதி மே ஜார்ஜின் ஒரே ஆசை இதுதான்:

''தொழில் நுட்பக் கல்வி பெற்று உத்தியோகத்துக்கு வரும் பெண்கள் விஷயத்தில் மாற்றாந்தாய் மனப்பான்மையைப் பழகக்கூடாது. அவர்களுக்கும் வேலை உயர்வு, நிரந்தர உத்தியோகம் போன்ற சலுகைகள் ஆண்களுக்குச் சமமாக வழங்கப்பட வேண்டும். அப்பொழுது தான் பெண்கள் தொழில் நுட்பக் கல்வியில் அதிக நாட்டம் செலுத்துவார்கள்.''

''இப்படித் தொழில் பயில வரும் மாணவிகளிடமிருந்து என்ன கட்டணம் வசூலிக்கிறீர்கள்?''

''பைசா வசூலிப்பதில்லை. மாறாக, தகுதி வாய்ந்த மாணவிகளுக்கு உபகாரச் சம்பளம் அளித்து உதவுகிறோம். வட்டியில்லாக் கடன் கொடுத்து ஊக்குவிக்கிறோம். குறைவான வருவாயுள்ளவர்களுக்கு ஐம்பது ரூபாய் கல்வி மான்யம் அளிக்கிறோம். சொல்லப் போனால் இது போலப் பலப் பல உபகாரச் சம்பளங்கள் மாணவிகளுக்குக் கிடைக்கின்றன. ஆனால் ஸ்பெஷல் பீஸ் நாற்பது ரூபாயும், 'காஷன் டிபாஸிட்' பதினைந்து ரூபாயும் வசூலிப்பதுண்டு.''

''பேஷ்! கட்டணமில்லாத கல்வி! பெண்கள் அதிர்ஷ்டசாலிகள்தான்!''

''இங்கு நாங்கள் நடத்தும் ஹாஸ்டல் மிக மிகச் சிக்கனமான முறையில் மிகவும் தரமாக நடக்கிறது. எத்தனைதான் கைவிரிச் செலவழித்தாலும் ஐம்பது ரூபாய்க்கு மேல் ஆவதில்லை.''

''என்ன? இந்தக் கிராக்கி காலத்தில் ஐம்பது ரூபாய்தானா செலவாகிறது?''

''ஆமாம், எவ்வளவு முடியுமோ, அவ்வளவு நிர்வாகச் செலவைக் குறைத்திருக்கிறோம். ஆசிரியர்களும் சரி, மாணவிகளும் சரி, தங்கள் கைகளையே நம்பி வாழ்கிறார்கள். தனிச் சிப்பந்திகள் கிடையாது. பின்னால் ஒருவனைக் கரம் பிடித்துக் குடும்பம் நடத்தப் போகும் பெண்கள் இங்கே சிக்கனத்துக்கும் பழக்கப்படுத்திக் கொள்ளுகிறார்கள்.''

''இதையெல்லாம் கேட்கக் கேட்க நாம் ஏன் பெண்ணாய்ப் பிறக்காமல் போனோம்? பெண்ணாய்ப் பிறந்து இந்தப் பயிற்சிப் பள்ளியில் நமக்கும் இடம் கிடைத்திருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்? — இப்படி எண்ணிப் பெருமூச்சு விடத் தோன்றுகிறது.''

''பெருமூச்சு விடுவானேன்? 'பாரத தேசமோங்க உழைத்திடப் பிறந்த' பெண்களை நினைத்துப் பெருமிதம் கொள்ளுங்களேன்!''

இப்படிக் கூறும் ஸ்ரீமதி மே ஜார்ஜின் முகத்தில்தான் என்ன பெருமிதம் என்கிறீர்கள்! 'சாதம் படைக்கவும் செய்திடுவோம், தெய்வச் சாதி படைக்கவும் செய்திடுவோம்!' என்னும் கும்மிக் கோலாகலம் அல்லவா கூத்திடுகிறது!

—ரா.வீ.

பேட்டி காண்பவருடன் பேட்டி!



மார்க் ட்வெயின்

பேட்டிக் கட்டுரைகள் தண்ணீர்பட்ட பாடாக இருக்கும் இந்நாளில் வாழும் நாம், எழுபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னால் மார்க் ட்வெயினைப் பேட்டி காண வந்தவர் பட்ட பாட்டைப் பார்ப்போம்!

“தின இடி — மழை” பத்திரிகையிலிருந்து வந்திருப்பதாகச் சொன்னார் அந்த இளைஞர். “உங்களுக்குச் சிரமம் இருக்காது என்று நினைக்கிறேன். உங்களைப் பேட்டி காண வந்திருக்கிறேன்.”

“என்ன காண வந்திருக்கிறீர்கள்?”

“பேட்டி.... பேட்டி காண.”

“ஓ! சரி, சரி. உம், சரி.”

நான் அன்று காலை உற்சாகமாக இருக்கவில்லை. கொஞ்சம் அசதியாக இருந்தது. புத்தக அலமாரியருகே நின்று ஐந்தாறு நிமிஷங்கள் அவரையே பார்த்துக் கொண்டிருந்தேன். மெதுவாகக் கேட்டேன் :

“அதை எப்படி எழுதுவீர்கள்?”

“எதை ?”

“பேட்டி என்பதை.”

“என்ன சொல்லுகிறீர்கள்? புரியவில்லையே! பே...ட்...டி.... இந்தப் பேட்டி விஷயம் உங்களுக்குத் தெரிந்திருக்குமே! பிரபலமாக விளங்கும் பிரமுகர்களைப் பேட்டி காண்பது ஒரு சம்பிரதாயம் இல்லையா?”

“ஆமாம். கேள்விப்பட்டிருக்கிறேன். அதை வைத்துக் கொண்டு நீங்கள் என்ன செய்வீர்கள் ?”

“அடடா! எப்படிச் சொல்வது என்று தெரியவில்லையே. வழக்கமாக, பேட்டி காண்பவர்தான் கேள்வி கேட்பார். பேட்டி கொடுப்பவர் விடை தருவார். இதுதான் இப்போது எங்கும் வழக்கம். உங்களுடைய பொதுப்பணியும் சொந்த வாழ்க்கையும் பற்றி நான் இப்போது கேட்டுத் தெரிந்து கொள்ளலாமா?”

“ஓ. தாராளமாக. என் ஞாபகசக்திதான் மோசம்! மோசம் என்றால் ரொம்ப மோசம்! சில சமயம் விடுவிடு என்று பல விஷயங்கள் ஒன்றாக நினைவுக்கு வரும். சில சமயம் ஒன்றுமே வராது.”

“பரவாயில்லை ஐயா: உங்களால் முடிந்த அளவு ஞாபகப்படுத்திக் கொண்டு சொல்லுங்கள் போதும். தொடங்கலாமா ?”

“தொடங்கலாம்.”

கேள்வி: தங்கள் வயது என்ன ?

பதில்: அடுத்த ஜூன் மாதம் பத்தொன்பது ஆகிறது.

கேள்வி: என்னது? முப்பத்தைந்தாவது இருக்கும் என்று நினைத்தேன். எங்கே பிறந்தீர்கள் ?

பதில்: மிஸௌரியில்.

கேள்வி: எப்போது நீங்கள் எழுதத் தொடங்கினீர்கள் ?

பதில்: 1836ம் வருஷம்.

கேள்வி: அப்படியானால் உங்களுக்கு இப்போதுதானா பத்தொன்பது வயதாகிறது?

பதில்: தெரியாது. இது விசித்திரமாகத்தான் இருக்கிறது.

கேள்வி: விசித்திரம்தான். நீங்கள் சந்தித்த பிரமுகர்களில் குறிப்பிடத்தக்கவர் யார் ?

பதில்: ஆரன் பர்.

கேள்வி: உங்களுக்கு வயது பத்தொன்பதுதான் என்றால் நீங்கள் ஆரன் பர்ரைப் பார்த்திருக்கவே முடியாதே.

பதில்: என்னைப் பற்றி என்னைவிட உங்களுக்கு அதிகம் தெரியுமானால் என்னை ஏன் கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள்?

கேள்வி: இல்லை. பேச்சுக்குச் சொன்னேன். நீங்கள் ஆரன் பர்ரை எப்போது சந்தித்தீர்கள் ?

பதில்: அவருடைய சவ அடக்கத்துக்குப் போயிருந்தேன். அப்போது என்னைப் பார்த்துச் சத்தம் போடாதே என்றார்.



கேள்வி: என்னது! நீங்கள் அவர் சவ அடக்கத்துக்குப் போயிருந்தீர்கள் என்றால் அவர் இறந்திருக்க வேண்டும். இறந்து போனவருக்கு நீங்கள் சத்தம் போட்டால் என்ன, போடாவிட்டால் என்ன ?

பதில்: தெரியாது. அவரைத்தான் கேட்க வேண்டும். விசித்திரமான மனிதர்தான் அவர்.

கேள்வி: எனக்கு ஒன்றும் புரியவில்லை. அவர் உங்களுடன் பேசினார் என்கிறீர்கள். இறந்து விட்டார் என்றும் சொல்கிறீர்கள்.

பதில்: இறந்து விட்டார் என்று நான் சொல்ல வில்லையே.

கேள்வி: அப்படியானால் அவர் இறக்க வில்லையா ?

பதில்: அவர் இறந்ததாகச் சிலர் சொன்னார்கள். சிலர் இல்லை என்றார்கள்.

கேள்வி: நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

பதில்: எனக்கென்ன வந்தது? அது எனது சவ அடக்கச் சடங்கா என்ன ?

கேள்வி: நீங்கள்.... சரி, சரி, இதற்கு ஒரு முடிவே இராது. வேறு விஷயம் பேசுவோம். நீங்கள் பிறந்த தேதி எது?

பதில்: திங்கள் கிழமை. வருஷம் 1693. அக்டோபர் 31.

கேள்வி: இருக்கவே இருக்காது. அதுதான் பிறந்த தேதி என்றால் உங்களுக்கு இப்போது நூற்று எண்பது வயது ஆகிறது. இதற்கு என்ன சொல்கிறீர்கள்?

பதில்: ஒன்றும் சொல்லவில்லை.

கேள்வி: முதலில் உங்களுக்கு வயது பத்தொன்பதுதான் என்றீர்கள். இப்போது நூற்றெண்பது என்கிறீர்கள். ரொம்ப வித்தியாசம் இருக்கிறதே.

பதில் (பாராட்டுமுகமாக அவர் கரத்தைப் பற்றிக் குலுக்கியபடி): அட, நீங்கள் அதைத் தெரிந்து கொண்டு விட்டீர்களே ! எனக்கே இது அடிக்கடி விசித்திரமாகத் தோன்றும். ஆனால் பொருட்படுத்தமாட்டேன். நீங்கள் ஒரே நிமிஷத்தில் கண்டு பிடித்து விட்டீர்களே.

கேள்வி: அதிருக்கட்டும்.... உங்களுக்கு அண்ணா, தம்பி, அக்கா, தங்கை யாராவது உண்டா ?

பதில்: உம்... இம்.... ஆமாம்... எனக்குச் சரியாக நினைவில்லை.

கேள்வி: ரொம்ப விசித்திரமாக இருக்கிறதே நீங்கள் சொல்வது !

பதில்: ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?

கேள்வி: வேறு எப்படிச் சொல்வது? இதோ, இது யார் இந்தப் படத்தில்? இது உங்கள் சகோதரரா?

பதில்: ஆ! ஆமாம், ஆமாம். ஞாபகம் வந்து விட்டது. அவன் என் சகோதரன் தான். பெயர் வில்லியம் — ''பில்'' என்று செல்லமாகக் கூப்பிடுவோம், பாவம்!

கேள்வி: ஏன் பாவம் என்கிறீர்கள்? இறந்து விட்டாரா என்ன ?

பதில்: அப்படித்தான் இருக்க வேண்டும். நிச்சயமாகச் சொல்ல முடியாது. அதைப் பற்றி ஒரு மர்மம் நிலவுகிறது.

கேள்வி: ரொம்ப வருத்தமான விஷயம் தான். அவர் காணாமல் போய் விட்டாரா?



பதில்: அப்படிச் சொன்னாலும் ஒரு விதத்தில் பொருந்தும். நாங்கள் அவனைப் புதைத்து விட்டோம்.

கேள்வி: புதைத்து விட்டீர்களா? ஆசாமிக்கு உயிர் இருக்கிறதா இல்லையா என்று தெரியாமலா புதைத்து விட்டீர்கள்?

பதில்: இல்லை, இல்லை. அவன் இறந்து விட்டது நிச்சயம்தான்.

கேள்வி: மன்னிக்க வேண்டும். எனக்கு அர்த்தமாகவில்லை. அவனைப் புதைத்து விட்டீர்கள், அவன் இறந்ததும் நிச்சயம் என்றால் இதில் மர்மம் என்ன ?

பதில்: ஆங்! அதுதான், மர்மம்! அதாவது நாங்கள் இருவரும் இரட்டையர்; அவனும் நானும். பிறந்து இரண்டு வாரங்களில் குளிக்கும் தொட்டியில் ஆள் மாறாட்டம் ஆகி விட்டது. இரண்டு பேர்களில் ஒருவர் நீரில் மூழ்கி விட்டோம். அது யார் என்று எங்களுக்குத் தெரியவில்லை. சிலர் அது பில்தான் என்கிறார்கள். வேறு சிலர் இறந்து போனது நான்தான் என்கிறார்கள்.

கேள்வி: வேடிக்கைதான்! நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

பதில்: என்ன நினைப்பது? உண்மை என்ன என்பதைத் தெரிந்து கொள்ள என்ன வேண்டுமானாலும் தரத் தயார். இந்த ஆழ்ந்த மர்மம் என் ஆயுள் முழுதும் ஒரு கரும் நிழலாகவே என்னைத் தொடர்கிறது. உங்கள் காதோடு ஒரு ரகசியம் சொல்கிறேன். இதுவரை யாரிடமும் சொல்ல வில்லை. எங்கள் இருவரில் ஒரு குழந்தைக்கு இடது முழங் கையில் ஒரு பெரிய மச்சம் இருக்கும். அந்தக் குழந்தைதான் நான். அந்தக் குழந்தைதான் நீரில் மூச்சு முட்டிச் செத்தது !

கேள்வி: அப்படியானால் இதில் மர்மம் என்ன இருக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை.

பதில்: இது தெரியவில்லையா? எங்கள் வீட்டுப் பெரியவர்கள் தவறாக ஒரு குழந்தையை எப்படிச் சவ அடக்கம் செய்து விட்டார்கள் என்பது எனக்குப் புரியவில்லை. இதை வெளியே சொல்லி விடாதேயும். என் குடும்பத்தினர் ஏற்கனவே பல விஷயங்களில் மனம் நொந்திருக்கிறார்கள்.

கேள்வி: இப்போது ஒரு பேட்டிக்குத் தேவையான குறிப்புக்கள் கிடைத்துவிட்டன என்று நினைக்கிறேன். உங்கள் உதவிக்கு நன்றி.

அந்தப் பத்திரிகை நிருபர் மௌனமாக, மரியாதையுடன் விடைபெற்றார். அவர் இருந்தவரை நன்றாகப் பொழுது போயிற்று. அவர் எழுந்து போகிறாரே என்று இருந்தது எனக்கு. தமிழாக்கம்: **தம்பி சீனிவாசன்**



சீதா

சீதா, வேதா இருவரும் சகோதரிகள். ஒரு பிரபுவின் மக்கள். சீதா வக்கீலுக்குப் படித்தாள்; வேதா டாக்டருக்குப் படித்தாள். வக்கீலுக்குப் படித்த சீதா ஒரு வக்கீலைக் காதலித்தாள்; டாக்டருக்குப் படித்த வேதா ஒரு டாக்டரைக் காதலித்தாள்.

சிக்கல் இல்லாத கதை. சிரிப்பை வருவிக்கும் கதை. வக்கீல் குமாஸ்தாவாக வரும் நாகேஷ் ஒருவர் போதும் — சிரிப்பு வெடிகளை உதிர்த்துத் தள்ளுகிறார்.

சாவித்திரி, வக்கீல் சீதாவாக வந்து நன்றாய் வாதாடுகிறார். ஓடியாடிக் குதிக்காமல், ஒட்டாமல், உரசாமல் ஜெமினி கணேசனைக் காதலிக்கிறார். ஜெமினி கணேசனும் தம் பாகத்தைக் கச்சிதமாகச் செய்கிறார். கே. ஆர். விஜயா லேடி டாக்டர் வேதா. டாக்டர் தொழிலை மறந்து விட்டு நந்தவனத்திலும், நதி தீரத்திலும், முத்துராமனோடு ஆடிப் பாடி அகமகிழ்கிறார்.

கே. ஆர். விஜயாவும், சாவித்திரியும் சந்தித்துப் பேசும் கட்டங்கள் மிகவும் சுவையாக இருக்கின்றன. சாவித்திரிக்காக ஜெமினி கணேசனிடம் தூதுபோகும் சந்தர்ப்பத்தில், கே. ஆர். விஜயா நளினமாகப் பேசி நன்றாய் நடிக்கிறார். வக்கீல் ஜெமினி கணேசனை அறிமுகம் செய்து கொள்ளும் போது சாவித்திரியின் நடிப்பில் ஒரு சுவை காண்கிறது.

மனோரமா — நாகேஷ் தோன்றும் இடங்கள் கலகலப்பாயிருக்கின்றன. மனோரமா ''எதிர் நீச்சல்'' பட்டு மாமியை நினைவூட்டுகிறார்.

கே. சாரங்கபாணி கோவில் மண்டபத்திலேயே தம் கதையை முடித்துக் கொள்கிறார்.

திரைக் கதை, வசனம், டைரக்ஷன் ஆகியவற்றை ஏற்றிருப்பவர் ஏ. பி. நாகராஜன்.

வக்கீல் சீதா, தன் தகப்பனாரைச் சட்டத்தின் பிடியிலிருந்து தப்ப வைப்பதற்காக, பப்ளிக் பிராஸிக்யூடரான தன் காதலனை எதிர்த்து வாதாடி வெற்றியடைகிறாள். அந்த வெற்றியை அவள் தந்தை விரும்பவில்லை; அவள் காதலையும் அழிக்கத் திட்டமிடுகிறார். தந்தையின் பிடிவாதத்தைத் தகர்ப்பதற்காக டாக்டர் வேதா தற்கொலை செய்து கொண்டதாகக் கதை புனைந்து, கடைசியில் அவள் உயிருடன் எழுந்துவிட்டதாகக் காட்டியிருப்பது 'சப்'பென்ற முடிவு.

ராஜலக்ஷ்மி பிக்சர்ஸின் ''சீதா'' சிரிக்க வைக்கிறாள். அது போதும்.

பத்து லட்சம் (ஹிந்தி)

''ஊமத்தையைத் தின்றால்தான் பித்தம் தலைக்கேறுமாம். ஆனால் பொன்னைப் பெற்றுவிட்டாலே பித்தம் தலைக்கேறி விடுமாம்.''

ஹிந்தி மொழிச் சிலேடைக் கவிதை ஒன்று கூறும் இந்தக் கருத்தை ஆதாரகருதியாகக் கொண்டு எடுக்கப்பட்ட படம் இந்தப் பத்து லட்சம். 'தஸ் லாக்' என்னும் ஹிந்தித் தலைப்பைப் பூண்டு சிறந்த பொழுதுபோக்குச் சித்திரமாகத் திகழ்கிறது.

இந்தப் படத்தைப் பார்க்கும் பொழுது ரசிகர்கள் பொழுதைப் பிடித்துத் தள்ள வேண்டிய அவசியம் நேராது. மாறாகப் பொழுது அவர்களைப் பிடித்து இழுத்துக் கொண்டு பறந்துவிடும்.

இதற்கு முக்கிய காரணம் ஓம்பிரகாஷும் மனோரமாவும் அற்புதமாக நடித்து, அநாயாசமாகப் பேசிப் பார்ப்பவர்களைக் குலுங்கக் குலுங்க நகைக்க வைப்பதுதான். புதுமுகம் பபிதாவும் சஞ்சயும், ஹெலனும் பிராணும் எத்தனைதான் இளமைத் துடிப்பைக் காட்டினாலும், அநுபவ முதுமைக்கு ஈடு கொடுக்க முடியவில்லை, அத்தனை இயல்பான நடிப்பு ஓம்பிரகாஷின் நடிப்பு. சொல்லப் போனால் படத்துக்கு உயிர் கொடுப்பவரே அவர்தான்.

கதையும் அதிகமாகப் பார்த்துப் பார்த்துப் புளித்துப் போகாத கதை: அதைப் படமாக்கியிருக்கும் முறையும் அலுக்காத முறை. அதோடு பாடல்களும் செவிக்கினியவை; கருத்துச் செறிந்தவை.

வண்ணப் படத்துக்கேற்ற இயற்கைக் காட்சிகள் மட்டுமே ஹிந்திப் படங்களில் பார்த்துப் பார்த்து அலுத்தவை. என்றாலும் மொத்தத்தில் தஸ் லாக் பொழுதுபோக்குக்கு உகந்த படம்.





எங்களுக்கும் காலம் வரும்...

டி. எஸ். பாலையாவின் குடும்பத்தில் சம்பளம் ! இல்லாத வேலைக்காரனுகத் தானுக வலிய வந்து மாட்டிக் கொண்ட சஞ்சீவிக்குத் தான் எத்தனை தொல்லை! எத்தனை அடி, உதைகள்! சமய சஞ்சீவியாக வந்து சேர்ந்த சம்பளமில்லாத வேலைக்காரனை சஞ்சீவியை அந்தக் குடும்பத்தினர் படுத்தி வைத்த பாடு கொஞ்சமா? அவ்வீட்டுச் சமையற்காரப் பெண் பட்டு மாத்திரம் இல்லையென்ருல் சஞ்சீவி தொல்லை தாங்காமல் இறந்து போயிருப்பான்.

அசல் பட்டிக்காட்டு அப்பாவி சஞ்சீவியாக நாகேஷ் வருகிருர். அவருக்கே உரிய அற்புதமான நடிப்பு! 'ஸீரியஸ் ரோல்' அவருக்கு மிகவும் பொருத்தம். காமெடியன் நாகேஷை மறந்தே போய் விடுகிருேம்.

டி. எஸ். பாலையா வழக்கம் போல் நன்ருய் நடித்திருக்கிருர். அவருடைய பணத்தாசையும், அதற்காக அவர் செய்யும் அற்பத்தனமான காரியங்களும் சிறப்பாக இடம் பெற்றிருக்கின்றன.

சமையற்காரப் பெண் பட்டுவாக நடிக்கும் பத்மினி, தாம் ஏற்ற பாத்திரத்துக்கு உயிர் கொடுக்கிருர். அப்பாவி சஞ்சீவியை மனிதனுக்கும் கட்டம் ஒன்று போதும்.

''எதிர் நீச்சல்'' நாடகம் பார்க்காதவர்கள் இந்தப் படத்தைப் பார்த்தால் மிகவும் ரசிப்பார்கள். ஆனுல் அந்த நாடகத்தைப் பார்த்தவர்கள்....!

அநாதைக்கு லாட்டரிச் சீட்டில் பெருந்தொகை பரிசாக விழுந்த தகவல் அறிந்ததும் வீட்டில் உள்ளவர்கள் அனைவரும் அவனுக்கு ராஜோபசாரங்கள் செய்வதும், அந்தத் தகவல் தவருனது என்று தெரிய வந்ததும் மீண்டும் அவனை அலட்சியப்படுத்துவதும் திரைக் கதையின் ஜீவநாடி. அதேதான் ''எதிர் நீச்ச''லிலும் ஜீவநாடியாயிருக்கிறது. நாடகத்தில் அப்பாவி மாதுவாக வரும் நாகேஷ், இப்படத்தில் அப்பாவி சஞ்சீவியாக வருகிருர்.

படத்தின் புதிய அம்சம்: நாகேஷ் பத்மினி ஜோடியாக நடிப்பது.

பாராட்ட வேண்டிய அம்சம்: மூலக் கதையின் ஆசிரியர் சம்புமித்திரா என்று கௌரவமாக ஒப்புக் கொண்டிருப்பது.

பாடல்கள் சுமார். ஆனுல் வேதனை அளிப்பதாக இல்லை.

ரவிசந்திரனும் சச்சுவும் காதலித்துத் திரைக் கதைக்குத் திருப்பம் தருகின்றனர். கடைசியில் பாலையா ஓட, ரவிசந்திரன், சச்சு ஓட, பத்மினி, நாகேஷ் ஓடப் படம் ஓடி முடிகிறது.

நல்ல நடிப்புக்காகவும், பாத்திரப் பொருத்தத்துக்காகவும் இந்தப் படத்தைப் பார்த்து மகிழலாம்.



உங்கள் குழந்தையின் அழுகையை
நிறுத்தி, சிரிக்கச் செய்ய,
மானேர்ஸ்
கிரைப் மிக்ஸ்சர்
கொடுங்கள்.
அனுபவமிக்க அன்னையர் குழந்தையின் முதல் வயதில் ஏற்படும் சாதாரண உடற் கோளாறுகளைச் சரி செய்ய மானேர்ஸ் க்ரைப் மிக்ஸ்சரையே நம்புகின்றனர். ஒரு டீ ஸ்பூனளவு மானேர்ஸ் க்ரைப் மிக்ஸ்சர் ஒழுங்கான இடைவேளைகளுக்கிடையே தரப்படுவதால் குழந்தையின் மென்மையான ஜீரண சக்தி சீரான நிலையில் இருக்க முடிகிறது
• வயிற்று உப்புசத்தையும் காற்றையும் அகற்றுகிறது.
• அஜீரணத்தை—குறிப்பாக பல் முளைக்கும் பருவத்தில்—தடுக்கிறது.
• குடல் வலியையும், வயிற்று வலியையும் குணப்படுத்துகிறது.
• ஜீரணேந்திரியங்களைச் சமனப்படுத்தி, நித்திரையை அளிக்கிறது.
Geoffrey Manners & Company Limited

பாவம், பர்ட்டன்!



உலகின் தலைசிறந்த பத்து நடிகர்களுள் ஒருவரான பர்ட்டனைப் பார்த்து, 'பாவம்' என்று பரிதாபப்படுவானேன்?

திறமை மிக்க சில நடிகர்களுக்கு அதிர்ஷ்டமே இருப்பதில்லை. இந்தக் கூற்றுக்குச் சான்றாகப் பிரபல மேல்நாட்டுத் திரைப்பட நடிகர் ரிச்சர்ட் பர்ட்டனைக் கூறலாம். 1954ம் ஆண்டில் ''தி ரோப்'' என்ற திரைப் படத்தில் சிறப்பாக நடித்ததற்காகச் 'சிறந்த நடிகர்' என்ற பிரிவில் 'ஆஸ்கார் பரிசு'க்குப் பரிந்துரைக்கப் பட்டார். ஆண்டுதோறும் திரையுலகின் தலைநகரான ஹாலிவுட் பெருநகரில் வழங்கப்படும் அப்பரிசு அவ்வாண்டு பர்ட்டனுக்குக் கிடைக்கவில்லை. இரண்டாவது முறையாக பர்ட்டன் ''பெக்கட்'' என்ற திரைப் படத்தில் அற்புதமாக நடித்ததற்காக மீண்டும் அப்பரிசுக்குப் பரிந்துரைக்கப் பட்டார். இந்த முறையும் அவருக்கு அது கிடைக்கவில்லை. மூன்றாவது முறையாக அவர் 1965ம் ஆண்டில் ''தி ஸ்பை ஹூ கேம் இன் ஃப்ரம் தி கோல்ட்'' என்ற திரைப்படத்தில் அருமையாக நடித்ததற்காக 'ஆஸ்கார்'ருக்குச் சிபாரிசு செய்யப்பட்டும் அப்பரிசை அவர் பெறவில்லை. அண்மையில் 1966ம் ஆண்டில் வெளிவந்த ''ஹூஸ் அப்ரெய்ட் ஆப் வெர்ஜினியா உல்ஃப்?'' என்ற திரைப் படத்தில் சரித்திரப் பேராசிரியர் ஜார்ஜாக பர்ட்டன் சிறப்பாக நடித்ததால் நான்காவது முறையாக அவர் 'ஆஸ்கார்'ருக்குச் சிபாரிசு செய்யப்பட்டார். இந்த முறை அவருக்கு நிச்சயம் 'ஆஸ்கார்' கிடைத்துவிடும் எனப் பலர் நினைத்தனர். காரணம்? சிறந்த திரைப் படங்களுக்காக வழங்கப்படும் 14 ஆஸ்கார் பரிசுகளில் 13 பரிசுகளுக்கு 'வெர்ஜினியா உல்ஃப்' சிபாரிசு செய்யப்பட்டிருந்தது. பர்ட்டன் 'சிறந்த நடிகர்' பிரிவிலும் அவர் மனைவி எலிஸபெத் டெய்லர் 'சிறந்த நடிகை' பிரிவிலும் ஆஸ்காருக்குச் சிபாரிசு செய்யப்பட்டிருந்தனர். ஆனால் எலிஸபெத் டெய்லருக்குத்தான் 'ஆஸ்கார்' கிடைத்தது. பர்ட்டனுக்குப் பதிலாக பால் ஸ்காபீல்ட் என்ற பிரிட்டிஷ் நடிகருக்குத்தான் சிறந்த நடிகருக்கு வழங்கப்படும் 'ஆஸ்கார்' கிடைத்தது. இதைக் கேள்விப்பட்ட பர்ட்டன் வருத்தப்பட்டுக் கோபத்துடன் கூறினார்: ''இனி அந்த 'ஆஸ்கார் பரிசு'களின் திசைப்பக்கம் கூட நான் போகமாட்டேன்!'' என்று. பாவம் பர்ட்டன்! நான்கு முறைக



ளாக ஆஸ்கார் பரிசைக் கோட்டை விட்ட போதிலும் பார்ட்டன் உலகின் தலைசிறந்த பத்து நடிகருள் ஒருவராக இன்னும் மதிக்கப்படுகிறார் என்றால் அது உண்மை. வெறும் புகழ்ச்சி இல்லை. அவர் நடிகரான விதமே ஒரு சிறுகதை.

பார்ட்டன் 1925ம் ஆண்டில் இங்கிலாந்தில் உள்ள பாண்ட்ரிடைபன் என்ற நகரில் ஒரு சுரங்கத் தொழிலாளியின் மகனாகப் பிறந்தார். அவரது பெற்றோருக்கு பார்ட்டன் பன்னிரண்டாவது மகன். அவரது இயற் பெயர் ரிச்சர்ட் ஜென்கின்ஸ் என்பதாகும். இளம் வயதிலேயே தாயை இழந்த பார்ட்டனை அன்புடன் வளர்த்து ஆளாக்கியவர் அவரது மூத்த சகோதரியான சிசிலியா.

பார்ட்டனைச் சிறந்த முறையில் வளர்த்து அவரைப் புகழ் பெற்ற ஆக்ஸ்போர்ட் சர்வ கலாசாலைக்கு அனுப்ப வேண்டும் என்ற அவா பார்ட்டனின் தந்தைக்கும் மற்றவர்களுக்கும் இருந்தது. அதனால் அவர்கள் முதலில் பார்ட்டனை டால்போட் துறைமுகத்தில் உள்ள ஒரு பள்ளிக்கூடத்துக்குக் கல்வி பயில அனுப்பினர். அங்குதான் பார்ட்டனின் வாழ்க்கையில் ஓர் அசாதாரணமான திருப்பம் ஏற்பட்டது. அப்பள்ளிக்கூடத்தில் ஆசிரியராகப் பணியாற்றி வந்த பிலிப் பார்ட்டன் என்பவர் பார்ட்டனைத் தம்முடைய கண்ணின் மணி போலக் கவனித்து ஆதரவளித்தார். பிலிப் பார்ட்டன் அப்பள்ளியில் ஆங்கில ஆசிரியராகவும் நாடக ஆசிரியராகவும் பணியாற்றி வந்தார். பார்ட்டனின் குரல் வன்மையை உணர்ந்த அவர் பார்ட்டனை ஒரு நடிகராக்க வேண்டும் என்று லட்சியம் கொண்டார்.

அதற்காக பார்ட்டனுக்கு விசேஷப் பயிற்சிகள் அளிக்கத் தொடங்கினார். சொல் உச்சரிப்பில் (Voice Modulation) சிறப்பாக விளங்குவதற்காக பார்ட்டனுக்கு அவர் வித விதமான பயிற்சிகளை அளித்தார். பார்ட்டனை ஒரே சமயத்தில் ஐந்து தொலைபேசிகளில் பேசிப் பழகுமாறு பணித்தார். மனிட் மர்காம் மலைச் சிகரத்தின் மீது பார்ட்டனை ஏற்றி ஷேக்ஸ்பியரின் ''ஹாம்லெட்'' நாடகத்தைப் பலமுறை உணர்ச்சியுடன் படிக்க வைத்தார்.

இந்தப் பயிற்சிகள் எல்லாம் முடிந்தபின் ஆக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தில் உள்ள எக்ஸ்ட்டர் கல்லூரியில் சேர்ந்தார் பார்ட்டன். அப்போதுதான் தமது ஆசிரியரின் நினைவாகத் தமது பெயரை ரிச்சர்ட் பார்ட்டனாக மாற்றிக் கொண்டார். கல்லூரி நாட்களில் பல நாடகங்களில் நடிக்க ஆரம்பித்தார்.

மீண்டும் ஒரு விநோதமான திருப்பம் பார்ட்டனின் வாழ்வில் ஏற்பட்டது. உலகப் புகழ் பெற்ற 'பிரிட்டிஷ் ஓல்ட் விக்' என்ற நாடகக் குழுவில் சேர்ந்த பார்ட்டன் அக்குழுவினர் நடத்திய ஷேக்ஸ்பியரின் 'ஹாம்லெட்' நாடகத்தில் ஹாம்லெட்டாக நடிக்கத் தொடங்கினார். ஷேக்ஸ்பியரின் கதாபாத்திரங்களில் மிகச் சிக்கலானது 'ஹாம்லெட்' தான். ஒரு நடிகரின் திறமை அத்தனையும் சோதித்துப் பார்ப்பதும் 'ஹாம்லெட்' பாத்திரம்தான். ஆங்கில நாடகத்தின் சரித்திரத்திலேயே 'ஹாம்லெட்'டாக நூறு முறைகளுக்கு மேலாக நடித்துப் புகழ் பெற்றவர்கள் ஸர் ஹென்றி இர்விங், ஸர் ஹெர்பர்ட் ட்ரீ, ஸர் ஜான் கில்கட் என்ற மூவர்தான். ஆனால் பார்ட்டனின் 'ஹாம்லெட்' நாடகம் நூறு முறைகளையும் தாண்டி, அவரது புகழை நிலைநாட்டி விட்டது.

பார்ட்டன் ஹாம்லெட்டாக நடிப்பதைக் கண்டு களித்தவர்களுள் காலம் சென்ற வின்ஸ்டன் சர்ச்சிலும் ஒருவர். வழக்கமாக நாடகத்தின் முதல் காட்சியைப் பார்த்தவுடனே எழுந்து சென்றுவிடும் சர்ச்சில் அன்றிரவு பார்ட்டனின் ''ஹாம்லெட்'' நாடகத்தை அது முடியும்வரை கண்டு களித்தார். அது மட்டுமின்றி பார்ட்டன் ஷேக்ஸ்பியரின் உணர்ச்சி மிக்க வசனங்களைப் பேசும் போது சர்ச்சிலும் மெதுவாகப் பேசத் தொடங்கினார். சர்ச்சிலின் குரலுக்கும் தமது குரலுக்கும் பயங்கர ஒற்றுமை இருந்ததை அன்று தான் பார்ட்டன் கண்டார்.

''ஹாம்லெட்'' நாடகத்தில் பார்ட்டனுக்குக் கிடைத்த புகழைக் கேள்வியுற்ற பல திரைப்படத் தயாரிப்பாளர்கள் பார்ட்டனைத் தத்தம் தயாரிப்புக்களில் நடிக்க வைத்தனர். இருந்த போதிலும் பார்ட்டன் நாடகங்களில் நடிப்பதையே பெருமளவில் விரும்பினார்.

1960ம் ஆண்டு வரை பார்ட்டன் பல திரைப் படங்களில் நடித்திருந்த போதிலும் உலகப் புகழ் பெறவில்லை. 1960ல் ''கிளியோபாட்ரா'' தயாரிக்கப்பட்ட சமயத்தில் பார்ட்டன் எலிஸபெத் டெய்லரோடு நெருங்கிப் பழகிய போதுதான் உலகப் பிரசித்தி பெற்றார். ''கிளியோபாட்ரா'' சிறந்த படமாகப் பார்ட்டனைப் பொறுத்தவரை அமையா விட்டாலும் பார்ட்டனைத் திரையுலகில் நிலைநிறுத்தியது. ''கிளியோபாட்ரா''வுக்கு முன் பார்ட்டன் ஒரு படத்தில் பத்து லட்ச ரூபாய்கள் வாங்கினார். ஆனால் இப்போது 40 லட்சம் ரூபாய்க்கு மேல் வாங்குகிறார்.

—அ. இராமதுரை

அத்தியாயம் 16

தேவி கம்பெனியில் சேஷனைக் கண்டதும் ஜானுவுக்கு நிம்மதி உண்டாயிற்று. சேஷனை இதற்கு முன் மூன்று தடவைகள் பார்த்திருக்கிறான்! ஏன் ஒரு தடவை ஐந்து நிமிஷ நேரம் அவனுடன் உட்கார்ந்து பேசியும் இருக்கிறான். ஒரு தடவை அவன், அவள் வந்தபோது சந்தானம் இல்லாமற் போகவே, காப்பி உபசாரம்கூடச் செய்திருக்கிறான்.

''மிஸ்டர், சேஷன்! நீங்கள்தான் இப்போ, ''ஒன் மினிட் ப்ளீஸ்'னு என்னை நிறுத்தினீர்களா?''

''ஆமாம்! உள்ளே சந்தானமும் இன்னொருவரும் ஏதோ மும்முரமாகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.''

''ரொம்ப முக்கியமான பேச்சா?'' பொறுமை இழந்த ஜானுவின் அவசரம் வார்த்தைகளில் ஒலித்தது.

''ஆமாம் போலிருக்கு. வந்த ஆள் திரும்பிப் போகிற வரைக்கும் யாரையும் உள்ளே விட வேண்டாம்'னு சொல்லியிருக்கார். இது மாதிரி தடை உத்தரவு போடற வழக்கமே அஸிஸ்டெண்டு மானேஜருக்குக் கிடையாது.''

''அப்படியா?'' என்று ஜானு சுற்றுமுற்றும் பார்த்தான். பிறகு, ''நீங்கள் இப்படியா உட்கார்ந்து கொண்டிருந்தீர்கள்?'' என்று சேஷனைப் பார்த்துக் கேட்டான்.

''ஆமாம்....'' என்று சொல்லி விட்டு அவன் சிரித்தான்.

''ஏன்?''

''நான் வீட்டுக்குப் போகலாம்'னு விளக்கை அணைச்சுட்டுக் கிளம்பினப்ப இந்த ஆள் வந்தார். சந்தானம் உட்



காரச் சொன்னூர். சும்மா உட்காருவதற்கு வெளிச்சம் எதற்கு? இப்போ நீங்கள் ஏன் நிற்கிறீர்கள்? உட்காருங்கள். ஃபானைப் போடுகிறேன்.''

அவனுடைய பருத்த சரீரம் குலுங்கிக் குலுங்கி ஓடியது, மின்சார விசிறியைப் போடச் சென்றபோது. அவன் திரும்பி வந்து, ''நான் உங்க குடும்ப விஷயங்களில் தலையிடறேனேன்னு தப்பா நினைச்சுக்காதீர்கள். அக்கா கலியாணம் எந்த மட்டில் இருக்கு? எனக்கு எல்லாம் தெரியும். ஆனால் நிச்சயமாயிடுத்தா இல்லியான்னுதான் தெரியாது....!'' என்றான்.



''இந்த மாசக் கடைசியிலே நடக்கும்....!''

''அப்படியா? இதே ஊரிலேதானே? எங்களுக்கெல்லாம் சாப்பாடு உண்டு இல்லியா?''

''பழநியிலேதான் கலியாணம் இருக்கணும்னு பின்னே சொல்லி விட்டார்....!''

''ஏன்? பிரார்த்தனையா? அல்லது ஊர்க் கூட்டம் கூட்டாமல், இரண்டாம் மனுஷனுக்குத் தெரியாமல் செய்து கொள்ளணும் என்கிற எண்ணமா? முதல் முதல்லே ஒரு பெண்ணுக்குக் கலியாணம் பண்ணறபோது, இருக்கிற ஊரிலேயே பண்ணணும்னு பெற்ற தாயாருக்கு இருக்காதோ?''

வக்கணையாகப் பேசும் சேஷனைப் பார்த்து ஜானு சிரித்தாள். அவளுடைய அவசரத்திலும், சந்தானத்துடன் பேசிக் கொண்டிருக்கும் ஆனால் தன் இட்டம் குட்டிச்சுவராகப் போய்க் கொண்டிருக்கிறதே என்ற வெறுப்பிலும்கூட அவளுடைய இயற்கையான ஹாஸ்ய உணர்ச்சி மறைந்து விடவில்லை.

''ஏன், சொல்கிறதில் ஏதாவது தப்பு இருக்கா?''

''அதெல்லாம் ஒண்ணும் இல்லே. ரொம்ப கவிஞ.... கவியரா அனலைஸ் பண்ணச் சொல்கிறீர்களேன்னுட்டுத் தோணித்து. சிரிச்சேன்....''

''பிரார்த்தனையை முன்னிட்டுத்தான் பழநி. திருப்பதின்னு முன்னெல்லாம் போவா. இல்லாட்டா இரண்டாம் தாரம், மூணும்தாரம்னு இருக்கும். இப்போ செலவை உத்தேசித்து இந்தப் புண்ணிய க்ஷேத்திரங்களுக்கு ஓடறா. பாதிப் பேர் கலியாணத்தைத்தான் அங்கே நடத்துகிறார்களே ஒழிய, ஸ்வாமி தரிசனம்கூடச் செய்ய மறந்துடறா!''

''இது இரண்டாம் தாரக் கலியாணம் தான்!''

''அது எனக்குத் தெரியும்....!''

இப்போது ஜானுவுக்குக் கோபம் இலேசாக வந்தது.

''பின் ஏன் இவ்வளவு கேள்விகளை நீங்கள் கேட்டீர்கள்?''

பீ.வி. ஆர்

'புதிசா ஏதேனும் தெரியறதான்னு பார்க்க....!' என்று தன்னுள் முணு முணுத்த சேஷன், பதில் சொல்லாமல் சிரித்து விட்டு, ''கொஞ்சம் இருங்கள் !'' என்று எழுந்து சந்தானத்தின் அறைப் பக்கம் போனான். கதவு சாத்தப்பட்டிருக்கவே, கதவண்டை நின்று காதைக் கூர்மையாக்கிக்கொண்டு ஒரு நிமிடம் நின்றான்.

அடுத்த நிமிஷம் அவன் திரும்பி வந்து, ''ஒண்ணும் சரியாக் காதிலே விழமாட்டேன் என்கிறது. இரைச்சல் தான் கேட்கிறது. சண்டையா சமாதானமான்னு கூடத் தெரியல்லே ?'' என்றான்.

''கம்பெனி விஷயமாக வந்திருக்கிற வரா, அவர் ?''

''கம்பெனியும் இருக்கு. சொந்தமும் இருக்கு !'' என்று சொல்லிவிட்டுச் சேஷன் சிரித்தான்.

அவன் அநாவசியமாகச் சிரிக்கிறான் என்று நினைத்த ஜானு, ''நான் ஃபோன் செய்த போது, 'வா' என்றாரே ?'' என்று மெல்லிய குரலில் தனக்குத் தானே பேசிக் கொள்ளுபவளைப் போலக் கூறினாள்.

''நீங்க வர்றத்துக்கு ஏழெட்டு நிமிஷங்கள் இருக்கிறப்போதான் அவர் வந்தார்.....''

''ரொம்ப நேரம் ஆகுமா?''

''அது அந்த ஆளின் புத்திசாலித் தனத்தைப் பொறுத்திருக்கிறது!''

''அப்படின்னா ?''

''என்ன கெஞ்சினாலும், கராடியாய்க் கத்தினாலும், கத்தியைக் காட்டி மிரட்டினாலும்கூட, இந்தச் சந்தானத்திடம் தம் வேலை பலிக்காது என்று அந்த ஆளுக்கு எப்போது தெரியறதோ அப்போது வெளியே வருவார். அதுக்கு எத்தனை நாழிகை ஆகும்னு யாரால் சொல்ல முடியும்?''

''கத்தியைக் காட்டிப் பயமுறுத்துவாரா?'' ஜானு பயத்தில் எழுந்தாள்.

''சேச்சே! நீங்கள் ஒன்று. நான் ஏதோ பேச்சுக்குச் சொன்னேன். போயிருக்கிற ஆள் இருக்கிறாரே, அவருக்கு அசாத்தியத் தைரியமும், நெஞ்சுஅழுத்தமும் நம்பிக்கையும் உண்டு. ஆனால் நேரடியாகச் சண்டை கிண்டை ஒன்றும் போடமாட்டார். இரைந்து பார்ப்பார். இல்லாட்டா அழுது பார்ப்பார். வேறு ஒன்றும் தெரியாது !''

''ரொம்பக் கச்சிதமா எடை போட்டிருக்கிறீரே!'' என்று கூறி ஜானு உட்கார்ந்து கொண்டாள். சந்தானம் கத்தி முனையில் தவிப்பதைக் கற்பனை செய்து பார்க்கவும் அவள் மனம் நடுங்கியது.

''வந்திருக்கிறவர் யார்னு எனக்குத் தெரியும். ஆனால் நாங்க ரெண்டு பேரும் பரஸ்பர அறிமுகம் உள்ளவர்கள் என்று மிஸ்டர் சந்தானத்துக்குத் தெரியாது !'' என்றான் சேஷன்.

இது அநாவசியச் சமாசாரம் என்று எண்ணிய ஜானு, ''சரி, மணி ஏழு ஆகிவிட்டது. நான் வீட்டிலே பார்த்துக் கொள்கிறேன்'' என்றாள்.

''இருங்கள். உள்ளே நடக்கிறதொந்த யுத்தத்தின் முடிவை, அது நாம் எதிர் பார்க்கிற முடிவுதான் என இருந்தாலும், தெரிஞ்சுண்டு போங்கள். உங்களுக்கும் அதில் அக்கறை இருக்கும்!''

ஜானுவுக்குத் தலைகால் புரியவில்லை.

''என்ன சொல்லுகிறீர்கள்?''

''வந்திருக்கிறவர் யார் தெரியுமா?''

''தெரியாது.''

''உங்க வீட்டுக்கு மாப்பிள்ளையாக வரப் போகிறவர் !'' .

அடுத்தகணம் ஜானு துள்ளி எழுந்தாள். இது என்ன எதிர்பாராத திருப்பம் ? அப்போது ரகுபதி சந்தானத்திடம் சண்டை போடவா இங்கே வந்திருக்கிறார்? எதற்கு? வீட்டில் நடப்பதும், அம்மாவிடம் சந்தானம் சொன்னதும் அலமேலு அம்மாள் மூலம் ரகுபதியின் காதுகளுக்கு எட்ட அவன் நேரவே வந்து விட்டானோ?

''ரகுபதியா வந்திருக்கிறார்?''

''அதுதானே சீதாவுக்குப் பார்த்திருக்கிற பிள்ளையின் பெயர்?''

''ஆமாம்!''

''அப்படியானால் அவர்தான்....''

''இதை முன்னாடியே சொல்லியிருக்கக் கூடாதா?''

''நீங்கள் வந்திருக்கிறவர் யார்னு கேட்கலியே? அதுவுமல்லாமல், யாரையும் உள்ளே விட வேண்டாம்னு சந்தானம் சொல்லியிருக்காரே!''

''இந்த ரகுபதியை நேரிலே சந்தித்துப் பேசத்தான் நானே இன்னிக்கு இங்கே வந்திருக்கேன் !''

''அடப் பாவமே ! எனக்குத் தெரியாதே !'' என்றான் சேஷன்.

ஜானுவுக்கு அழுகையும் கோபமும் பீறிட்டுக் கொண்டு வந்தன ! ஆனால் ஒன்றும் தவறிப் போய்விடவில்லை என்ற நினைவும் அதே சமயத்தில் எழுந்தது. அவள் யாரைப் பார்க்கப் போக வேண்டும் என்று இருந்தாளோ, அவரே இங்கே இருக்கிறார் ! இப்போதே பார்த்து விடலாம் !

''நான் இப்போதே இரண்டு பேரையும் பார்க்கிறேன் !'' என்று கூறி அவள் எழுந்தாள்.


ரோஜாப்
பூப்போட்ட
பழுப்புக்
காவிநிறம்..
ஒரு கேம்ப்ரிக்
தருவது
எஸ்ஆரெம்
ஒன்றே
மேலும் பல ரகங்கள். கோல நிறங்கள். தரக்கூடியது
எஸ்.ஆர்.எம் ஒன்றுதான். தரமோ பல நாடுகளிலே நற்
பெயரெடுத்தவை.
உடுப்போ, சேலையோ, ரவிக்கையோ, உங்களுக்குப்
பொருந்தும் வண்ணச் சேர்க்கைகளும் கோலநிறங்களும்
டஜன் கணக்கில் உள்ளன. தவறாமல் வந்து பாருங்கள்:
எஸ்.ஆர்.எம் தரும் வாயில்கள், சாயம் தோய்த்த மற்றும்
பிரின்டெட் வாயில்கள், லீனுக்கள், டோரியாக்கள்,
கேம்ப்ரிக்குகள், பாப்ளின்கள், மற்றும் 2x2 புட்டாக்கள்.
வேறெங்குமே கண்டிராத கோலநிறங்களைக் காண்பீர்கள்.
S R M
ஸ்ரீ ராம் மில்ஸ் லிமிடெட்
டிலைல் ரோடு, பம்பாய் 13
ASP/SRM-1/67 TAM

''நான் சொல்லுவதை நீங்கள் கேட்பீர்களானால்....'' என்று ஆரம்பித்த சேஷன், தாழ்ந்த குரலில், ''இப்போ நீங்கள் போனால் உங்கள் காரியமே குட்டிச்சுவராகப் போகும். மிஸ்டர் சந்தானத்திடமே பொறுப்பை விடுங்கள்!'' என்றான்.

ஜானுவுக்குச் சேஷன் சொல்லுவதிலும் உண்மை இருப்பதாகப்பட்டது. திடீரென்று அவள் அவனைப் பார்த்துக் கேட்டாள் :

''உங்க மனசில் உள்ளதை உள்ளபடி சொல்லணும். ரகுபதியைப் பற்றி உங்களுக்கு என்ன தெரியும்? அவர் எப்படிப்பட்டவர் ?''

சேஷன் சிரித்தான்.

''நீங்கள் இந்தக் கேள்விகளைக் கல்யாணத்தை நிச்சயம் பண்ணுவதற்கு முன்னாலே கேட்டிருக்கணும். இப்போது நான் சொல்லுவது அநுசிதமாகிவிடும்!''

''வாஸ்தவம்தான். ஆனால் நாங்க தீர விசாரிக்க முடியாமல் அடிச்சுட்டாளே, இந்த அலமேலு மாமி! அம்மாவுக்கும் மருந்தோ மாயமோ வைச்சு மயக்கி விட்டாள்....''

''யாரு, அலமேலு மாமியா? ஓ! அந்த மாட்ரிமோனியல் ஏஜண்டா? பேஷ்.....!''

''உங்களுக்குத் தெரியுமா அவளை?''

''கலியாணமாகாத எல்லாப் பிள்ளைகளையும் அவளுக்குத் தெரியும். ஜாதகம் கணிச்சுக் கொடுப்பாள், தேவைக்கு ஏற்றபடி மாற்றியும் கொடுப்பாளே! அப்பப்பா, அவளா இதில் தூது போகிறாள்? பேஷ், பேஷ்!''

ரகுபதி எப்படிப்பட்டவராக இருந்தாலும் இனி ஒன்றும் செய்ய முடியாதோ என்று பயந்தாள் ஜானு. தான் இனிமேலும் இதில் தலையிட்டுச் சீதாவின் வாழ்க்கைக்கு முட்டுக்கட்டை போடுவதில் அர்த்தமில்லை எனப் பட்டது அவளுக்கு. மேலும் சீதாவே அதை விரும்பாவிட்டால், நல்லது செய்கிறோம் என்று எண்ணி அவள் கடைசியில் பழிகாரி என்ற பட்டத்தை அல்லவா பெறுவாள் ? இரண்டாம் தாரம்! ஆனால் சீதாவுக்கு ஆட்சேபணை இல்லை! பார்க்க, கண்ணுக்கு உகந்தவன் இல்லை என்று சந்தானமே சொல்லியிருக்கிறான்! அதனால் என்ன? சீதா பரவாயில்லை என்று விட்டு விட்டாள். இப்படிச் சீதாவே எப்படியோ இருக்கட்டும் என்று விட்டு விட்ட பின் ஜானு ஏன் அநாவசியமாக அலட்டிக் கொள்ள வேண்டும்? நாற்பது வயதுக்கு மேல், மனைவியை இழந்து பதினைந்து வருடங்களுக்குப்பின், இரண்டாம் கலியாணத்துக்கு ரகுபதி தவிக்கிறானே, அலமேலு அம்மாள் ராட்



□ தீ, பீதி இவ்விரண்டில் வேகமாகப் பரவுவது பீதி என்கிறார் ஒருவர். உண்மையே. இல்லாவிட்டால் தீயணைக்கும் வண்டிகளில் தீயணைக்கத் தண்ணீருடன், தன்னுடைய வருகையை முன்னதாகவே அறிவித்துப் பீதியை அணைக்க மணி ஓசையையும் இணைக்கும் யோசனை முதன்முதலில் ஒருவருக்கு உதித்திராதல்லவா?

தீயணைக்கும் வண்டிகளில் எப்போதும் தயாராகத் தண்ணீர் நிரப்பி வைத்திருக்க வேண்டும் என்ற யோசனை அடிக்கடி வெளியாகக் கூடியதுதான். புதிதல்ல. ஆனால் மணி ஓசையைப் பற்றி யாரும் கவலைப்படுவதாகத் தெரியவில்லை. சில சமயங்கள் வண்டிகளின் மணி ஓசை கணீர் என்று கேட்பதில்லை. மணிகளில்தான் குறை ஏற்படுகின்றதோ, அல்லது அவற்றை அசைப்பவர்கள்தான் சரியாக மணிகளை அடிப்பதில்லையோ, காரணம் எதுவானாலும் சரி. தீயணைக்கும் வண்டிகளுக்கே அழகு தருவது அவற்றின் பளபளக்கும் மணிகளும் அதிலிருந்து கிளம்பும் ஒலியும்தான் என்பதை மறந்து விடக் கூடாது.

□ ரோட்டரி சங்கத்தின் கொள்கைகள் சிலவற்றை உதவிப் பிரதமர் மொரார்ஜி தேசாய் கண்டித்துப் பேசியுள்ளார். ''வளரும் ஜனநாயகத்துக்கு ஏற்றபடி இதன் பழம் கொள்கையும் ஆடம்பரமும் மாறவில்லை. முக்கியமாக இந்தச் சங்கங்களில் மாதர்களுக்கு இடம் கொடுக்காதது ஒன்றே இதன் பிற்போக்குத் தன்மையை விளக்கப் போதியதாகும்'' என்றெல்லாம் கூறி, அதைத் தில்லி வைபவம் ஒன்றில் இடித்துரைத்திருக்கிறார்.

மொரார்ஜியின் இந்தத் தாக்குதலுக்கு அந்த வைபவத்தில் யாரும் பதில் கூறவில்லை என்பது குறிப்பிடத் தக்கதாகும்.



சச வேகத்தில் ஏற்பாடுகளெல்லாம் செய்கிறாளே என்ற காரணங்களினால் தானே, ஜானுவுக்குப் பயம், சந்தேகம் எல்லாம் தோன்றின? இனி ரகுபதி தான் கணவன் என்று சீதாவுக்கு விதி நிர்ணயம் செய்து விட்டால் அப்புறம் யார் என்ன கவலைப்பட்டும் பிரயோசனமில்லை! ரகுபதியின் குணம் இது நாள் வரையில் எப்படியிருந்ததோ என்று அறிய அவள் இனி ஆர்வமோ, ஆவலோ காட்டி யாருக்கும் ஒரு புண்ணியமுமில்லை.

ஜானுவின் சிந்தனை அவளுக்கே அலுப்பாக இருந்தது.

''ஏன், நின்னுண்டே இருக்கிறீர்கள்? உட்காருங்கள்....!'' என்றான் சேஷன்.

இயந்திரமாக அவள் இயங்கி, நாற்காலியில் உட்கார்ந்தாள்.

அதே கணம் தடாரென்று சத்தம் கேட்டது. ஜானுவுக்குத் தூக்கிவாரிப் போட்டது. அவள் சத்தம் வந்த திசையில் திரும்பிப் பார்த்தாள்.

உயரத்தைக் காட்டிலும் அகலமே அதிகம் கண்ணில் அடிக்கும் ஓர் உருவம் 'விருட்'டென்று சந்தானத்தின் அறையிலிருந்து வெளியேறி, ஜானு இருக்கும் இடத்தை நோக்கி விரைந்து வந்தது.

சேஷன் அருகே வந்தபோது அவன் நின்றான். விளக்கு வெளிச்சத்தில் ஜானு, தன்னுடைய அக்காளுக்குப் புருஷனாக வர இருப்பவனை, கண் இமைக்காமல் பார்த்தாள்.

கழுத்திலிருந்து சரசர வென்று இறங்கிய தோள் பட்டை. இரண்டு கைகளுமே நீளமற்றதாகப்பட்டன. 'ஸ்லாக்' ஷர்ட்டைத் தள்ளிக்கொண்டு முன்னேறிய வயிறு அவளுக்கு அசிங்கமாகக்கூடத் தோன்றியது.

''என்ன சார், அதுக்குள்ளே கிளம்பி விட்டீர்களா?'' என்றான் சேஷன்.

ரகுபதி, ''டேய் சேஷா! உன் அஸிஸ்டெண்டு மானேஜர் என்னை என்னமோ சாதாரண ஆள். இழுத்தால் நீளக்கூடியவன்னு நெனைச்சிண்டிருக்கார். இன்னிக்கு விட்டு விட்டேன். ஆனா அவர்கிட்டே நான் எப்பேர்ப்பட்டவன் என்கிறதைச் சொல். என்ன தெரிந்ததா?'' என்று சொல்லி விட்டு, அருகே அழகே உருவமாய் நின்ற ஜானுவை ஏறிட்டுப் பார்த்தான். ஜானு தலை குனிந்தாள்.

''சரி, சார்!'' என்ற சேஷன், ரகுபதி ஜானுவைப் பார்க்கும் பார்வை வெறுப்பை அளிக்கிறது என்பதைக் காட்ட, ''அப்போ நீங்கள் போயிடுங்கள் சார் சீக்கிரம். அவர் வரப் போகிறார்!'' என்றான்.

ஆனால் ரகுபதி அசையவில்லை.

''அவள்தான் இந்த ஆபீஸ் டைப்பிஸ்டு. அமிர்தம்னு பேரு.... எங்களுக்கு நேரமாகிறது!'' என்றான் சேஷன்.

திடுக்கிட்ட ஜானு சிறிது நெளிய, அதன் காரணத்தைப் புரிந்து கொள்ள முடியாத ரகுபதி, மெதுவாக அங்கிருந்து நகர்ந்தான்.

கடைசியாக வெளியேறுமுன், ''உங்க சந்தானத்துக்கிட்டே சொல்லு. கொட்டுனாத்தான் தேளு, கொட்டா விட்டால் பிள்ளைப் பூச்சின்னு... நான் பெரிய செந்தேள்....'' என்றான்.

''அப்படியே சொல்கிறேன், சார்!''

அதே சமயத்தில் தன் அறையிலிருந்து வெளியே வந்த சந்தானம், ''என்ன சேஷா, அவருடன் என்ன பேச்சு உனக்கு....? நான் அவரை அப்பவே வெளியே போகச் சொன்னேனே!'' என்றான். அவனுடைய வார்த்தைகளில் தோய்ந்த கடுமையையும் ஆவேசத்தையும் கண்டு ஜானுவே பயந்துபோனாள். சிரிப்பையும் சாந்தத்தையும் பரிவையும் தவிர வேறு எதையும் சந்தானத்திடம் பார்த்திராத அவள், அவனை உக்கிரமூர்த்தியாகக் கண்டபோது அதை அவளால் நம்பவே முடியவில்லை.

சந்தானத்தின் இரைச்சலுக்குப் பிறகும் ரகுபதி தயங்கி நிற்கவே,



''ஒரு பெண்மணி மட்டும் சங்கத்தில் அங்கம் வகித்திருந்தால் மொரார்ஜியால் இப்படி இடித்துரைத்திருக்க முடியுமா? அப்படியே இடித்துக் கூறியிருந்தாலும் பதில் தாக்குதல் பெறாமல் திரும்பி யிருக்க முடியுமா? எல்லோரும் ஆம்பிள்ளை அங்கத்தினர்களோ இல்லையோ, அதனால்தான் மொரார்ஜியின் தாக்குதலைக் கேட்டுக் கொண்டு 'கப்சிப்' பென்று வாயை மூடிக் கொண்டு இருந்து விட்டார்கள்!'' என்று கூறுகிறாள் என் சகதர்மிணி.

☐ ஜாம் நகரில் இரவு மழை காரணமாக ஒரு சினிமாக் கொட்டகையைச் சுற்றி வெள்ளம் நிறைந்து விட்டது. படம் பார்த்துக் கொண்டு உள்ளே இருந்த ரசிகர்களைப் படகுகள் மூலமாக அதிகாரிகள் வெளியேற்ற வேண்டியதாயிற்று! — ஒரு செய்தி

இந்த மாதிரி ரசிகர்கள் வெளியேற முடியாத சமயம் பார்த்துத்தான் சில படங்களாதும் ஓட முடிகிறது! —**கொக்கி**



''காலேஜ் திறந்தாச்சே! எல்லாம் வாங்கிட்டியா?''

''ஓ! காமிராவும், டிரான்ஸிஸ்டரும் வாங்கியாச்சு; இன்னும் புத்தகங்களும் நோட்டுக்களும்தான் பாக்கி!''

□ □ □ □ □ □ □ □ □ □ □

''மிஸ்டர், ரகுபதி! இப்போ நீங்க வெளியே போகாவிட்டால், யார் தேளு யார் பிள்ளைப்பூச்சிங்கிறதைக் காண்பிச்சுடுவேன். யூ கெட் அவுட்!'' என்றான்.

ரகுபதி அதற்கு மேல் அங்கே நிற்கவில்லை.

அவன் போனதும், ஜானு பக்கம் திரும்பிய சந்தானம், ''இவனைத்தான் உன் அம்மா தன் மாப்பிள்ளையாக வரணும் என்கிறா!'' என்றான். பிறகு, ''ஆனால் எனக்கு என்ன வந்தது....? நான் சுவரிலேதான் முட்டிப்பேன்னு ஒருத்தர் ஒத்தைக் காலிலே நின்னா நன்னா முட்டிக்கட்டும்....'' என்று மூச்சு விடாமல் கத்தினான்.

ஒரு கணம் பயத்தில் நடுங்கிய ஜானு, ''இப்போ என்ன நடந்தது ? அவர் எதற்கு வந்தார்? கல்யாணம் நடக்கப் போகிறதா, இல்லையா ?'' என்று கம்மிய குரலில் கேட்டாள்.

''வா.... வா.... அப்புறம் பேசிக்கலாம். சேஷன், நீயும் வா. உன்னை வழியிலே இறக்கி விடுகிறேன்.''

வெளியே போனதும் ஒரு டாக்ஸி கிடைத்தது.

டாக்ஸியில் அமர்ந்ததும், ''இந்தக் கல்யாண விஷயமாய் என்னுடன் அவன் பேச வருகிறான்னு தான் நெனைச்சேன். ஆனால் கொஞ்ச நேரம் பேசின பிறகுதான் எதுக்கு வந்திருக்கிறான்னு தெரிஞ்சுது...'' என்றான்.

''எதற்கு?''

இடைரென்று ஏன் இந்தப் பேச்சை இப்படி ஆரம்பித்தோம் என்று சந்தானம் பல்லைக் கடித்துக் கொண்டான். ஜானு கேட்கிற கேள்விக்கு ஒரு வார்த்தையாலோ ஒரு வாக்கியத்தாலோ பதில் சொல்லிச் சமாளிக்க முடியாது. முதல் பதில் பல கேள்விகளைத் தூண்டும்! அப்புறம்? ரகுபதியின் பழைய சரித்திரம், அவன் தேவி கம்பெனியில் விளையாடிய விளையாட்டுகள் எல்லாம் நெல்லிக்காய் மூட்டையிலிருந்து சிதறுவது போல் வெளியே விழுந்து சிதறும். அதையெல்லாம் ஜானு ஒன்று விடாமல், அம்மாவிடமும் சீதாவிடமும் சொல்லுவாள். மனம் நொந்து போகும் சீதாவால் ஒன்றும் செய்ய இயலாது. பாகீரதி, இதுவும் சந்தானம் 'உருவேத்தின' கட்டுக் கதை என்று அலட்சியப் படுத்துவாள்! கல்யாணமும் இதனால் பாதிக்கப்படப் போவதில்லை.

''என்ன பதில் சொல்லவில்லை?'' என்று ஜானு தூண்டினாள்.

''அந்தப் பதிலுக்கும் உனக்கும் சம்பந்தம் இல்லை. கம்பெனி விஷயம்'' என்றான் சந்தானம்.

அவன் எதையோ மறைக்கிறான் என்பது ஜானுவுக்கு நிதரிசனமாகத் தெரிந்தது. ஆனால் அவன் வேண்டுமென்றே மனத்தினுள் புதைத்து விட்டதை அவளால் எப்படித் தோண்டி எடுக்க முடியும்? சமயம் வருகிறபோது அவனாகவே சொல்லுவான் என்று இருந்தாள். மவுண்டுரோட்டில் சேஷன் இறங்கிக் கொள்ள, ஜானுவும் சந்தானமும் மயிலாப்பூருக்குச் சென்றார்கள்.

''நீ எதற்கு ஆபீசுக்கு வந்தாய்?'' என்று நிதானமாகக் கேட்டான் சந்தானம்.

''ரகுபதி விஷயமாகத்தான். நாம் இரண்டு பேருமாய்ப் போய்ப் பார்க்கலாம்னுதான்.....!''


''உங்க வீட்டிலே எல்லாருக்கும் இப்போ பைத்தியம் பிடிச்சிருக்கு. அம்மா ஒண்ணையே நெனைச்சு நெனைச்சு, அதைத் தவிர வேறு எதுவும் உலகத்திலே இல்லை என்கிற பாவனையில் இருக்கிறாள். சீதா அம்மா இட்ட கோடுதான் சரியான கோடு என்கிறாள். நீ என்னமோ வீட்டுக்கே உன்னால்தான் கதி மோட்சம் ஏற்படும்னு நிக்கறே! சேச்சே...!'' என்று அலுத்துக் கொண்டான் சந்தானம். (தொடரும்)

அத்தியாயம் 28

நேதாஜியின் குரல்

ரங்கமணி உள்ளே வந்ததும் அந்தப் பெண் கதவைச் சாத்தி உள்பக்கமாகத் தாளிட்டாள். மாடி அறையில் வெளிச்சம் அதிகமில்லாததால் மின்சார விளக்கை ஏற்றினாள்.

ரங்கமணி அந்த அறையைச் சுற்று முற்றும் பார்த்தான். அந்த மாடிப் பகுதி நான்கு அறைகளைக் கொண்டிருந்தது. மாடிப் படியை அடுத்து ஒரு பெரிய அறை, அதை ஒட்டிப் பக்கத்



தில் ஓர் அலங்காரப் படுக்கை அறை, அதை ஒட்டினாற் போல் குளியலறை, சற்றுத் தள்ளிச் சிறு சமையல் அறை— அறைகள் சிறிதாயிருந்தாலும் அந்தப் பெண் அவைகளைச் சுத்தமாகவும் கவர்ச்சிகரமாகவும் வைத்திருந்தாள்.

அந்தப் பெண் மணமானவள் என்று தீர்மானித்தான் ரங்கமணி. ஆனால் அவள் கழுத்தை உற்றுப் பார்த்துக் குழம்பினான். மணமானவளுக்குரிய அறிகுறி ஒன்றும் அவள் கழுத்தில் இல்லை. ஒரே ஒரு சிறு சங்கிலி கிடந்தது. அதைப் பார்த்தால் தாலியாகத் தெரியவில்லை.

"உட்காருங்கள்!" என்று ஹிந்தியில் சொன்னாள், அந்தப் பெண். ரங்கமணி ஒரு சோபாவில் அமர்ந்தான். அவன் பக்கத்திலிருந்த இன்னொரு சோபாவில் அவள் உட்கார்ந்து கொண்டாள்.

"நீங்கள்....?" — ரங்கமணி சந்தேகத்துடன் கேட்டான்.

"நீங்கள் தேடி வந்திருக்கும் ரவீந்திரசென் குப்தா சீக்கிரம் வந்து விடுவார்" என்றாள் அந்தப் பெண். உதட்டில் புன்முறுவல் தெரிந்தது.

''நீங்கள்....?''

''நான்.... நான் தேவிகா!'' என்றாள்.

அவன் ஒன்றும் புரியாமல் அவளையே விழித்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

''எல்லாரும் கூடும் இடம் இது. இதில் நான்தான் குடியிருக்கிறேன்'' என்றாள் அவள் சிரித்துக் கொண்டே.

''தனியாகவா, அல்லது....?''

''தனியாகத்தான் !'' என்று கூறிவிட்டு அவனை உற்றுப் பார்த்தாள் தேவிகா.

தனியாகவா....? டில்லி நகரில் ஒரு பெண் தனியாக எப்படி இருக்க முடிகிறது....?

தேவிகா அவன் மனக் குழப்பத்தைக் கவனித்து விட்டு இலேசாகச் சிரித்தாள். ரங்கமணி குழம்பிக் கொண்டிருந்தான். தேவிகா, அடுக்களைக்குச் சென்று தேநீரை இரண்டு கோப்பைகளில் எடுத்து வந்து ஒன்றை அவனிடம் நீட்டினாள். ரங்கமணி தேநீரைப் பருகிக் கொண்டே கேட்டான்:

''நீங்கள் இந்தக் கூட்டத்தைச் சேர்ந்தவர்களா?''

தேநீரைப் பருகிக் கொண்டே தலையை அசைத்தாள் தேவிகா. பிறகு சொன்னாள்:

''இந்தப் பக்கத்தில் ரகசியப் போலீசின் நடமாட்டம் இப்போது அதிகமாயிருக்கிறது. நீங்கள் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.''

''அப்படியென்றால் நான் இங்கு வந்திருப்பதுகூடப் போலீசுக்குத் தெரிந்திருக்குமோ?''

''தெரிந்தாலும் தெரிந்திருக்கலாம். நிச்சயமாகச் சொல்ல முடியாது. சுயேச்சைப் பத்திரிகையின் நிருபர் என்றுதான் உங்கள் பெயருக்கு ஹோட்டலில் ஓர் அறையைப் பதிவு செய்தோம். நீங்கள் நிருபராக நடித்துத் தான் தீர வேண்டும்'' என்றாள் தேவிகா.

இந்தச் சமயத்தில் கதவைத் தட்டும் சத்தம் இலேசாகக் கேட்டது. தேவிகா எழுந்து ஜன்னல் கதவை மெதுவாகத் திறந்து இடுக்கு வழியாக வெளியே பார்த்து விட்டுப் பிறகு கதவைத் திறந்தாள். இருவர் உள்ளே நுழைந்தார்கள். ஒருவருக்கு வயது ஐம்பது இருக்கும். தலை வழுக்கை விழுந்திருந்தது. மூக்குக் கண்ணாடி அணிந்திருந்தார். கம்பீர உருவம். மற்றொருவர் இளைஞர். முப்பது வயது இருக்கும். அழகாக மீசை வைத்திருந்தார். இருவரும் உள்ளே வந்ததும் தேவிகா, கதவைத் தாளிட்டுவிட்டு அடுக்களைக்குள் சென்றாள்.

முதியவர் மலர்ந்த முகத்துடன் ரங்கமணியை நெருங்கி, ''ஜெய் பாரத மாதா'' என்றார்.


''ஜெய்!'' என்று பதிலுக்குக் கூறினான் ரங்கமணி.

''சர்தாரின் கடிதம் எங்கே?'' என்று கேட்டார் முதியவர் ஹிந்தியில்.

''தாங்கள்....?'' என்று இழுத்தான் ரங்கமணி.

''ரவீந்திர சென் குப்தா'' என்றார்.

ரங்கமணி பையிலிருந்து கடிதத்தை உறையுடன் எடுத்துக் கொடுத்தான்.




உறையைக் கிழித்துக் கடிதத்தைப் பார்த்தார். பிறகு சட்டைப் பையிலிருந்து ஒரு நெருப்புப் பெட்டியை எடுத்துத் தீப்பற்ற வைத்து அதில் அக் கடிதத்தை எரித்துச் சாம்பலாக்கினார்.

''மிஸ்டர் ரங்கமணி, இவர் பிரதாப்!'' என்று கூட வந்த இளைஞனை அறிமுகப்படுத்தினார் குப்தா.

அடுக்களையிலிருந்து இரண்டு கோப்பைகளில் தேநீர் கொண்டு வந்து இருவருக்கும் கொடுத்து விட்டுச் சோபாவில் அமர்ந்தாள் தேவிகா.

''செவ்வாய், வெள்ளி, ஞாயிறு மூன்று கிழமைகளிலும் நீ கட்டாயம் இந்த இடத்துக்கு மாலை ஆறு மணிக்கு வர வேண்டும். நீ வந்த காரியம் நிறைவேற இன்னும் மூன்று



வாரங்களாவது ஆகும். அது வரை நீ இங்கு பொறுத்திருக்க வேண்டியதுதான். இது பற்றி சர்தாருக்கும் தகவல் அனுப்பிவிட்டேன்'' என்றார் குப்தா, ரங்கமணியிடம்.

''ஏன் அதை இங்கேயே செய்துவிட முடியாதா?'' என்று ரங்கமணி கேட்டான்.

''சில சாமான்கள் வெளிநாட்டிலிருந்துதான் வரவேண்டும். அதுவும் ரேடியோ ஒலி பரப்பும் கருவிக்கான சாமான்கள் விஷயத்தில் சர்க்காரின் கெடுபிடி அதிகம். நமக்கு நிச்சயம் அது கிடைக்கும். ஆனால் கொஞ்சம் காலதாமதம் ஆகும். அது வரை நீ நிருபராகத் திரிந்து கொண்டிரு'' என்றார் குப்தா. பிறகு சொன்னார்:

''நல்ல வேளையில் வந்திருக்கிறாய். இன்று இரவு எட்டு மணிக்கு நமக்கு ஒரு செய்தி வரும். நீயே அதைக் கேட்கலாம்.''

''எங்கிருந்து ?''

''பெர்லினிலிருந்து சுபாஷ்சந்திர போஸ் இன்று இரகசியச் செய்தி ஒன்று நமக்கு அனுப்புகிறார்.''

இதைக் கேட்டதும் ரங்கமணியின் நரம்புகளில் மின்சாரம் பாய்வது போல் இருந்தது. போஸிடமிருந்து செய்தி வரப் போகிறது என்பதை நினைத்ததுமே அவனிடம் பரபரப்பு ஏற்பட்டு விட்டது. கைக் கடிகாரத்தைப் பார்த்தான். மணி ஏழரை. இன்னும் அரைமணி நேரம் இருந்தது. அந்த அரை மணி நேரம் கழிவதற்குள் ரங்கமணி பொறுமை இழந்து விட்டான்.

எட்டு மணி ஆக ஐந்து நிமிஷங்கள் இருந்த போது —

''தேவி, இந்த விளக்கை அணைத்துவிட்டுப் படுக்கை அறை விளக்கைப் போடேன்'' என்றார் குப்தா.

பிறகு ரங்கமணியிடம், ''வா, போகலாம் !'' என்று கூறிவிட்டுப் படுக்கை அறையை நோக்கி நடந்தார். தேவிகா அந்த அறை விளக்கை அணைத்துவிட்டுப் படுக்கை அறை விளக்கை ஏற்றினாள்.

ரங்கமணி படுக்கை அறைக்குள் நுழைந்து ஒரு முறை சுற்றிலும் பார்வையைச் செலுத்தினான். அலங்காரமாக அமைந்திருந்தது அந்த அறை. சுவரில் தொங்கிய படங்களைக் கண்டு ரங்கமணி வெட்கத்தினால் கண்களை மூடிக் கொண்டான்.

''சீ.... கலியாணமாகாத பெண், ஏன் தான் இந்தப் படங்களை இங்கே மாட்டியிருக்கிறாளோ !'' என்று அவன் மனம் முனகிக் கொண்டது.

எல்லாரும் அங்கு கிடந்த சோபாக்களில் உட்கார்ந்தார்கள். தேவிகா சுவரில் தொங்கிய ஒரு பெரிய ஆபாசப் படத்தைக் கழற்றித் தரையில் வைத்தாள். அப்போது, படமிருந்த இடத்தில் கதவு மாதிரி தெரிந்தது. தேவிகா கதவை ஒரு பக்கம் அழுத்தவும் அது திறந்து கொண்டது. உள்ளே ஏதோ ஒரு கருவி இருந்தது. அதையும் திருகினாள் தேவிகா. சிறிது நேரத்தில் கரகரவென்று ஏதோ ஒரு சப்தம் அதில் கேட்டது.

ரங்கமணிக்கு எல்லாம் வியப்பாயிருந்தது. ஏதோ ஒரு பாதாள உலகத்தில் நுழைந்து அற்புதங்களைக் காண்பது போன்ற உணர்ச்சி. திறந்த வாய் மூடாமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

''சர்தார் கேட்டிருப்பது இந்த மாதிரிக் கருவிதான். இதன் மூலம் நாமும் ஒலிபரப்பலாம், ஒலிபரப்புவதைக் கேட்கவும் செய்யலாம்'' என்றார் குப்தா. பிறகு கைக் கடிகாரத்தைக் கவனித்தார். மணி எட்டாக ஒரு நிமிஷம் இருந்தது. ரங்கமணிக்கு ஒரே பரபரப்பு. தன் கைக்கடிகாரத்தைப் பார்த்தான். ஒரு நிமிஷம் கழிய இவ்வளவு நேரமாகிறதே......!

டீரென்று அந்தக் கருவியில் ஒரு விசித்திர ஒலி கிளம்பியது. பிறகு அமைதியடைந்தது. ஒருசில விநாடிகள் கழிந்தன. அந்த அறையில் ஒரே நிசப்தம். எல்லாரும் மிகுந்த கவனத்துடன் அந்தக் கருவியையே பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவர்களுடைய இதயத் துடிப்புகூடக் கேட்டது. அத்தனை நிசப்தம்.

டீரென்று கருவியில் ஒலி கிளம்பியது. மறுகணம் —

''ஜெய் ஹிந்த்'' என்ற குரல் கணீரென்று ஒலித்தது. ரங்கமணி மெய்சிலிர்த்தான். அந்த மந்திரச் சொல்லில்தான் எத்தனை சக்தி! விழி பிதுங்கப் பார்த்தான். அந்தக் கருவியிலிருந்து ஒலி தெளிவாகக் கேட்டது. ஆங்கிலத்தில் யாரோ பேசினார்கள். குப்தாவைத் திரும்பிப் பார்த்தான் ரங்கமணி.

''சுபாஷ் பேசுகிறார் '' என்றார் குப்தா.

கருவியிலிருந்து ஒலி கேட்டது.


''தைரியமாயிருங்கள். எந்த முயற்சியையும் கைவிட்டுவிட வேண்டாம். காலம் நெருங்கி விட்டது. நான் சீக்கிரம் ஜப்பான் செல்வேன். அங்கு ஒரு பெரிய படை இந்திய விடுதலைக்காக உருவாகலாம். நீங்கள் திரட்டும் படையும் தயாராகவே இருக்கட்டும். இந்த மாதம் 28ந் தேதி டோக்கியோவில் ராஷ்பிஹாரி போஸ் ஒரு மகாநாடு கூட்டுகிறார். அது முடிந்த பிறகு, மேற்கொண்டு எடுக்க வேண்டிய நடவடிக்கை பற்றிச் சொல்லுகிறேன். வேறு ஏதாவது செய்தி உண்டா?'' என்ற கேள்வியுடன் கருவியிலிருந்து வந்த ஒலி நின்றது. உடனே குப்தா எழுந்து கருவியில் எதையோ திருகிவிட்டுப் பேசினார்.

''ஜெய் ஹிந்த். இங்கு எல்லாம் தயார் செய்கிறோம். நீங்கள் எல்லையில் வந்ததும் எங்கள் படையும் சேர்ந்து கொள்ளும். டோக்கியோ மகாநாட்டுச் செய்தியை ராஷ்பிகாரியிடமிருந்து தெரிந்து கொள்கிறோம். கிரிப்ஸ் வந்திருக்கிறார்.''

கருவியிலிருந்து மீண்டும் ஒலி எழுந்தது.

''தெரியும். இது வெறும் நாடகம். கிரிப்ஸ் வெறுங் கையுடன்தான் திரும்புவார். அங்கு





"நிருபர்களா? வாருங்கள் நல்ல சேதி வைத்திருக்கிறேன். வில்லாளி களெல்லாம் கட்டுப் படுத்துவது என்று தீர்மானித்து விட்டோம்;.... நாளை மாலை வரையில்!"

நடப்பதை உடனுக்குடன் எனக்குத் தெரிவிக்க வேண்டும். ஜெய் ஹிந்த்." — கருவியி லிருந்து வந்த ஒலி நின்று விட்டது. குப்தா கருவியை மூடிவிட்டுச் சோபாவில் வந்து அமர்ந்தார்.

தெளிவாகவும், கம்பீரமாகவும் ஒலித்த சுபாஷ் போஸின் குரலின் காந்த சக்தியில் கட்டுண்டு மெய்ம்மறந்திருந்தான் ரங்கமணி. தேவிகா, பழையபடி சுவரை ஒட்டியிருந்த கதவை அடைத்தாள். பிறகு தரையில் கிடந்த பெரிய படத்தை எடுத்துச் சுவரில் மாட்டினாள்.

"தம்பி, கேட்டாயல்லவா? ஜப்பானி லிருந்து இந்திய விடுதலைப் படை இந்தியாவை நோக்கி வரும்போது நம்முடைய படையும் தயாராயிருக்க வேண்டும். வடநாட்டைப் பொறுத்தவரை அதற்கு நான் பொறுப்பு. தென் பகுதியில் அந்தப் பொறுப்பை சர்தார் சொக்கலிங்கந்தான் ஏற்க வேண்டும். இது வரையில் படையில் எத்தனை பேர்கள் சேர்ந் திருப்பார்கள்?" — குப்தா கேட்டார்.

"ஜில்லாவுக்கு நூறு பேர்கள் இருப் பார்கள்."

"இது எந்த மூலை? ஜில்லாவுக்குக் குறைந்தது ஆயிரம் நபராவது சேர வேண்டும். இங்கு இந்தியப் படையைச் சேர்ந்த ஒரு பகுதியே நம்முடைய பக்கம் இருக்கிறது. இதோ இருக் கிறானே பிரதாப், இவன், அந்தப் பகுதிப் படைக்கு அதிகாரி. ஜப்பானிலிருந்து நம் முடைய படை இந்திய எல்லையை மிதித்த உடனேயே இவனுடைய வீரர்கள் துப் பாக்கியுடன் திரும்பி இங்கிலீஷ் வீரர்களையே கட்டுத் தள்ளி விடுவார்கள்" என்றார் குப்தா.

ரங்கமணிக்கு இதைக் கேட்கக் கேட்கப் பிரமிப்பாயிருந்தது. எவ்வளவு அருமையான திட்டம். சுதந்திரத் திசையின் அடி வானத் தில் வெற்றி உதயமாகிவிட்டதாகக் கற் பனை செய்தான். அவன் நெஞ்சு பூரித்து விம்மியது.

ூ ூ ூ

சிறிது நேரத்தில் தேவிகாவைத் தவிர மற்ற மூவரும் மாடியை விட்டுக் கீழே இறங்கிச் சௌகி பஜார் வழியாக நடந்து ஜும்மா மசூதிப் பக்கம் வந்தார்கள். அங்கு நின்ற ஒரு டோங்காவில் ஏறிக் கொண்டார்கள். கிராண்ட் ஹோட்டலை நோக்கி வண்டி நகர்ந்தது.

"கிரிப்ஸ் வந்து விட்டார், நிருபர் என்ற முறையில் கறந்திக் கொண்டிரு" என்றார் குப்தா ஆங் கிலத்தில்.

"தேவிகா யார்?" என்று ரங்கமணி கேட்டான்.

"நம்முடைய கூட்டத்தைச் சேர்ந்தவள். மிகவும் நம்பிக்கையானவள்..." என்றார் குப்தா.

"என்ன செய்கிறாள்?"

"சௌகி பஜாரிலிருப்பவள் என்ன செய்வாளோ அதைத்தான்."

"அப்படியென்றால்?"—ஒன்றும் புரியாமல் கேட்டான் ரங்கமணி.

"சௌகிபஜார் எதற்குப் பேர் போனது என்பது உனக்குத் தெரியாதா?"

"தெரியாது!" என்று தலையை ஆட்டினான்.

"தேவிகா, ஒரு தாசி."

திகைப் பிடித்தவன் போல் திகைத்தான் ரங்கமணி. "இவளை எப்படி நம்பி நீங்கள்..." என்று இழுத்தான்.

"இவளுக்கு இருக்கும் தேசப் பற்றும், சுதந்திரத் தாகமும் சொல்லி முடியாது. 'ஒரு சாண் வயிற்றுக்காக எப்படியெல்லாமோ சீரழியும் உடம்பு, விடுதலைக்காக அழியட்டுமே' என்கிறாள்" என்றார் குப்தா. தேவிகாவை நினைத்து வியப்பில் ஆழ்ந்தான் ரங்கமணி.

கிராண்ட் ஹோட்டலில் ரங்கமணியை இறக்கிவிட்டு டோங்கா சென்று விட்டது. வந்த காரியத்தை வெற்றியுடன் முடித்துக் கொண்டு சாமானை ஊரில் கொண்டு போய்ச் சேர்க்க வேண்டுமே என்ற கவலை ரங்கமணி யைப் பற்றிக் கொண்டது.

அறையில் எரிந்து கொண்டிருந்த விளக்கை அணைத்து விட்டுக் கட்டிலில் படுத்தான். தூக்கம் வரவில்லை. பெர்லினிலிருந்து பேசிய

சுபாஷ் போஸின் குரலைக் கேட்டதனால் ஏற்பட்ட உணர்ச்சியும், பரபரப்பும் இன்னும் அவனை விட்டு நீங்கவில்லை. கட்டிலில் புரண்டான். கட்டில் விளிம்பில் கை இடிக்கவே, விரலில் இருந்த மோதிரம், கட்டிலில் உரசி ஒலியை உண்டாக்கியது. மோதிரத்தைத் தடவினான்.

'இப்படி எல்லாம் பாரதத் தாயின் புதல்வர்கள் எத்தனையோ பேர், தாயின் கால் விலங்கை அறுக்க உயிரையே பணயம் வைக்கும் போது, கமலவாசகியின் புத்தி மட்டும் ஏன் இப்படித் திரும்புகிறது? பங்களாவும், உல்லாசமும், பகட்டும், சுகமும்தாம் வாழ்க்கையின் வேலிகளா? ஒரு நாள் வாழ்ந்தாலும் சிறக்க வாழ வேண்டாமா? இது புரியவில்லையா ராணி...?'

ரங்கமணி மோதிரத்தைப் பார்த்தான். அறை இருட்டாயிருந்தாலும், பச்சைக் கல் பளபளத்தது. 'இந்தக் கல் மாதிரி வாழ்க்கையில் நீ ஒளிவிட வேண்டும்; வாசற் படிக்கல் மாதிரி சுகபோகங்களின் காலடியில் மயங்கிக் கிடந்து விடக் கூடாது...'

ரங்கமணியின் நினைவில் தேவிகா தோன்றினாள். அவளுடைய சுறுசுறுப்பையும் துணிவையும் காரியங்களை இரகசியமாகச் செய்து முடிக்கும் ஆற்றலையும் எண்ணிப் பிரமித்தான்.

'ஒரு தாசிக்குள்ள உணர்ச்சியும், தன்மானமும் கூடவா கமலவாசகிக்கு இல்லாமல் போய் விட்டது? ராணி! தில்லியில் ஒரு ஹோட்டல் அறையில் படுத்துக்கொண்டு உன்னை நினைத்து உருகுகிறேன். நீ என்னுடைய லட்சியப் பெண்ணாக என்றாவது ஒரு நாள் மாறுமலா போய் விடுவாய்?'

கமலவாசகியைப் பார்க்க வேண்டும் என்ற தவிப்பு அவனுள் எழுந்தது. ஆனால் அவன் வலியச் செல்லும் போது அவள், அவனை வரவேற்கவே மறுத்து விட்டாள்? அவ்வளவு தூரம் வலிய வந்தவனை வரவேற்கக் கூட முடியாத அளவுக்கா அவன் மீது வெறுப்புக் கொண்டிருப்பாள்? அவர்கள் கொண்ட காதலுக்குச் சக்தியே இல்லாமலா போய் விடும்? வைராக்கியம் ஒருவேளை தடுத்தாலும், இதயம் காதலுக்கு வளைந்து கொடுக்காமலா போய் விடப் போகிறது?

ஊருக்குத் திரும்பியதும் ஒரு முறை ஊத்துப்பட்டிக்குப் போய் அவளைப் பார்க்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டான். பல மாதங்களுக்குப் பிறகு ஏற்படப் போகும் சந்திப்பில் பழைய கசப்பெல்லாம் மறைந்து போய் விடும்.... ஆனால்.... ஆனால்...அவன் எப்படி வலிய அவளிடம் போவது? அவள் தானே உதறிவிட்டுச் சென்றாள்? அவளே வலிய வரட்டுமே —

ஆண்மை வீம்பு செய்தது. காதலிக்கு முன்னால் காதலனின் வீம்பு எவ்வளவு நேரம் தாக்குப் பிடிக்கும்? கமலவாசகியைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை மிகுந்து விட்டது. ஊர் திரும்பியதும் ஊத்துப்பட்டிக்குப் போக வேண்டும் என்று முடிவு செய்தான். ஒரு நீண்ட பெருமூச்சு விட்டான். மோதிர விரலை நெஞ்சில் வைத்து அழுத்தியவாறே தூங்கத் தொடங்கினான். (தொடரும்)

ஜகத்தை ஜயிக்க.....



கேள்வி: எது அனர்த்தத்தைத் தரும்?
பதில்: அகம்பாவம்.

கேள்வி: எது சுகத்தைத் தரும்?
பதில்: நல்ல மனமுள்ளவர்களின் சிநேகம்.

கேள்வி: எல்லாத் துக்கத்தையும் தொலைப்பதில் எவன் கெட்டிக்காரன்?
பதில்: ஒன்றும் வேண்டாமென்று விட்டுக் கொடுப்பவன்.

கேள்வி: சாகும் வரையில் குத்துவது எது?
பதில்: ரகசியத்தில் செய்த பாபம்.

கேள்வி: பிரியமாகச் செய்ய வேண்டியது எது?
பதில்: தீனர்களிடத்தில் கருணையும், ஸாதுக்களிடத்தில் சிநேகமும்.

கேள்வி: ஸாது யார்?
பதில்: நல்ல நடத்தையுடையவன்.

கேள்வி: ஜகத்தை யார் ஜயிக்கலாம்?
பதில்: ஸத்தியமும் பொறுமையுமுள்ளவன்.

கேள்வி: எவனைத் தேவர்களும் கும்பிடுகிறார்கள்?
பதில்: தயை உடையவனை.

கேள்வி: குருடன் யார்?
பதில்: படித்திருந்தும் , கெட்ட காரியம் செய்பவன்.

கேள்வி: செவிடன் யார்?
பதில்: ஹிதத்தைக் கேட்காதவன்.

கேள்வி: ஊமை யார் ?
பதில்: இனிமையான வார்த்தைகளைச் சரியான காலத்தில் சொல்ல அறியாதவன்.

கேள்வி: தானம் என்பது எது?
பதில்: கேட்காமல் கொடுத்தல்.

கேள்வி : சிநேகிதன் யார்?
பதில்: பாவம் செய்யாமல் தடுப்பவன்.

கேள்வி: அழகு எது?
பதில்: சீலம்.
கேள்வி: வாக்குக்கு அழகு எது?
பதில்: ஸத்யம்.

ஸ்ரீமத் ஆதிசங்கரர் அருளிய
ப்ரச்நோத்தர ரத்நமாலிகா.

வெண்ணிலவுப் பெண்ணரசி

சோமு

அத்தியாயம் 15

வெற்றித் திருவிழா

இந்த உலகில் நடைபெறுகிற எல்லாச் செயல்களுமே விதையும் அதிலிருந்து முளைக்கும் செடியும் போல வினை வித்துக்களிலிருந்து தோன்றுகின்றன என்னும் அடிப்படையான நம்பிக்கையில் ஊறிப்போன சாக்கியத் துறவியல்லவா ஆதிரை அடிகள்! தான் எதிர்பார்த்திராத முறையிலே இளநன்னியும் பொன்மணியும் சந்திக்க நேரிட்டதும், எதிர்பாராத முறையிலேயே அவர்களுக்குள் பேச்சுத் தொடங்கியதும் சேர்ந்து, ஆதிரை அடிகளின் உள்ளத்தில் ஊழ்வினை நம்பிக்கையை மேலும் வலியுறுத்தின. எனவேதான், அப்படி ஓர் அறிவிப்பைச் செய்தார் ஆதிரை அடிகள். இளவரசியின் கேள்விக்கு உகந்த விடையைச் சொல்லக்கூடிய ஒரே பெண் பொன்மணிதான் என்று சொல்லி நிறுத்தினார் ஆதிரையம்மை.

அவ்வளவுதான்; பொன்மணியின் உள்ளத்தில் முல்லை மூதூரிலே பிடித்த நெருப்பு இப்போது அனல் கனியத் தொடங்கியது. அப்படியே கண்களை மூடினாள். தனது வாழ்வு முழுவதுமே நெருப்பிலே பற்றி எரிவதுபோல அவளுடைய மனக் கண் முன்பு தெரிந்தது. மோனமாக இமைகளை மூடிச் சற்று நேரம் அந்த மனக்காட்சியிலே ஆழ்ந்து நின்றாள். பிறகு இளநன்னியைப் பார்த்துச் சொல்லுவாள் :

''அம்மா இளவரசியாரே, நீங்களும் அழலாடியாரும் செய்த முடிவு சரியான முடிவு என்பதுதான் என் கருத்து. ஐயந்திரிபுக்கு இடமில்லாமல் ஆழ்ந்து சிந்தனை செய்து நான் சொல்லுகிற கருத்து இதுவே!''



''அப்படியா! அப்படியா!'' என்று ஒரே களிப்போடு துள்ளினான் இளநன்னி.

''அப்படியா? உன்னுடைய கருத்து அதுதானா?'' என்று ஆதிரையடிகள் எல்லையற்ற வியப்போடு கேட்டார்.

''இளவரசி! தீயில் வெந்து மடிந்து போன பொன்மணியே இப்போது உயிரோடு இருந்தாலும் இதே கருத்தைத் தான் சொல்லுவாள். தமிழகத்திலே தோன்றியுள்ள புதிய அரசியல் விழிப்புக்கு. அழலாடியும் துளு நாட்டுப் புதிய வேந்தன் இளநன்னனும் ஒன்றாக இணைந்து அரசியல் முறையிலே செயலாற்ற வேண்டிய ஒரு சூழ்நிலை இப்போது உருவாகி இருக்கிறது. இத்தகைய இணைப்புக்கு அழலாடி துளு நாட்டு இளவரசியாகிய தங்களை மணந்து





கொள்வதே அவசியம்மு பொருத்தமும் கூடிய ———— இணைப்பு! ஒரு சாதாரணக் குடிமகனுடைய வாழ்வுக்கும் அரசியல் வாழ்விலே தோய்ந்த ஆட்சியாளர்களின் வாழ்வுக்கும் பல வேறுபாடுகள் உண்டு. ஆளும் மன்னர்கள் சில வேளைகளில் அரசியற் காரணங்களுக்காகத் தனிப்பட்ட வாழ்விலே பாச உறவுகளைக் களைந்து கொள்ள நேரும். பல உறவுகளை மேற்கொள்ள வேண்டியும் நேரும். அப்போதெல்லாம் அந்த உறவுகளைத் தங்களுடைய கடமைகளாகவே கருதி மனம் ஒப்ப வேண்டும். உங்களுக்கும் அழலாடி வீரருக்கும் ஏற்படுகிற இணைப்பு இத்தகைய அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த பேரிணைப்பாகும்.

இந்த அரசியல் காரணம் ஒருபுறமிருக்க, அழலாடியின் மனைவி விரும்பிய மாபெரும் குறிக்கோள் எப்போது நிறைவேறியதோ அப்போதே பொன்மணியின் ஆசையும், அவளது குலத்தின் ஆசையுமே முடிந்ததாகக் கொள்ள வேண்டும். அவள் உயிரோடு இருந்தாலுமே அவ்வாறு கருதித்தான் உங்கள் உறவை வாழ்த்த வேண்டும். இப்போதோ அவன் தீயிலே வெந்து எத்தகைய குழப்பமும் உங்கள் இருவருக்கும் நேராதவாறு மறைந்து விட்டான். இந்நிலையிலே நீங்கள் செய்த முடிவுதான் சரியானது. நியாயமானது. தமிழகத்தின் எதிர்கால நலத்துக்கும் உகப்பானது. அதை முழு மனத்தோடு மனம் மெய் மொழி மூன்றும் கலந்த உறுதியோடு தீர்மானமாகச் சொல்லுகிறேன்.''

பொன்மணியின் குரலில் எத்தகைய நடுக்கமும் இல்லை. அவளுடைய பேச்சில் எவ்வகையான பதற்றமும் இல்லை. சொற்கள் ஆழ்ந்த கட்டுப்பாட்டுடன் வந்தன. ஒரு துறவிக்குரிய உறுதியும் நிதானமும் அவற்றிலே பதிந்து வந்தன! ஆதிரை அடிகள் இரண்டு கைகளையும் கூப்பிப் புத்ததேவனைத் தொழுதாள். கடந்த சிறிது நேரத்துக்குள் இளநன்னியிடமிருந்து தெரிந்து கொண்ட உண்மையான நடப்புக்கள், மெய்யான நிகழ்ச்சிகள், பொன்மணியின் உள்ளத்தில் எத்தகைய மாற்றத்தைச் செய்து விட்டன என்பதை நன்கு உணர்ந்தாள் ஆதிரையம்மை. அப்போது பொன்மணி இளவரசியிடம் மேலும் சொல்லுவாள்:

''இளவரசியாரே, உங்களுக்கு அழலாடியிடம் உள்ள அன்பையும் நன்றி



தலைவலியா?

ஸாரிடான்

'ரோஷ்'
சாப்பிடுங்கள்

வலி நீங்கி...



...உங்களுக்குப் புத்துணர்ச்சி அனுபவமாகும்!

அதுவே ஸாரிடானின் தனிப்பட்ட தன்மை! வலியையும் அத்துடன் மனதில் உண்டாகும் 'பளு'வையும் போக்குவது மட்டுமல்லாமல், இதத்தையும் புத்துணர்ச்சியையும் கூட அளிப்பதற்காக ஸாரிடான் ஒரு தனிப்பட்ட முறையில் தயாரிக்கப்படுகிறது. ஸாரிடான் சாப்பிட்டதும் அனுபவமாகும் அற்புதமான மாறுதலைப் பாருங்கள்! உங்கள் மூளை மீண்டும் சுறுசுறுப்பாக வேலை செய்ய ஆரம்பிக்கிறது...வேலையில் உற்சாகம் ஏற்படுகிறது...சிநேகிதர்களுடன் களித்து மகிழ முடிகிறது! ஒரே ஒரு ஸாரிடான் வலியைப் போக்கி இதத்தையும், புத்துணர்ச்சியையும் அளிக்கும். ஸாரிடான் எப்பொழுதும் உங்கள் கைவசம் வைத்திருங்கள். குழந்தைகளுக்கு ¼ லிருந்து ½ வில்லை வரை போதும்.



தலைவலி, பல்வலி, உடல் வலி, அசௌகரியமான நாட்களில் வலி உடன் நிவாரணம் பெற ஒரே ஒரு ஸாரிடான் போதும்!

'ரோஷ்' தயாரிப்பு:

ஸோல் டிஸ்ட்ரிப்யூட்டர்கள்: வால்டாஸ் லிமிடெட் VT. 5626 (A)

புணர்வையும் கூறினீர்கள். பொன்மணி உயிர் துறவாமல் இருந்திருந்தால் பொன்மணிக்காகவும் அழலாடிக்காகவும் உங்கள் வாழ்வையே நீங்கள் தியாகம் செய்வீர்கள் என்றும், இந்தத் தவப் பள்ளியிலே நீங்கள் துறவியாக வாழ்ந்துவிட்டு, உங்களுடைய அரசுக் கட்டிலிலே பொன்மணியை அமர்த்துவீர்கள் என்றும் சொன்னீர்கள். அந்த அரிய அன்பையும், நன்றி உணர்ச்சியையும் கேட்டு எங்கள் உள்ளம் பரவசம் அடைகிறது. இது போலவே பொன்மணி உயிரோடு இருந்தாலும் அவனும் இப்படியேதான் பேசியிருப்பான். தனது கோசர் குலத்தின் பழியைத் துடைத்து வெற்றி வாகை சூடிய அழலாடிக்குத் தான் செலுத்தும் நன்றியாகத் தனது வாழ்வையே தியாகம் செய்யத் துணிந்து விடுவான் பொன்மணி என்றுதான் நான் நினைக்கிறேன். உங்கள் நன்றியை நீங்கள் ஒரு பெருந் தியாகமாகச் செலுத்த முயலும் போது அவன் மட்டும் பின்வாங்குவானா என்ன? மாட்டான். உண்மையில் இன்று தமிழகத்தின் அரசியல் சூழலை ஆராய்ந்து பார்க்கும் போது, துளுநாட்டு இளவரசியை அழலாடி திருமணம் செய்து கொண்டு துளுநாட்டின் தானைத் தலைவனாகப் பதவி ஏற்பதுதான் சரியான முடிவு!''

இளநன்னிக்குக் கண்கள் கலங்கின. ஆதிரைக்கு உள்ளம் நெகிழ்ந்தது. இளநன்னி பேசத் தொடங்கினாள்:

''அம்மையே, இந்தத் துறவுக்கூடத்துக்கு வரும்போது என் உள்ளத்தில் ஒரு குற்ற உணர்ச்சியிருந்தது. இப்போது அது அடியோடு நீங்கி விட்டது. பொன்மணிக்கு நாங்கள் வஞ்சம் இழைத்துவிடவில்லை என்ற தெளிவை உங்களுடைய விளக்கம் என் மனத்தில் இப்போது உண்டாக்கி யிருக்கிறது. அதுவே செல்வந்தி அடிகள் என்னை இங்கே அனுப்பியதில் எனக்குக் கிடைத்த பெரும் பேறு. அம்மையின் சொற்கள் என் மனச் சாட்சியே பேசிய தீர்ப்பாக நான் கொள்கிறேன்! அதுவே எனக்கு நிம்மதி தருகிறது!'' என்றாள் இளநன்னி.

''நான் சொன்னதைப் பொன்மணியின் ஆன்மாவே சொல்லுவதாக நீங்கள் எடுத்துக்கொண்டாலும் தவறு இல்லை!'' என்றான் பொன்மணி!

கூடத்தில் ஓசை கேட்டது. ஆரவாரமான ஒலியோடு உள்ளே நுழைந்தார் செல்வந்தி அடிகள்.

''வழிபாட்டுக் கூடத்திலே எல்லாரும் ஒருமித்திருக்கிறார்கள். நீங்கள் மட்டும் இங்கே இருந்தால் எப்படி? புறப்படுங்கள். இளநன்னியிடம் தனது உடைவாளைத் தந்து தமக்கையின் வாழ்த்தைப் பெறுவதற்காக இளநன்னன் காத்திருக்கிறான். மிஞிலியைக் கொன்று தீர்த்த பிறகுதான் தமக்கையைப் பார்ப்பதாக வஞ்சினம் எடுத்திருந்தானும் தம்பி! இப்போது அவன் தமக்கைக்காகக் காத்திருக்கிறான். அவனோடு துளுநாட்டு எதிர்காலத் தலைவர் அழலாடியும் தமது பட்டத்தரசியை நாடிக் காத்திருக்கிறார்! எல்லாரும் பெருமானுடைய முன்னிலையிலே வழிபட்டு நன்றி செலுத்திவிட்டு வெள்ளைத் தீவுக்குப் புறப்பட வேண்டும்! புறப்படுங்கள்; தாமதியாதீர்கள்!'' என்றார் அடிகள்!

இவ்வாறு அறிவித்துவிட்டு அங்கிருந்து நகர்ந்து வழிபாட்டுக்கூடத்துக்கு நடந்தார் அவர்.

செல்வந்தி அடிகள் சென்ற மறுவிநாடி ஆதிரை யம்மையைப் பார்த்துப் பொன்மணி கூறுவான்:

''அம்மையே! இளவரசியை அழைத்துக் கொண்டு நீங்கள் வழிபாட்டுக் கூடத்துக்குச் செல்லுங்கள். நான் பின்னோடு வருகிறேன்!''

இளநன்னி அங்கிருந்து புறப்பட்டாள். ஆதிரையம்மை துளுநாட்டு இளவரசியை அழைத்துக் கொண்டு வழிபாட்டுக் கூடத்துக்குச் செல்லும் போதே அங்கிருந்து பல குரல்கள் இணைந்து ஒலித்த அஞ்சலி கேட்டது:

முற்றும் உணர்ந்த முதல்வா போற்றி!
முனிவர் தமக்கு முனிவா போற்றி!
பற்றும் பகையும் கடந்தவா போற்றி
பாசம் வென்ற தலைவா போற்றி!
இறைவா போற்றி எந்தையே போற்றி
இதயத் தனில் இருந்தவா போற்றி
துறவா போற்றி அறிவா போற்றி
தூய ஞானப் பெருமா போற்றி!

அரசச் சுற்றத்தார்கள், படைத் தலைவர்கள், குறுநில மன்னர்கள், குரிசில்கள், புலவர்கள், அரசிகள், அரச நங்கையர்கள், துறவிகள், சான்றோர்கள் என்று நூறு நூறு அடியார்கள் மொய்த்து நின்ற அந்தப் பெருங்குழுவிலே, ஆயிரம் இதயங்கள் அன்பு கூடி ஒருமைப்பட்டு ஞானப் பெரு முனிவனை வணங்கி வழிபட்டன. அந்தப்பெருங்கூட்டத்திலே யாருடைய பார்வையிலும் பட்டுவிடக் கூடாது என்று கருதி, எங்கோ ஒரு மூலையில் எங்கோ ஓர் ஒதுங்கிய ஓரத்தில் நின்றான் பொன்மணி! அவனும் அந்த வழிபாட்டுக் குரலிலே தனது ஆன்மாக் குரலை இணைத்தான். அந்த அடியார்கள் அனைவரும்

கூறிய அந்த வழிபாட்டு மொழிகளிலே அவனும் கலந்து கொண்டு, உள்ளத்தின் ஆழத்திலிருந்து ஒலித்தான்:

பற்றும் பகையும் கடந்தவா போற்றி!
பாசம் வென்ற தலைவா போற்றி!

அத்தனை குரல்களோடும் சேர்ந்து அவனுடைய குரலும் ஒலித்தது. மீண்டும் மீண்டும் ஒலித்தது. பின்னர், அந்த உள் ஒலி ஆன்ம ஒலியாக இணைந்து உடம்பு என்ற கூட்டுக்குள்ளே மறுபடியும் மறுபடியும் மீண்டும் மீண்டும் ஒலித்துக்கொண்டே இருந்தது!

வழிபாடு முடிந்து அந்த அடியார்களின் குழு கலைந்தது. செல்வந்தி அடிகளின் ஆணையிலே கட்டுண்ட அத்தனை பேரும், தவச்சாலையிலிருந்து புறப்பட்டு வெள்ளைத் தீவை நோக்கிச் செல்லும் மரக்கலங்களுக்கு விரைந்தார்கள். வேலவன் கோதை, நீலவல்லி, அழவாடி, இளநன்னி, அரசத் தலைவர்கள், வேந்தர்கள், போர் வீரர்கள், பெருந்துருத்தித் தீவிலே உள்ள தவச் சான்றோர்கள், சாக்கியர்கள், சமணர்கள், தமிழகத்துச் சமயப் பிரிவுகளைச் சார்ந்த பல்வேறு பெரியார்கள் — எல்லாரும் வெள்ளைத் தீவிலே நடைபெறவிருக்கும் மாபெரும் வெற்றித் திருவிழாவிலே கலந்து கொள்வதற்காகப் புறப்பட்டுச் சென்றார்கள். அவர்களையெல்லாம் வகைப்படுத்தித் தொகுதி தொகுதியாக மரக்கலங்களிலே ஏற்றினார் விந்தைச் சித்தரான செல்வந்தி அடிகள்!

* * *



வெள்ளைத் தீவிலே வெற்றித் திருவிழாவுக்கான ஏற்பாடுகள் எல்லையற்ற களிப்பிலே உருவாகிச் சேர மன்னனுடைய செல்வச் செழிப்பிலே உரம் பெற்றுத் தமிழகத்துக் குறுநில மன்னர்களின் உவகையிலே வளர்ந்தோங்கித் தீவு முழுவதையும் அணி செய்து திகழ்ந்தன! தீவின் கோட்டையிலே இரவும் பகலும் வேறுபடாத வகையிலே வகைவகையான விளக்குகள் பதிந்து நின்றன! செம்பும் வெண்கலமும் வெள்ளியும் பொன்னும் சுடர் தாங்கி நின்று ஒளி மொழியிலே உரை பேசின! யவனர்கள் கொண்டு வந்த அன்ன விளக்குகளும் பாவை விளக்குகளும் கோட்டையின் சுற்றுகளிலும் திருப்பங்களிலும் நாயகமாக நின்று அணிசெய்தன!

மதிலின் வாயில்களிலே வெற்றி வீரரை மங்களச் சின்னங்களோடு வரவேற்று வாழ்த்துவதற்காக அணி அணியாக நின்ற பேரழகிகளின் காட்சி வெற்றி விழாவுக்குக் கட்டியமாகத் திகழ்ந்தது. சூடகம், பொன் வளை, பவளம், முடக்கு முதலிய கையணிகள் புனைந்து, வீரச் சங்கிலியும், சவடியும், சரப்பளியும், முத்தாரமும் கழுத்திலே பூண்டு, நீலக் குதம்பை, மகரக் குழை, தாளுருவி, வல்லிகை, தோடு முதலியன காதுகளிலே மிளிர வலம்புரியும், பூரப்பாளையும், தென்பல்லியும் வடபல்லியும், புல்லகமும், பொன்னரி மாலையும், முஞ்சகமும் தலையிலே சூடி, மேகலை, காஞ்சி, பருமம், விரிசிகை முதலியன சுற்றிய நுண் இடையோடு அந்தப் பெண்கள் நின்று, வாகை சூடி வந்த அரசப் பெருமக்களை வாழ்த்தி வரவேற்றார்கள்.

பல்லியங்கள் முழங்கின. சான்றோர்கள் வாழ்த்து இயம்பினார்கள். கையிலே வீர வாளும் காலிலே வீரக் கழலும் விளங்கச் சேர மன்னன் திருவோலக்கம் அமர்ந்தான்! அவனுடைய அரச இருக்கை ஆனைத் தந்தத்தினால் செய்யப்பட்டுப் பொன்னும் நவமணியும் இழைத்து ஒளி வீசியது. அந்த இருக்கையின் மேலே வெண்கொற்றக் குடை நிழல் நல்கியது. யவன மெய்காப்பாளர்கள் மன்னனைச் சூழ்ந்து நின்றார்கள். எண்பேர் ஆயமும், ஐம்பெருங் குழுவும் அணி செய்யச் சேர மன்னன் வெற்றி விழா அறிவிப்புகளைச் செய்து, வீரர்களுக்குரிய பட்டங்களை வழங்கிப் புலவருக்கும் பாணருக்கும் பிறருக்கும் பரிசுகள் நல்கத் தலைப்பட்டு நின்றான். அப்போது அவனுடைய அந்தத் திருவோலக்கத்திலே நாட்டுப் பிரிவுகளின் ஆட்சி முறையை நடத்தும் செயல் வினைஞரும், நாட்டின் வரி வருவாய்களை இயக்குகிற கணக்கியல் வினைஞரும், நாட்டின் அற முறைகளைப் பாதுகாக்கும் அறவினைஞரும், தானைத் தலைவர்களும், கால நிமித்தங்களைக் கணக்கிட்டுச் சொல்லும் பெருங்கணி மக்களும், பண்டாரச் சுற்றத்தார்களும், கடைகாப்பாளரும், பெருங்குடி மக்களும், மற்றும் வீரர்களும், எல்லாரும் கூடி அவரவருக்குரிய நெறி முறைப்படி அமர்ந்தார்கள். இவர்களுக்கு அடுத்த அணியிலே, உரிய மருங்கிலே, பொன்னால் செய்த எட்டிப் பூவைப் பரிசு கொண்டு 'எட்டி' என்னும் பட்டம் தாங்கிய வணிகர்களும், ஏனாதிப் பட்டம் பெற்று அதற்குரிய மோதிரங்களை அணிந்த தானை வீரர்களும், 'காவிதி' என்னும் பட்டம் பெற்ற உழவுத்

நாள்தோறும் ஹமாம் உபயோகியுங்கள். உங்கள் சருமத்தைச் சுத்தம் செய்வதுடன், புத்துணர்ச்சியையும் அளிக்கிறது. உங்கள் மேனிக்கு கவர்ச்சியான மெருகையும் கொடுக்கிறது. நெடுங்காலம்... நீடித்திருக்கும் ஹமாம டாய்லெட் சோப்பை உபயோகியுங்கள்.

புதுமையின் பொலிவுக்கு ஹமாம்



அதிக காலம் நீடித்துழைக்கும் டாய்லெட் சோப்

டாடா
தயாரிப்பு

CMTH-4, TM

தலைவர்களும், அரச அவையின் சிறப்பை எடுத்துக் காட்டும் முறையிலே அங் கங்கே வந்து நெறி வட்டங்களிலே அமர்ந்தார்கள்.

சேர மன்னன் நார்முடிச் சேரல் அந்த அரசப் பெருமன்றத்திலே குழுமி யிருந்த அத்தனை பெருமக்களையும் அகமும் முகமும் மலர்ந்து நோக்கிய வாறு அன்போடு பேசலுற்றான்!

வெள்ளைத் தீவின் வரலாற்றிலே தொடங்கியது அரசனுடைய பேச்சு! கடம்பர்கள் என்ற கொள்ளைக் கூட்டத் தார்கள் தங்களைக் கடவுளின் காவ லர்கள் என்று கருதித் தங்கள் மரபுச் சிறப்புக்கு ஏதேதோ கட்டுக் கதைகளைக் கூறிப் பெருமை பேசி, வெள்ளைத் தீவிலே தங்கள் காவல் மரமாகக் கடம்ப மரத்தை நாட்டி அரசாளத் தொடங் கிய விந்தைக் கதையிலிருந்து, வான மண்டலக் கடம்பன் கடல் மீது புரிந்து வந்த கடற் கொள்ளை வரை கூறினான் சேரன்! இந்தக் கொள்ளைக் கூட்டத்தாரும் துளுநாட்டு மன்னர் களாகிய நன்னரும் ஒன்று சேர்ந்து கூட்டுக் கள்ளர்களாக இயங்கி வந்த தையும், இந்தக் கொடியோர்களால் சோனாட்டு வணிகர்கள் எத்தகைய துன்பங்களைத் துய்க்க நேர்ந்தது என் பதையும் கூறி, இந்தக் கொடுமையை ஒழிக்கக் கருதிய சேரலாத மன்னன் வெள்ளைத் தீவுக்கு வேலவன் கோதையை உளவு காண அனுப்பிய நிகழ்ச்சியை நினைவுபடுத்தினான் மன் னன். பிறகு வேலவனுக்கு நேர்ந்த இன்னல்களும், நீலவல்லியின் சந்திப் பும், இந்த அரச மகளுடைய பிறப் பிலே நேர்ந்த துயரங்களும் சொல் லும் போது, சேரனுடைய உணர்ச்சிக் குழைவிலே அந்த அரச மன்றம் முழுதும் பங்கு கொண்டு உருகியது! இதன் பின்னர் செங்குட்டுவன் கடல் மீது படையெடுத்து வந்து வேலவ னுடைய துணை கொண்டு கடம்பனை அழித்ததையும், அதன் பின்னர் சேர லாதனுடைய மறைவினால் நேர்ந்த இன்னலும், அதைத் தொடர்ந்து, நன்னனையும் அவனுடைய கொடிய தலைவனான பிழுபியையும் அழித்து ஒழிப்பதற்காக அழலாடியும் வேலனும் எடுத்த முயற்சிகளும், அந்த முயற்சி களிலே நீலக் கல் நாடான புன்னாட்டு வேணியர்களின் பங்கும், இதைத் தொடர்ந்து புதிய வேகம் ஏறி எல்லாரும் ஒருமித்த நிலையிலே மூன்று திசைகளிலிருந்து மூன்று வேறு படைகள் துளுநாட்டை முப்முனைப் போரிலே தாக்க முனைந்த வரலாறும்—



நாடே புகழும் கலைஞர் அவர். அவர் இயற்றிய அந்த இசை விருந்தை மாந்தி மகிழக் கலை அரங்கிலே கட்டுக்கடங்காத கூட்டம். ஆனால் இத்தனைக்கும் காரணமான அவர் சோகமே வடிவாகக் காணப்பட்டார். தம் முதல் படைப்பைக் கேட்டு மகிழ, மகிழ்பவர்களைக் கண்டு களிக்க அவருக்குக் கொடுத்து வைக்க வில்லை. தியேட்டருக்குள் அவரை அனுமதிக்க மறுத்து விட்டார்கள்! டிக்கெட் கொடுக்கு மிடத்திலே இப்படியோர் அறிவிப்புத் தொங்கி யது: ''மாலைக் காட்சிகளுக்குப் பதினாறு வயதுக் குட்பட்ட குழந்தைகள் அனுமதிக்கப்படமாட் டார்கள்.'' சங்கீத மேதைக்கு அப்போது வயது பதினாறு. அவர்தான் நிகோ போகோஸ் லாவ்ஸ்கி. புகழ்பெற்ற சோவியத் இசை அமைப் பாளர். ஆதாரம்: ஸ்புட்னிக்

எல்லாம் கூறி இந்த மாபெரும் வெற் றிக்குக் காரணமாக அமைந்த வீரர் களையும், அவர்களை வழி நடத்திய துறவிகளின் திருவருட் துணையையும் நன்றியுடன் சொல்லிப் பெருமிதத் தோடு உவகை மொழிகளை வழங் கினான் சேர மன்னன்:

''செல்வந்தி அடிகள் என்ற விந்தை யாற்றல் இந்த மாபெரும் வெற்றிக்கு எந்த வகையில் எல்லாம் துணை செய்தது என்பதை மனித மொழிகளிலே வெளி யிட்டுச் சொல்ல முடியாது. அந்த அரிய கடவுட் திருவருளுக்கு நமது ஒரு சிறிய காணிக்கை என்ன என் பதை இப்போது அறிவிக்கிறேன்.

எந்தத் துறவிகளின் அரும் பெரும் தவ வாழ்வினால் இந்தத் தீவுக்கு ஒரு காலத்தில் ஏற்றமும் புகழும் ஏற் பட்டனவோ, அந்தத் துறவிகளின் தவ இருக்கைகளை மீண்டும் இந்தத் தீவிலே புதுப்பித்து, அந்த ஞானச் செல்வர்களுடைய புனிதக் கழகங்கள் மறுபடியும் இந்தத் தீவிலே இயங்க வும், இந்தக் கழகங்களிலே கல்வி பயில்வதற்கு நமது தமிழகத்திலே மட்டுமல்லாமல் கடல் கடந்த நாடு

இலக்கியத்திலே விரோதமல்ல!

அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்கும் உள்ள நட்புறவைப்பற்றி நமக்கெல்லாம் தெரியும். அரசியலில் எதிரிகளானாலும் இலக்கியத்திலோ.....? இதோ பாருங்கள்:

■ ஏர்னஸ்ட் ஹெமிங்வேயின் புத்தகங்கள் ரஷ்யாவில் 17 மொழிகளில் வெளியாகி இருக்கின்றன. 57 பதிப்புகளில் 25,82,000 பிரதிகள் அச்சாகி இருக்கின்றன.

■ ஃபாக்னரின் புத்தகங்கள் 9 பதிப்புக்களில் 6,84,000 பிரதிகள் அச்சாகி இருக்கின்றன.

■ உஸ்பெகிஸ்தானில் காரகால்பாக்ஸ் என்று ஒரு வகுப்பார்; தென் சைபீரியாவின் துவா இன மக்கள் — இவ்விருவரும் 1917ம் ஆண்டுப் புரட்சிக்கு முன் தங்களுக்கென்று ஒரு மொழியே இல்லாதிருந்தவர்கள். இன்று காரகால்பாக்ஸ் மொழியில் 'கிளிமஞ்சாரோவின் பனிமுடி' என்ற நூலும் துவா மொழியில் 'கிழவனும் கடலும்' என்ற நூலும் கிடைக்கின்றனவென்றால் ஹெமிங்வேயின் புகழுக்கு வேறென்ன சான்று வேண்டும்?

ஆதாரம்: "ஸ்புட்னிக்"

களிலிருந்தும் பலரும் வந்து பயன் பெற்று உய்யவும், இந்த மாபெரும் கோட்டையிலே அறமும் சீலமும் தூய பெரு வாழ்வும் மீண்டும் நிலை பெறவும், மன நிறைவோடு ஆசை கொண்டு, அதற்குரிய முறையிலே இந்த வெள்ளைத் தீவின் அரசக் கட்டிலிலே, நம்முடைய இளை மரபுக்குரிய நல்லதோர் தலைவனைக் குறுநில மன்னனுக்குரிய அத்தனை உரிமைகளோடும் அரசேற்றுகிறேன்! இனி இந்த வெள்ளைத் தீவின் ஆட்சிப் பொறுப்பு நமது சார்பிலே இந்தத் தீவிலே நடைபெறும் வண்ணம், வேலவன்கோதையை ஆட்சித் தவிசிலே அமர்த்துகிறேன். நீலவல்லியின் தலைவன் இனி வெள்ளைத் தீவின் தலைவனாக அரசாளக் கடவன்!"

சான்றோர்கள் வாழ்த்தப் பல்லியங்கள் இயம்பின. மங்கள இசை வெற்றி முழக்கி வாழ்த்தொலி பரப்பிற்று! மன்னன் மறுபடியும் பேசத் தொடங்கினான்:

"துளு நாட்டு அரசக் கட்டிலிலே நமது இளை மன்னனுகப் பட்டம் சூடப் போகும் இளநன்னனுக்குக் கோங்குச் சேரர் மரபிலே பெண் கொள்ளவும், அதே திருவிழாவிலே துளு நாட்டு அரண்மனையிலே, அழகாடி இளநன்னியைக் கைப் பிடித்துத் துளு நாட்டுத் தானைத் தலைவனுகப் பதவி ஏற்கவும் முடிவு செய்து, அந்த முடிவையும் இந்தப் பெருமன்றத்திலே இந்த வெற்றிச் சூழலிலே, இப்போது அறிவிக்கிறேன்!"

பல்லியங்கள் ஒலித்தன. சான்றோர்கள் வாழ்த்தினார்கள். பெருமக்கள் உவகை ஒலி மொழிந்தார்கள். புலவர்கள் பாடல்களிலே தங்கள் களிப்பைக் கூறினார்கள். பாணர்கள் இசையிலே வெளியிட்டார்கள். விறலியர்கள் வெற்றிப் பெருமிதத்தோடு கூத்திசைத்தார்கள்.

வெள்ளைத் தீவின் தலைமைத் தவச்சாலையிலே துறவிகள் எல்லாரும் கூடித் தீவின் நல்வாழ்வுக்கு வழிபாடு செய்து வணங்கினார்கள்.

இத்தனை கூட்டங்களிலும், ஆரவாரங்களிலும் கலந்து கொள்ளாமல் எங்கோ ஒரு தனிமையிலே, வெள்ளைத் தீவின் துறவுக் காட்டுக்குள்ளே ஏதோ ஒரு சோலையின் பாறை ஒன்றிலே குந்தி, மன்னனையும் சுற்றத்தார்களையும் மோனமாக வாழ்த்திக் கொண்டிருந்தார் செல்வந்தி அடிகள்! எல்லா இடங்களிலும் அவரைத் தேடித் தேடிக் களைத்துப் போன ஆதிரையம்மை, இப்போது அந்த உருவத்தைத் தொலைவிலே கண்டதும் விறுவிறு என்று நடந்து வந்து அப்படியே அதிர்ந்து நின்றாள்:

"அடிகளே! துறவிகளின் துறவியார் பெருமானே! இப்படியும் நீங்கள் ஒரு சித்து விளையாடலாமா?"

இவ்வாறு கேட்டுக் கொண்டே உடம்பு பதறினாள் ஆதிரையம்மை.

"அம்மையே! என்ன சொல்லுகிறீர்கள் நீங்கள்? சித்தா? அப்படியென்றால்?"

"அண்ணலே! ஏன் இப்படி என்னைச் சோதனை செய்கிறீர்கள்? துறவிகளையெல்லாம் வகைப்படுத்தித் தொகுதி தொகுதியாக மரக்கலங்களிலே பெருந்துருத்தியிலிருந்து இங்கே அனுப்பி வைத்தீர்களே? பொன்மாலி என்ன ஆனாள்? தெரியவில்லையே. பின்னோடு வருகிறேன் என்று சொல்லி என்னை முன்னதாக அனுப்பியவளைக் காணோமே. இத்தனை கூட்டத்திலும் தேடிப் பார்த்து விட்டேன். எங்கேயும் இல்லை அவள்!"

ஆதிரையம்மையோடு சேர்ந்து தாமும் திகைப்பு அடைந்தவர் போல ஒரே வியப்போடு பார்த்தார் செல்வந்தி அடிகள்! **(அடுத்த இதழில் முடியும்)**

பல்சுவைப் பக்கம்—1.

ஒரே ஃபிலிம் சுருளைப் பயன்படுத்திப் பலமுறை படங்களை எடுக்கக்கூடிய நிரைப் படக் காமிரா ஒன்றை ஏ.வாகி ஜி. தேஜாட் என்ற அமெரிக்கர் கண்டுபிடித்திருக்கிறார். இந்தக் காமிராவை உபயோகிக்கும்போது பதிவாகும் படங்கள் மறையக்கூடியவை. தேவையானால் படத்தை அப்படியே எடுத்துக் கொள்ளலாம். இல்லாவிட்டால், இதே

படாதிபதிகள் கவனத்திற்கு!

ஃபிலிம் சுருளை மீண்டும் உபயோகிக்கலாம். புதிய படம் பதிவாகும்போது, பழைய படம் தானாகவே மறைந்து விடும். ஒரே ஃபிலிம் சுருளை மீண்டும் பயன்படுத்துவதால் செலவு மிகவும் குறைகிறது.

- மணிவாசகன்

ஆதாரம்: ஸயன்ஸ் ஜர்னல்



பிரமிட் ஆராய்ச்சி



பன்னிரண்டு வருடங்கள் பேச்சு வார்த்தை நடத்திய பிறகு அமெரிக்கா ஐக்கிய அரபுக் குடியரசு இரு நாட்டு நிபுணர்களும் அடங்கிய ஒரு குழு எகிப்தின் பிரமிட்களின் உள்ளே எக்ஸ்ரே ஆராய்ச்சி செய்யப் போகிறது. கலிபோர்னியா சர்வகலாசாலையைச் சேர்ந்த டாக்டர் ஆல்வாரஸ் தலைமையில் நாலாயிரத் தைந்நூறு ஆண்டுகளுக்கு முற்பட்டதான பிரோவாகபர் பிரமிட்டின் சுரங்கப் பாதைகளையும் அறைகளையும் ஆராய்ச்சி நடத்துகிறார்கள். காஸ்மிக் கிரணங்கள் பிரபஞ்ச வெளியிலிருந்து இந்தப் பிரமிட்டுக்குள் செல்லும் போது ஏற்படும் மாறுதல்களை விஞ்ஞானிகள் மிகநுண்ணிய மின்சாரக் கருவிகளைக் கொண்டு ஆராயப் போகிறார்களாம்.

- சண்டே டைம்ஸ்

ஜலதோஷமா?



ரொம்ப நல்லது!

ஜலதோஷம் பிடித்து விட்டதா? ரொம்ப நல்லது! சிறிய தொத்து நோயான ஜலதோஷம் பிடித்துக் கொண்டால் அதனால் புற்றுநோய், லுகேமியா போன்ற நோய்களிலிருந்து மனிதன் காப்பாற்றப்படலாமென்கிறார், இவ்விஷயத்தில் எலிகளைக் கொண்டு ஆராய்ச்சிகள் நடத்தியுள்ள டாக்டர் பிரடெரிக் வில்லாக்.

- சண்டே டைம்ஸ்

பல்சுவைப் பக்கம் -2

அமெரிக்க உற்பத்தியாளர் ஹால் டபிள்யூ. நீல்ஸ் பனத்தார் அண்மையில் தண்ணீர் அடைக்கப்பட்ட பாலித்தீன் குழாய்களைக் கார்களில் பம்பர்களாக உபயோகிக்க முடியும் என்று கண்டுபிடித்திருக்கிறார்கள். நூற்றைம்பது டாலர் விலையில் விற்கப்படவிருக்கும் இவற்றின் எடை சுமார் அறுபது பவுண்டுகள். அக்கப் பம்பர்களில் வார்க்கப்பட்ட பம்பர்களின் உட்புறம் அமைத்

பிளாஸ்டிக் பம்பர்கள்!

குள்ள பிளாஸ்டிக் குழாய்களில் தண்ணீர் நிரப்பப்பட்டு மேல்புறம் இறுக மூடப்படுகிறது. சாலையில் விபத்துகள் ஏற்பட்டால், மோதுதலினால் ஏற்படும் அதிர்ச்சியை, குழாயினுள் இருந்து கொண்டு வெளிப்படும் தண்ணீர் தாங்கிக் கொள்கிறது.

தகவல்: மீனாட்சி கிருஷ்ணன்



ரஷ்யத் துக்கடா

[மீன் பிடித்து விட்டுத் திரும்பினார்கள் இரண்டு பேர். தங்கள் அதிர்ஷ்டத்தைப் பற்றி அளக்கலானார்கள்.

ஒருவன்: நான் பிடித்த மீன்களை நிறுத்துப் பார்த்த போது எத்தனை தெரியுமா இருந்தது? ஆயிரம் பவுண்டு.

மற்றவன்: மீனை விட்டுத் தள்ளய்யா! நான் கடலிலிருந்து என்ன கொண்டு வந்தேன் தெரியுமா? ஒரு பழங்காலத்து விளக்கு. அதில் 1756 என்று பொறித்திருந்தது. அதனுள்ளே ஒரு மெழுகுவத்தி. அதிசயம், அது இன்னும் எரிகிறது.]

முதல்வன்: நீ அந்த எரியும் மெழுகுவத்தியை அணைத்தாயானால் நான் பிடித்த மீனின் நிறையைப் பாதியாகக் குறைத்துக் கொள்ளுகிறேன்.



ஓர் அமெரிக்கக் கம்பெனி "கான்சர்" என்ற பெயரில் சிகரெட்டுக்களைத் தயாரிக்கிறது. புற்றுநோய் என்ற பயங்கரமான பெயர் கொண்ட இந்தச் சிகரெட்டு பாக்கெட்டுகளைப் புகைபிடிக்காதவர்கள் வாங்குகிறார்கள். நிறையப் புகைபிடிக்கும் தங்கள் உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் பரிசளிக்கிறார்கள்!

'முத்து' - (திருநெல்லிக்)

இங்கு புற்றுநோய் விற்கப்படும்!



நந்தினிக்கு வாசுவைப் பார்த்ததும் கண்களில் நீர் பொங்கி விட்டது. வாசு அதைக் கவனிக்காதது போல் குனிந்து அவள் பெட்டியைக் கையில் எடுத்துக் கொண்டான்.

"வா, நந்தினி! கீழே இறங்கு" என்று கூறிக் கொண்டே, கும்பலில் நுழைந்து, வாசு ரயிலிலிருந்து கீழே குதித்தான்.

நந்தினி பரபரப்புடன் கண்களைத் துடைத்துக்கொண்டே, வாசுவின் பின்னால் நடந்து, ரயிலிலிருந்து இறங்கினாள்.



ஸ்டேஷனுக்கு வெளியே காரில் சென்று ஏறும்வரை இருவரும் பேசவில்லை.

காரை 'ஸ்டார்ட்' செய்த பிறகுதான் வாசு திரும்பி, தன் தங்கை நந்தினியின் முகத்தைப் பார்த்து முறுவலித்தான்.

"என்ன நந்தினி...! எப்படி இருக்கிறது புக்ககத்து வாசம்?"

வாசு கேட்டதுதான் தாமதம், நந்தினி முகத்தை மூடிக் கொண்டு விக்கி விக்கி அழ ஆரம்பித்து விட்டாள்.

வாசுவுக்கு அவள் ஏன் அழுகிறாள் என்று நன்றாகத் தெரியும். ஊரில் கணவனுடனும் அவன் வீட்டார்களுடனும் அவள் மனஸ்தாபப்பட்டுக் கொண்டு அண்ணனுக்குத் தந்தியடித்துவிட்டுத் தனியாக ரயில் ஏறி வந்திருக்கிறாள்.

இந்த நிலைமையில் ஏதும் அறியாதவனைப் போல் வாசு குசலம் விசாரித்தது அவள் துக்கத்தைக் கிளறாமல் என்ன செய்யும்?

"சீச்சீ! எதுக்கு நந்தினி இப்படி அழறும்? இப்பொழுது என்ன நடந்து விட்டது? அம்மா என்னமோ ஏதோன்னு துடிச்சண்டிருக்கா. உன் மன்னி ஜெயம்மா கூட நேற்று பிறந்தகம் போக உத்தேசித்திருந்தவள் நீ வருவதை அறிந்து, தன் பயணத்தை ஒத்திப் போட்டுவிட்டாள். நீ இப்படி அழுது கொண்டே போய் இறங்கினால் என்ன நினைப்பார்கள்! முகத்தைத் துடைத்துக் கொள்..." என்று வாசு இதமாகக் கூறவும், நந்தினி கைக்குட்டையால் முகத்தைத் துடைத்துக் கொண்டாள்.

வீட்டை அடைந்ததும் நந்தினி திரும்பவும் தாயாரைப் பார்த்து அழத் தொடங்குவாள் என்று வாசுவுக்குத் தெரியும். கலியாணமாகியும் தன் தங்கை இன்னும் குழந்தை உள்ளத்துடன் இருக்கிறாளே என்று மனத்துக்குள் எண்ணிக் கொண்டான்.

கார் வீட்டின் முன் வந்து நின்றது.

வாசு கீழே இறங்கிக் கொண்டே "அம்மா நந்தினி வந்தாச்சு... பெரிய காரை எடுத்துப் போகச் சொல்லக் கூடாது! நந்தினி என்ன பருமன் பருத்துப் போயிருக்கிறாள் வந்து பாரேன்!" என்று கூவிக் கொண்டே உள்ளே நுழையவும், அவன் பின்னால் வந்த நந்தினி தன்னையும் மறந்து 'களுக்'கென்று சிரித்தாள்.

எதிரில் வந்த ஜெயம்மாவைப் பார்த்துவிட்டு, "என்ன மன்னி! இன்னும் இந்த அண்ணனின் குறும்புத்தனம் மறையவே இல்லையே...!" என்று வியக்கவும் அப்பொழுதுதான் வெளியில் வந்த அவள் தாயார் சரஸ்வதி, "என்னம்மா நந்தினி, உடம்பு துரும்பா இளைச்சுப் போச்சே...!" என்ற அங்கலாய்ப்புடன் மகளை அணைத்துக் கொண்டாள்.

•

நந்தினியும்...

"துரும்பா? என் காரின் ஸ்டீயரிங்கை உடைத்த துரும்பென்று சொல்லு!" என்று வாசு சிரிப்பும் கேலிக் குரல் எழுப்பினான்.

"[illegible] மாமியாரும் இருக்கிறான்" என்று எண்ணத்தில் முகம் விகசித்த நந்தினி, தாயாரையும், மதனியையும் பார்த்து முகம் மலரச் சிரித்தாள்.

'அப்பாடி! ஒரு வழியாக வரவேற்கும் படலத்தைச் சுமுகமாக முடித்து விட்டேன்!' என்று எண்ணி வாசு பெருமூச்சு விட்டான்.

டிபன் — காப்பி சாப்பிடும்போது சரஸ்வதி யம்மாள் சும்மா இருக்க வேண்டாமோ!

"என்னடி நந்தினி? எதுக்கு இப்ப திடீரென்று தனியா புறப்பட்டு வந்தே?" என்று கேட்டு, நந்தினிக்குப் புக்கக நினைவு களைத் திரும்பக் கொண்டு வரவேண்டுமோ!

நந்தினி கையில் எடுத்த இட்டிலியைக் கீழே போடுவதா, அல்லது வாயில் போடுவதா என்று ஒரு கணம் தடுமாறி, பிறகு வாயில் போட்டுக் கொண்டு விம்மி விம்மி அழ ஆரம் பிக்கவே, வைணம்மா பரிதாபமாக அவளைப் பார்க்க, சரஸ்வதி அம்மாள், "என்னடி நந்தினி! என்ன நடந்தது? சொல்லிவிட்டுத் தான் அழேன்!" என்று பதற்றத்துடன் வினவினாள்.

"முதலில் நின்றுவிட்டு, அப்புறம், சொல்லிவிட்டு அழு!" என்று வாசு கூறி யதைக் காதில் வாங்கிக் கொள் ளாமலே "எல்லாம் அந்தக் குரங் கால் வந்த வினை" என்று நந்தினி திக்கித் திக்கிச் சொல்லவும் எல் லோரும், "குரங்கா!" என்று ஒரே சமயத்தில் ஆச்சரியக் குரல் எழுப்பினார்கள்.

நந்தினிக்கே தன் துக்கத்தின் நடுவில் சிரிப்பு பொத்துக் கொண்டு வந்தது. அதை அடக்கிக்கொண்டு, "ஆமாம்....ஆமாம்...வாலில்லாக் குரங்கு! வனஜா இருக்காளே, அவள்தான்!" என்று நொடிப் புடன் கூறினாள்.

"யாருடி? உன் நாத்தனார் வனஜாவையா சொல்றே? கலியா ணத்தின்போது உன் காலையே சுத்திண்டிருந்தாளே!" என்று சரஸ்வதி அம்மாள் கேட்கவும், "ஆமாம், ஆமாம்! அவளேதான். இப்போ காலை விட்டு விட்டுக் கழுத்தைச் சுற்றி இருக்கறு!" என்று நந்தினி ஆங்காரத்துடன் சொல்லி விட்டு, கண்களில் இன் னும் கொஞ்சம் நீர். வரவழைப் பதற்குப் பிரயத்தனம் செய்தாள்.

சம்பாஷணை ஒரு மாதிரியாகத் திரும்பு வதைப் பார்த்து வைணம்மா மெதுவாக அங்கிருந்து நழுவிவிட்டான்.

சரஸ்வதி அம்மாளும் ஒரு பெருமூச்சுடன் எழுந்தாள்.

'நந்தினிக்குச் செல்லம் கொடுத்து வளர்த் ததன் விளைவுதான் இதெல்லாம்' என்று அவள் நன்கு உணர்ந்திருந்ததுதான் அவள் பெருமூச்சுக்குக் காரணம்.

நந்தினி சிறு வயதிலிருந்தே தாயார், தமை யனின் அன்பில் ஊறி வளர்ந்தவள். அவ ளுக்குப் பிறருடைய மனத்தைப் புரிந்து கொள்ளும் ஆற்றல் இல்லை. எல்லாம் தன் [illegible] என்னுவாள். யாருக்கும் வளைந்து போகாத சுபாவம்.

நந்தினிக்குக் கலியாணமான பத்தாம் நாள். வாசுவுக்கும் எதிர்பாராதவிதமாக மணம் நிச்சயமாகி நடந்தது. வைணம்மா நல்ல பெண் என்பதில் சரஸ்வதி அம்மாளுக்கு வெகு திருப்தி.

மருமகள் பொறுப்புடனும், பொறுமை யுடனும் குடித்தனம் நடத்துவதைப்போல, தன் பெண் நந்தினியும் குடும்பத்தை நடத்தி நல்ல பெயரெடுக்க வேண்டுமே என்று அந்தத் தாயுள்ளம் கவலைப்பட்டது.



ஒரு நாத்தனார்..!

மாஸ். பத்மாவதி

கலியாணமாகி நான்கு மாதங்களில் நந்தினியிடமிருந்து நாற்பது கடிதங்களாவது வந்திருக்கும். எல்லாம் புக்ககத்தினரை— முக்கியமாக நாத்தனார் வனஜாவைக் குறை கூறி எழுதப்பட்ட கடிதங்கள்!

வாசுவும், சரஸ்வதி அம்மாளும் முதலில் கவலைப்பட்டாலும் நாளடைவில் நந்தினி நான்கு பேருடன் பழகித் திருந்தி விடுவாள் என்று எண்ணினார்கள்.

ஆனால் அவர்கள் எண்ணியதற்கு நேர் மாறாக நந்தினி சண்டை போட்டுக்கொண்டு தனியாகப் பிறந்தகம் வந்துவிடுவாள் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை.

சரஸ்வதி அம்மாள் பெண்ணுக்கு எவ்வளவோ புத்திமதிகள் சொல்லிக் கடிதம் எழுதியும் இப்படிச் செய்து விட்டாளே என்ற ஆற்றாமையோடு 'எதற்கும் விட்டுப் பிடிப்போம்' என்று எண்ணிக் கொண்டு ஒரு பெருமூச்சுடன் எழுந்து உள்ளே சென்று விட்டாள்.

கொஞ்ச நேரம் கழித்து அவள் உள்ளே போனபோது, அடுப்படியிலிருந்த சரஸ்வதி அம்மாள் 'என்ன இருந்தாலும் சௌம்யாவின் பொறுமையில் நூற்றிலொரு பங்கு இவளுக்கு வராது...' என்று முணு முணுத்தது காதில் விழவும் ஒரு கணம் ஸ்தம்பித்து நின்ற நந்தினி, மறுகணம், ''ஓஹோ! அப்படியா சங்கதி?...'' என்று கறுவிக்கொண்டே தன் அறைக்குள் நுழைந்தாள்.

மறுநாள் மாலை அனைவரும் கடற்கரைக்குக் கிளம்பிக் கொண்டிருந்தனர். காரில் ஏறும் சமயம் திடீரென்று நந்தினி, ''அண்ணா! ஐந்து நிமிடம்! இந்தப் புடவை பிடிக்கவில்லை. வேறு மாற்றிக்கொண்டு வருகிறேன்'' என்று கூறியவள், சௌம்யாவின் பக்கம் திரும்பி, ''மன்னி! கொஞ்சம் உங்கள் பீரோச் சாவியைக் கொடுங்கள்...'' என்று கேட்கவும் வாசு திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான்.

சௌம்யா சிரித்துக் கொண்டே தன் கைப் பையிலிருந்த பீரோச் சாவியை எடுத்து நந்தினியிடம் கொடுத்தாள்.

அரை மணி நேரம் கழித்து வெளியே வந்த நந்தினியின் மேனியை சௌம்யாவின் விலையுயர்ந்த சில்க் புடவை அலங்கரித்திருந்தது.

வாசு வியப்புடன் பார்க்க, சௌம்யா புன்முறுவலுடன் ''நந்தினிக்கு இந்தப் புடவை எவ்வளவு நன்றாக இருக்கிறது!'' என்று கூறினாள்.

நந்தினி ஒரு கணம் நின்று சௌம்யாவின் முகத்தை உற்றுப் பார்த்தவள், மறுகணம் சௌம்யாவைத் தள்ளிக் கொண்டு காரின் முன் ஆசனத்தில் வாசுவின் அருகில் ஏறி அமர்ந்து கொண்டாள்.

நந்தினியின் நாசுக்கற்ற செய்கையைப் பார்த்து வாசு ஸ்தம்பித்து உட்கார்ந்திருந்த போது, நந்தினி அவன் முகத்தைத் திரும்பியும் பாராமல், கதவைப் 'படா'ரென்று சாத்திக்கொண்டாள்.

வாசு திகைப்பிலிருந்து விடுபட்டுத் திரும்பிப் பார்த்தபோது சௌம்யா புன்முறுவலுடன் பின் ஆசனத்தில் ஏறி அமர்ந்தாள்.

நந்தினி கலகலப்பாகப் பேசிய பேச்சுக்கள் ஒன்றும் வாசுவுக்கு ரசிக்கவில்லை. சௌம்யாவிடம் ஒரு வார்த்தை கூடக் கேட்காமல் நந்தினி அவள் பீரோவைத் திறந்து, புடவையை எடுத்து உடுத்திக் கொண்டதை எண்ணிப் பொருமியபடியே அமர்ந்திருந்தான் அவன்.

தன் மனைவியின் முகத்தில் சிறிதும் வருத்தம் காணப்படாததை எண்ணும்போது அவனுக்கு வியப்பாக இருந்தது. மறு நிமிடம் பெருமையுடன் திரும்பி மனைவியைப் பார்த்து முறுவலித்தான்.

சௌம்யா பெரிய விருந்துகளுக்கே உடுத்திச் செல்லும் அந்தச் சேலை, கடற்கரை மணலில் புரட்டப்பட்டுக் கசங்கியதுமல்லாமல், நந்தினி குதூகலத்துடன் அலைகளில் கால் வைத்து நின்றபோது நனைந்ததைப் பார்த்து, வாசு கண்களை மூடிக் கொண்டான்.

வீட்டுக்கு வந்து பார்த்ததும் அவன் இடிந்து விட்டான். சௌம்யா, பீரோவில் அழகாக அடுக்கி வைத்திருந்த உடைகள் எல்லாம் அலங்கோலமாகக் கலைக்கப்பட்டுக் கிடந்தன.

பீரோவின் அருகில் மௌனமாக நின்ற சௌம்யாவைப் பார்த்து நந்தினி, ''என்ன மன்னி! அவசரத்தில் கலைத்து விட்டேனா?'' என்று கேட்டுக் கொண்டே அவள் முகத்தை உற்றுப் பார்த்தபோது ''அதனாலென்ன பரவாயில்லை. நான் மடித்து வைத்துக் கொள்ளுகிறேன்'' என்று கூறுவதைப் பார்த்து ஏனோ நந்தினியின் முகம் கறுத்தது.

உடனே தன்னைச் சமாளித்துக் கொண்டு, ''எவ்வளவு நல்ல நல்ல புடவைகள் வைத்திருக்கிறீர்கள். எனக்கு உடுத்திப் பார்க்க ஆசையாக இருக்கிறது....'' என்று நந்தினி நீட்டி முழக்கியபோது, ''ஆஹா அதற்கென்ன? உடுத்திப் பாரேன்...'' என்று சௌம்யாவின் குரல் நிதானமாகவே வெளி வந்தது. இதைப் பார்த்துத் திகைப்படைந்த நந்தினி, தன் உணர்ச்சிகளை மறைத்துக் கொண்டு அவசரமாக அறையிலிருந்து வெளியேறினாள்.

நந்தினி அன்றிலிருந்து தன் பெட்டியைத் திறக்கவேயில்லை. சௌம்யாவின் உடைகளும், நகைகளும்தான் அவளை அலங்கரித்தன. சௌம்யாவே சும்மா இருக்கும் போது தாங்கள் எப்படி மறுத்துக் கூறுவது என்று சரஸ்வதி அம்மாளும் வாசுவும் பேசாமல் இருந்தனர்.

நந்தினி தினம் ஒரு புடவையை உடுத்திக் கொள்வதுடன் நின்றாளா! அதுதான் இல்லை.

அன்று நந்தினி, சௌம்யாவின் பெரிய ஜரிகைப் புடவையை இரண்டங்குலம் கிழித்துவிட்டபோது, வாசு பொறுமையை இழந்து விட்டான்.

''என்ன நந்தினி!'' என்று படபடப்பாக ஏதோ சொல்ல வந்தவன், ''ப்பூ... இவ்வளவுதானே கிழிந்திருக்கிறது. மிஷினில் ஒரு அடி அடித்து விடலாம்...'' என்று சாவகாசமாகக் கூறிய தன் மனைவியைப் பார்த்துப் பேச்சு வராமல் அமர்ந்து விட்டான்.

மற்றொரு நாள் சரஸ்வதி அம்மாளும் நந்தினியின்மேல் மிகவும் ஆத்திரப்படும்படியான சம்பவம் ஒன்று நடந்தது.

வாசு தனக்குச் சம்பள உயர்வு கிடைத்த தென்று அன்று நந்தினிக்கும் ஸௌம்யா வுக்கும் புதுப் புடவை வாங்கக் கடைக்கு அழைத்துச் சென்றான்.

வாசுவும், அவன் தாயாரும் சிறிதும் நன் றாக இல்லை என்று கூறியும் கேளாமல், நந்தினி, மங்கிய கலரில் ஒரு புடவையைத் தனக்காகத் தேர்ந்தெடுத்துக் கொண்டாள். ஸௌம்யா தேர்ந்தெடுத்துக் கொண்ட புடவை மிகவும் நேர்த்தியாக இருந்தது.

மாலை புதுப் புடவை அணிந்து கொண்டு கோவிலுக்குப் போக அவர்கள் திட்டமிட் டிருந்தனர்.

கடைசி நிமிஷத்தில் நந்தினி, தனக்கு ஸௌம்யாவின் புடவைதான் பிடிக்கிற தென்று கூறி, அதைப் பிரித்து உடுத்திக் கொண்டுவிட்டாள்.

ஒருவருக்கும் பிடிக்காத புடவையை ஸௌம்யா உடுத்திக் கொள்ள வேண்டிய தாயிற்று.

சரஸ்வதி யம்மாளுக்கும் வாசுவுக்கும் ஸௌம்யாவின் முகத்தை நிமிர்ந்து பார்க் கவே வெட்கமாக இருந்தது.

''இந்தப் பெண்தான் இவ்வளவு பொறு மையாக இருப்பானேன்! என் புடவையைக் கொடுக்க மாட்டேன் என்று வாய் திறந்து சொல்லக் கூடாதா?'' என்று சரஸ்வதி யம்மாள் மனத்துக்குள் அங்கலாய்த்தாள்.

வாசுவுக்கு நந்தினி மேல் அடங்காத கோபம் ஏற்பட்டாலும் அதை வெளிக் காட்டாமல் அடக்கிக் கொண்டான்.

இது மாதிரி ஒன்றல்ல. பல நிகழ்ச்சிகள் தொடர்ந்து நிகழ்ந்து ஸௌம்யாவின் பொறு மையைச் சோதித்தன.

நந்தினியை ஊருக்கு அனுப்பி விட் டால் போதும் என்று எண்ண ஆரம்பித்து விட்டான் வாசு.

இந்த நிலையில் சிறு தவறுகளுக்கெல்லாம் காரணமின்றி ஸௌம்யா மீது கோபப்பட வும் ஆரம்பித்தான்.

அவளோ நந்தினியின் விஷயமாக எதுவும் பேசாமலிருப்பது வேறு அவன் ஆத்திரத்தைக் கிளப்பியது.

அன்று சமையலில் அதிக உப்பு போட்டு விட்டாளென்று வாசு ஸௌம்யாவைச் சிறிது கடுமையாகத் திட்டிவிட்டான்.

ஸௌம்யா பதில் பேசாமல் ஓர் ஓரமாக நின்றிருந்ததை நந்தினி உற்றுப் பார்த்துக் கொண்டேயிருந்தாள். குற்றமுள்ள அவள் நெஞ்சு குறுகுறுத்தது. ஸௌம்யா சமைத்து முடிய பிறகு திருட்டுத்தனமாக உப்பை அள்ளிப் போட்டதை எண்ணி இப்பொழுது அவள் நெஞ்சு கரித்தது. உடனே தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தாள். வாசு அவளை வியப்புடன் திரும்பிப் பார்த்தான்.

நந்தினி அழுது கொண்டே ''அண்ணா! என்னை மன்னித்துக் கொள். நான் மன்னி யிடம் தோற்றுவிட்டேன். நீயும் அம்மாவும் மன்னியின் பொறுமையில் சிறிதுகூட எனக்கு இல்லாதது என்று கூறுக் காட்டுவதைக் கண்டு எனக்கு ஆத்திரம் பொங்கிக்கொண்டு வந்தது. என் நிலையில் மன்னி இருந்தால் அவ ளும் என்னைப் போலவே சண்டை போட்டுக் கொண்டு பிறந்தகத்துக்குச் சென்றுவிடு வாள் என்று எதிர்பார்த்தேன். நான் செய்த இடையூறுகளில் பத்தில் ஒரு பங்கு கூட வனஜா எனக்குத் தொல்லை கொடுத்ததில்லை. அப்படியிருந்தும் நான் அவளை எப்பொழு தும் குற்றக் கண்களுடனேயே பார்த்தேன். மன்னி நான் செய்த அட்டூழியங்களைப் பொறுத்துக் கொண்டு எனக்கு நல்ல பாடம் போதித்து விட்டாள்...'' என்று கூறியவள் ஓடிச் சென்று ஸௌம்யாவை அணைத்துக் கொண்டாள்.

மறுநாள் நந்தினியை ரயிலேற்றிவிட்டு நிம்மதியுடன் வீடு திரும்பிய வாசு, ஆவலுடன் ஸௌம்யாவைத் தேடி, அவள் அறையுள் நுழைந்தபோது திடுக்கிட்டான்.

ஸௌம்யா தன் கட்டிலில் குப்புறப் படுத்து விம்மிக் கொண்டிருந்தாள்.

வாசு பதறிச் சென்று அவளைத் தூக்கினான்.

ஸௌம்யா அழுது கொண்டே ''நான் உங்களையும் மற்றவர்களையும் என் நடிப்பால் ஏமாற்றிவிட்டேன். நந்தினியையும் அவள் செய்கைகளையும் நான் முதல் நாளிலிருந்தே வெறுத்தேன். நீங்களும், உங்கள் அம்மாவும் நான் மிகவும் பொறுமை உள்ளவள் என்று நம்பிக் கொண்டிருப்பதைக் காக்க எண்ணியே எனக்கு நந்தினி மேல் ஏற்பட்ட கோபத்தை இவ்வளவு நாட்கள் அடக்கிக் கொண்டிருந் தேன். அவள் ஊருக்குப் புறப்பட்டுப் போனதும் என்றால் என்னைக் கட்டுப்படுத்த முடியவில்லை. வனஜா நந்தினிக்கு நாத்தனா ரென்றால், நந்தினி எனக்கு நாத்தனார் தானே!'' என்று கூறியவள் அலங்கோல மாகக் கிடந்த தன் பொருள்களின் மேல் ஒரு கணம் தன் கண்களை ஓடவிட்டாள்.

பிறகு, ''நந்தினி மூலம் எனக்கு ஏற்பட்ட நஷ்டங்களை எண்ணிப் பார்த்தபோது மனத் தில் புழுங்க என்றால் முடியாது. நான் பிறந்தகம் போகிறேன்!'' என்று கூறிக் கொண்டே பெட்டியில் துணிகளை வேகமாக அடுக்க ஆரம்பித்த ஸௌம்யாவைப் பார்த்து வாசு ஸ்தம்பித்து நின்றான்.

மறு கணம் முகம் பிரகாச மடைய, ''ஸௌம்யா! உன் மதனி வித்யாவுக்கு நீயும் ஒரு நாத்தனார்'' என்று கூறியபடி திகைத்து நின்ற ஸௌம்யா மூடிவிட்ட பெட்டியைத் திறந்து துணிமணிகளை எடுத்துத் திரும்பப் பீரோவில் வைத்தான்.

நீச்சல் உடை வாழ்க!



அலெக்ஸாந்திரியா கடற்கரையில் அல்பான்ஸ் ராபெப் என்ற 25 வயது இளைஞர் நின்றுகொண் டிருந்தார். இரண்டு மூன்று பெண்கள் நீச்சல் உடையில் அங்கே வந் தார்கள். இளைஞர் மகிழ்ச் சியுடன் ஒரு கூச்சல் போட்டார். அவ்வளவு தான். அந்த விநாடி முதல் பேச ஆரம்பித்து விட்டார் அந்தப் பிறவி ஊமை! - ''வீக் எண்ட்''

-லெக்ஸி.



திருமுருக கிருபானந்தவாரியார்

90. சிவம் கலந்த சிலந்தி

புறவின் பொருட்டுத் துலை புகுந்து தியாகம் புரிந்த சிபியின் வழி வந்த சோழர்களுக்கு உரிமையாகிய சோழவள நாட்டிலே, காவிரி நதிக்கரையிலே சந்திர தீர்த்தத்தின் அருகில் ஒரு சோலை உண்டு. அப்பூங்காவில் வெண்ணாவல் மரத்தின் கீழ் விளங்கும் சிவலிங்கத்தை ஒரு வெள்ளானை தவ உணர்வுடன், தும்பிக்கையில் தண்ணீர் முகந்து ஆட்டிப் பூங்கொத்துக்களை எடுத்துச் சாத்தி வணங்கி வழிபாடு செய்யும். அதனால் அது திரு-ஆனைக்கா என்று பேர் பெற்றது.

அங்கு அறிவுடைய ஒரு சிலந்தி, மரத்தின் சருகு இறைவன் மீது உதிராவண்ணம், அன்புடன் தன் வாய் நூலால் பந்தரிட்டது.

இறைவன் மீது இவ்வாறு வாய் நூலால் பந்தரிடுவது அநுசிதம் என்று கருதிய யானை அதனை அழித்துவிட்டு வழக்கம்போல் பூசித்து விட்டுச் சென்றது. சிலந்தி மீளவும் அன்புடன் பந்தரிட்டது. மறு நாள் மறுபடியும் யானை அழித்தது.

இவ்வண்ணம் பல முறை நிகழ்ந்தது. இதைக் கண்ட சிலந்தி சினமுற்றது. "இறைவனுடைய திருப்பந்தரை அழித்துச் சிவப்பணிக்கு இடர் புரியும் இந்த யானையைக் கொல்ல வேண்டும்" என்று கருதியது. நூலால் பந்தரிட்டு அதில்ஒருபுறம் மறைந்திருந்தது. பூசிக்க வந்த யானை அதை அழிக்கும்போது சிலந்தி யானையின் தும்பிக்கைக்குள் நுழைந்து கடித்தது. அதன் விஷ வேகத்தாலும், கடியினால் ஏற்பட்ட வேதனையாலும் துன்புற்ற யானை மண் மிசை விழ்ந்து புரண்டது. தும்பிக்கையைப் பல முறை பூமியில் மோதியது. அதனால் தும்பிக்கையுள் சிக்கிய சிலந்தி மாண்டது. சிலந்தி விஷத்தால் யானையும் மாண்டது.

இறைவன் அருட்காட்சி தந்து யானைக்கும் சிலந்திக்கும் திருவருள் புரிந்தார். யானை சிவபதம் உற்றது. இறைவனுக்குப் பந்தரிடும் பணியில் அறிவிருப்புடைய சிலந்தி சோழர் குலத்தில் மன்னவனாகப் பிறந்து மேலும் கோயில் பணி புரியுமாறு இறைவன் திருவருள் புரிந்தார்.

திருக்கயிலையில் சிவகணத்தவருள் மாலியவான், புட்பதந்தன் என்ற இருவர், தமக்குள் சிவத்தொண்டில் தாம் தாமே சிறந்தவர் என்று கருதி மாறுபட்டனர். ஒருவரையொருவர் அது காரணமாகச் சினந்து, மாலியவான் புட்பதந்தனை யானையாகுமாறு சபித்தனன்; புட்பதந்தன் மாலியவானைச் சிலந்தியாகுமாறு சபித்தனன். இருவரும் இறைவன் ஆணையின்படி இத்திருத்தலத்திலே யானையும் சிலந்தியுமாகப் பிறந்து, சிவபிரானுடைய திருத் தொண்டிலேயே ஈடுபட்டு, பழம் பிறப்பின் பகை காரணமாக இப்பிறப்பிலும் மாறுபட்டுப் பகைத்து மாண்டு, முடிவில் வீடுபேறு பெற்றனர். முதலில் யானையைக் கொல்லச் சிலந்தியே முயன்றதனால் அதற்கு மீட்டும்

ஒரு பிறப்பு வந்தது. அப்பிறப்பும் மேலானதாக எய்தியது.

வாய் நூலால் பந்தரிட்ட புண்ணியத்துக்கு மன்னனாகப் பிறந்து உலக முழுவதும் புரக்கும் பெரும்பேறு சிலந்திக்கு உண்டாயது என்றால் ஆலயப் பணியின் பெருமையை இதனால் நன்கு உணர்ந்து கொள்ளலாம்.

"வாய்க்கலந்து நூலிழைத்த
வாய்ச்சிலம்பி தன்னையுயர்
கோச்செங்கட் சோழனெனக்
கூட்டினையே" (இராமலிங்கர்)

நூலால் பந்தரிட்ட சிவபுண்ணியம் அரச பதவியைத் தருமாயின், கல்லால் ஆலயம் எழுப்பிய தருமசீலர்களுக்கு எத்துணைப் பெரிய பதம் கிடைக்கும்?

சுபதேவன் என்ற சோழ மன்னன் கமலவதி என்ற மனைவியுடன் சோழ நாட்டை அரசு புரிந்தான். அவன் மகப்பேறு இன்மை குறித்து வருந்தினான். தில்லையம்பதி சென்று அம்பல வாணரை வேண்டித் தவம் புரிந்தான். சிவபெருமான் திருவருள் செய்தபடி சிலந்தி வந்து கமலவதியின் வயிற்றில் கருவடைந்தது.

கரு வளர்ந்து குழந்தை உதிக்கும் பருவம் வந்தது. சோதிட வல்லுநர், "இன்னும் ஒரு நாழிகை கழித்துக் குழந்தை உதிக்குமாயின் இம்மூவுலகும் ஆளக்கூடியதாக இக்குழந்தையிருக்கும்" என்று கூறினர். அது கேட்ட அரச மாதேவி மகன் ஒரு நாழிகை கழித்துப் பிறப்பதற்கு வழி யாது என்று சிந்தித்தாள். தன் தோழிகளுடன் ஆய்ந்தாள். கால் மேலாகவும், தலை கீழாகவும் தன்னை யமைக்குமாறு கூறினாள். அவ்வண்ணமே அவளைத் தலைகீழாகத் தூக்கிக் கட்டினார்கள். காலம் உணர்ந்தார் கூறிய நேரம் வந்தவுடன் கட்டினை நீக்கி மகவைப் பெற்றெடுத்தாள். இதனால் குழந்தை கண் சிவந்து பிறந்தது.

தாய் என் மகன், "செங்கணான்" என்று கூறி அக் குழந்தையை அணைத்தாள். ஆவி பிரிந்தாள். தன் உயிர்க்கு இறுதி பயக்கும் என்று தெரிந்தும், மகன் சிறப்பை முன்னிட்டு அளக்க முடியாத வேதனையைத் தாங்கி, பிள்ளையைப் பெற்று உயிர் துறந்தாள் என்னில் தாயன்பு எத்துணை உயர்ந்தது!

தாயைப் பிரிந்த சேயை சுபதேவன் இனிது வளர்த்தான். கோச்செங்கண்ணர் வேதாகமங்களையும், வில்வேதத்தையும் கற்றுணர்ந்தார். உரிய காலத்தில் மகனுக்கு மகுடம் புனைந்து சுபதேவன் கானகம் புகுந்து தவம் செய்து சிவபதம் புகுந்தான்.

கோச்செங்கட் சோழர் உலகத்தை ஒரு நெறி நிறுத்தி அரசாள்வாராயினர். அவர் முற்பிறப்பின் உணர்வு பெற்றார். சிவபெருமானுக்குக் காதலோடு ஆலயம் பல கட்ட எண்ணினார். திருவானைக்காவில் தாம் முதலில் அருள் பெற்ற காரணத்தால் அங்கு வெண்ணாவலடியில் வாழும் செழு நீர்த் திரளாகிய சிவமூர்த்திக்கு அழகிய ஆலயம் கட்டி முடித்தார். முற்பிறப்பில் ஆனை செய்த இடரை நினைத்து ஆனை நுழையாதபடி வாயில் வைத்து அமைத்தார். ஐந்து பூதத் தலங்களில் ஒன்றாகிய இந்த க்ஷேத்திரக் கருவறை சிறு வாயிலுடன் அமைந்துளது இன்றும் காணப்பெறும்.



மந்திரிகளை ஏவிச் சோழ நாட்டில் ஆங்காங்கு சிவாலயங்கள் பல புதுக்கினார். அக்கோயில்கள்தோறும் அமுது படைக்கும் திருவிழாக்களுக்கு நிபந்தங்களும் அமைத்தார்.

கோச்செங்கட் சோழர் சிவபெருமானுக்கு எழுபது கோயில்களும் திருமாலுக்கு மூன்று கோயில்களும் எழுப்பியதாகத் தெரிகிறது. இதனைத் திருமாலின் அடியாராகிய திருமங்கை யாழ்வார் கூறுவது விசேஷமான சிறப்புடையது.

இருக்கிலங்கு திருமொழிவாய் எண்தோள் ஈசற்கு
எழில்மாடம் எழுபதுசெய் துலகம் ஆண்ட
திருக்குலத்து வளச்சோழன் சேர்ந்த கோயில்
திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே

கோச்செங்கட் சோழர் முடிவில் திருத்தில்லை சென்று அம்பலத்தாடும் ஆடலரசனை ஆறு காலங்களிலும் வழிபட்டு மகிழ்ந்தார். அங்கு இறைவனைப் பூசிக்கும் அந்தணர்களுக்கும் மாளிகைகள் பல புதுக்கித் தந்தார். சஞ்சிதவினை தீர்க்கும் குஞ்சித பாதத்தில் கலந்து இன்பமெய்தினார்.

இவருடைய பெருமையை அடியில் வரும் அப்பர் பெருமான் தேவாரத்தாலும் அறியலாம்.

சிலந்தியும் ஆனைக்காவில் திருநிழற் பந்தர் செய்து
உலந்தவண் இறந்தபோதே கோச்செங்கணனுமாகக்
கலந்தநீர் காவிரிசூழ் சோனாட்டுச் சோழர்தங்கள்
குலந்தனில் பிறப்பித்திட்டார் குறுக்கை விரட்டனாரே

91. பீடம் பெற்ற பாணனார்

நடு நாட்டில் எருக்கத்தம்புலியூர் என்று ஒரு தலம் உண்டு. இது திருமுதுகுன்றமெனும் விருத்தாசலத்துக்குத் தெற்கே ஏழு மைலில் உள்ள உயர்ந்த சிவத்தலம். சம்பந்தர் பாடல் பெற்றது. இத்தலத்துக்கு ராஜேந்திர பட்டினம் என்னும் பெயரும் உண்டு. இத்தலத்தில் உள்ள அம்மையின் பெயர் நீலமலர்க்கண்ணம்மை; சுவாமி பெயர் நீலகண்டேசுவரர். தலவிருட்சம் வெள்ளெருக்கு. கோயிலுக்குள் வெள்ளெருக்கஞ் செடியுளது.

அத்திருத்தலத்தில் பாணர் மரபில் அவதரித்தவர் திருநீலகண்ட யாழ்ப் பாணர்.

திருத்தொண்டத் தொகை பாடும் பொருட்டே சுந்தரமூர்த்தி நாயனார் அவதாரம் செய்தார். எனவே, திருவாரூரிலே இறைவனே அடியெடுத்துக் கொடுக்கப் பாடினார். தொகையடியார் ஒன்பதின்மர். தனியடியார் அறுபது. ஆக அறுபத்தொன்பது. பின்னே திருத்தொண்டத் தொகை பாடிய சுந்தரர், அவரை ஈன்ற சடையனார், இசை ஞானியார், ஆக மூவரையும் நாயன்மார்களில் சேர்த்தார் நம்பியாண்டார் நம்பி. எனவே, சுந்தரர் பாடியருளியது அறுபது நாயன்மார்களைப் பற்றியே. அறுபதுதான் நல்ல எண். அந்த அறுபது நாயன்மார்களிலே 'இல்லைவாழ் அந்தணர்' என்ற தொகையடியாரை விட்டுத் தனியடியாரைப் பார்ப்போமாயின், முதலில் நின்றவர் திருநீலகண்ட நாயனார். இறுதியில் நிற்பவர் திருநீலகண்ட யாழ்ப்பாணராவர். அறுபதில் முதலிலும் முடிவிலும் இருந்து அணி செய்பவர்கள் திருநீலகண்டர் என்ற பேருடையவர்களே. சுந்தரர் கூறிய அறுபது நாயன்மார்களில் முடியணியாக நின்று அலங்கரிக்கும் திருநீலகண்ட யாழ்ப் பாணரின் பெருமை அளவிடற்கரிய தன்றோ ?

இவரது மனைவியார் இசையே ஒரு வடிவெடுத்தது போன்றவர். அவர் பெயர் மதங்கசூளாமணியார். சிவ பெருமானுடைய திருவடிகளில் சிறந்த அன்புடைய இவ்விருவரும் ஈசன் புகழை யாழிசையுடன் இனிது உள்ளம் உருகிப் பாடி வழிபடுவார்கள்.

யாழ் வேறு; வீணை வேறு.

"இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்"
-திருவாசகம்


வீணையை முதன் முதலாக அமைத்து, ஒடுங்கிய உலகம் மீண்டும் மலரும் பொருட்டுச் சிவபெருமான் அதனை இசைத்தார் என்பதைத் தேவாரத்தில் அறியலாம்.

பெருங்கடல் மூடிப் பிரளயங்கொண்டு
பிரமனும் போய்
இருங்கடல் மூடிப் பிறக்கும்
இறந்தான் களேபரமும்
கருங்கடல் வண்ணன் களேபரமும்
கொண்டு கங்காளராய்
வருங்கடல் மீளநின் றெம்மிறை
நல்வீணை வாசிக்குமே

திருநீலகண்ட யாழ்ப்பாணர் மனைவியாருடன் மதுரையை அடைந்து, ஆலவாயண்ணலாரது ஆலயத்துக்கு முன் நின்று இறைவனுடைய புகழை விதிமுறையாக யாழில் அமைத்து வாசித்தார். அதனைக் கேட்ட சோம சுந்தரக் கடவுள் திருவுள்ளம் மகிழ்ந்து அன்றிரவு தமது தொண்டர்கள் கனவில் சென்று பாணனாரைத் தமது திருமுன் அழைத்து வருமாறு ஆணையிட்டருளினார். அவ்வாறே பாணனார்க்கும் உணர்ச்சியினில் உணர்த்தியருளினார்.

பாணர்கள் பண்டை நாள் ஆலயத்துக்குப் புறத்தே நின்று வழிபட்ட

"அமுல் பாலுணவிலே
வைட்டமின்கள் எதற்காக
இருக்கின்றன தெரியுமா?"
என்று கேட்டது பாப்பா.



"தெரியுமே" என்று ஒத்துப்
பாடின அச் சிறு பிராணிகள்.



அமுல் பாலுணவு



உங்கள் குழந்தைக்குத் தேவையான 7 வைட்டமின்கள்
அடங்கியது.

ASP/ASF-54/67



VT VOILES
வாயில்களில்
ஒரு புதிய பெயர்
தென்றலை அளிக்கும்
முதல் வாயில்
எழில் மங்கையர்க்கேற்ற
எழில் வாயில்கள்
மீனாக்ஷி மில்ஸ்
குருப்பைச் சேர்ந்த
விருதுநகர்
டெக்ஸ்டைல்ஸின்
தரமான தயாரிப்பு.
விற்பனையாளர்கள்:
பி. ஆர். அண்டு சன்ஸ் (பி) லிமிடெட் மதராஸ்—ஊட்டி
Nalin-VT-157-TM

வர்கள். அந்த நியதி அருள் ஞானம் கைவரப்பெற்ற திருநீலகண்ட யாழ்ப் பாணர் போன்றோர்க்கு இல்லை. அதனாலேயே பெருமான் ஆலயத்துக்கு உள்ளே வருமாறு அருளினார்.

மறுநாள் காலை அடியார்கள் வந்து அவரை அஞ்சலி செய்து ஆலயத்துக்குள் அழைத்துச் சென்றார்கள். ஆண்டவன் அருள்வழி நிற்கும் பாணனார் கோயிலுக்குள் சென்று இறைவர் திருமுன் நின்று யாழ் மீட்டிப் பாடினார். திரிபுரம் எரித்தவாறும், தேர்மிசை நின்றவாறும், கரியினை யுரித்தவாறும், காமனைக் காய்ந்தவாறும், அரிஅயனுக்கரியவாறும், அடியவற்கெளியவாறும் அமைத்துப் பரிவினால் பாடியபோது சோமசுந்தரக் கடவுளது திருவுள்ளம் மிகவும் உவந்தது. பாடலுக்கு உருகாதார் யார்?

இவருடைய பாடலைக் கேட்ட மதுரைப் பரமனார், தரை ஈரமாக இருந்தபடியால் ஈரத் தரையின் குளிர்ச்சி பட்டு யாழின் சுருதி குறையும் என்று கருதினார். "பாணனாருக்குச் சுந்தரப் பலகை இடுங்கள்" என்று அசரீரியாகக் கூறியருளினார். அவ்வண்ணமே அழகிய ஒரு பலகையைப் பாணனார் முன் இட்டனர். இறைவர் திருமுன் பீடத்தில் அமரும் பேறு பெற்ற இவருக்கு இணை யார்?

அந்தரத் தெழுந்த ஓசை அன்பினில் பாணர் பாடும்
சந்தயாழ் தரையில் சீதந் தாக்கில்வீக் கழியும் என்று
சுந்தரப் பலகை முன்நீர் இடுமெனத் தொண்டரிட்டார்
செந்தமிழ்ப் பாணனாரும் திருவருள் பெற்றுச் சேர்ந்தார்

பாணனார் பீடத்திலிருந்து பாடும் போது இறைவனுடைய அறக் கருணையோடு மறக் கருணை என்ற கோபப் பிரசாதம் பற்றிக் கூறித் துதித்தார்.

மறக் கருணை என்பது அடியாரல்லாதாரைத் தண்டித்துத் திருத்தும் கருணை.

அறக் கருணை என்பது அடியார்க்குப் பணிபுரியும் கருணை.

திரிபுரம் எரித்தவாறும் தேர்மிசை நின்றவாறும்
கரியினை யுரித்தவாறும் காமனைக் காய்ந்தவாறும்
அரியயற் கரியவாறும் அடியவர்க் கெளியவாறும்
பரிவினாற் பாடக் கேட்டுப் பரமனார் அருளினாலே

கோயில் வாயில் முன்னின்று
 கூற்றந் செற்ற பெருந்திறலும்
தாயின் நல்ல பெருங்கருணை
 அடியார்க் களிக்கும் தன்மையியும்
ஏயுங் கருவி யிற்றொடுத்தங்
 கிட்டுப் பாடக் கேட்டங்கண்
வாயில் வேறு வடதிசையில்
 வகுப்பப் புகுந்து வணங்கினார்

இந்த இரு பாடல்களில் இறைவனுடைய கோபப் பிரசாதம் வருவதை உணர்க.

விசித்திர வியாபாரம்



அமெரிக்கத் தயாரிப்பான 'ரீசிலர் வேலியன்ட்' என்ற கார், 4000 மைல் தூரத்திலுள்ள பிரிட்டனுக்கு விற்கும் விலையை விட, அதே கார் 12,000 மைல் தொலைவிலுள்ள ஆஸ்திரேலியாவிலிருந்தும் இறக்குமதி செய்யப்பட்டு, பிரிட்டனில் சுமார் 200 பவுன் குறைவாக விற்கப்படுகிறது!

★ ○ ★ ○ ★ ○ ★ ○ ★ ○ ★ ○ ★

இன்னிசையால் தமிழ் பரப்பும் திருஞானசம்பந்தரும் யாழ்ப்பாணரைப் பாராட்டி இறுதிவரை தம்முடனேயே இருந்து யாழ் வாசிக்குமாறு அருளிய அருமைப்பாடு சிந்தனைக்குரியது.

அந்தணர் குல மணியாகிய சோமாசிமாற நாயனார், தமது யாகசாலையில் இவரைத் தங்க வைத்ததும், இவர் அங்கு சென்றவுடன் யாகாக்கினி வலம் சுழித்ததும், இவர் பெருமையை விளக்குகின்றன.

திரு ஆரூர் அடைந்த பாணனார், இறைவன் கட்டளையிட்டவாறு வடதிசையில் உள்ள வேறு வழியாகக் கோயிலுக்குள் சென்று தியாகராஜப் பெருமானையும், புற்றிடங் கொண்டாரையும் போற்றினார்.

பாணனாரும் மனையாளும் சம்பந்தப் பெருமானுடன் சேர்ந்து அவர் திருப் பதிகம் பாடும்போது அதனை யாழில் அமைத்து வாசிக்கும் திருப்பணியைப் பலகாலம் புரிந்தனர். திருநல்லூர்ப் பெருமணத்திலே சம்பந்தமூர்த்தியில் சிவசோதியில் கலந்து இன்புற்றனர்.

92. சுந்தரரைத் தந்தவர்

சமயக் குரவர் நால்வரில் ஒருவராகிய சுந்தரமூர்த்தி நாயனாரை மைந்தராகப் பெற்றவர் சடைய நாயனார். இவரும் நாயன்மார்களிலே ஒருவராக வைத்து எண்ணப்படுகின்றார்.

திருஞானசம்பந்தரைப் பெற்ற சிவபாத இருதயரும் திருநாவுக்கரசரைப் பெற்ற புகழனாரும் அறுபத்து மூன்று நாயன்மார்களில் வைத்து எண்ணப் படவில்லை. என்ன காரணம்? சம்பந்தரும் அப்பரும் சிவபெருமானைப் பாடியவர்கள். சுந்தரர் அடியார்களைப் பாடியவர். ஆண் வழிபாட்டினும் அடியார் வழிபாடு சிறந்தது.

"இறைவரோ தொண்டருள் ஒடுக்கம்
தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே!"

என்றபடி திருத் தொண்டரை வழிபட்டு, திருத்தொண்டத் தொகை சொல்லி உலகை உய்வித்த திருமகனாரைப் பெற்றதனால் இவர் நாயன்மாருள் ஒருவராம் பேறு பெற்றார். சேக்கிழார் பெருமான், "ஒழியாப் பெருமைச் சடையனார்" என்று இவரைப் புகழ்கின்றார்.

தவஞ் செய்து அரிதிற் பெற்ற சுந்தரமூர்த்தியை நரசிங்க முனையார் கேட்டவுடனே அவருக்குத் தந்துவிட்டவர் சடையனார். இதனால் இவரை "மேம்படு சடையனார்" என்று சேக்கிழாரடிகள் அருளிச் செய்தார்.

சடையனாருக்கு வாழ்க்கைத் துணைவியாக இருந்த இசை ஞானியம்மையை "ஏதமில் கற்பின் வாழ்க்கை மனை இசை ஞானியார்" என்று சேக்கிழார் பெருமான் கூறுகின்றார். இவர் அரும் பெரும் தவம் புரிந்து நம்பியாரூரரைப் புதல்வராகப் பெற்றார். குற்றமில்லாத கற்புடைய இவருடைய புண்ணியத்தின் திரட்சியே ஓர் உருவாகத் திரண்டு வந்தவர் சுந்தரமூர்த்தி நாயனார்.

தீய மைந்தனைப் பெறுதல் உலகுக்குப் புரிகின்ற கேடுகளுள் முதன்மையானது. தூய மைந்தனைப் பெறுதல் நன்மைகளுள் முதன்மையானது. ஆக, தொண்டத் தொகை பாடி உலகையெல்லாம் உய்வித்த உத்தமப் புதல்வரை ஈன்ற இந்த உத்தமியார் பெருமை உரைக்கும் தரமன்று. அதனாலன்றோ சேக்கிழாரடிகள்,

இழியாக் குலத்தின் இசைஞானிப்
பிராட்டியாரை என்சிறுபுன்
மொழியால் புகல முடியுமோ
முடியாதேவர்க்கும் முடியாதால்

என்று கூறுகின்றார்.

93. அன்னம் தந்தார்; சொன்னமும் தந்தார்

பெரிய புராணமாகிய மாப்பெருங் காப்பியத்துக்குத் தலைவர் நம்பியாரூரர் என்பதை ஆரம்பத்திலேயே கூறியுள்ளோம். இவருடைய வரலாற்றின் இடையில் கோத்த நன்மணிகளே ஏனைய அடியார்களது வரலாறுகள். பரவையாருடன் இல்லறம் நடத்து கின்ற வரை இவரது வரலாறு முன்னே கூறப்பட்டுள்ளது.

இத்தம்பதியை இறைபணி செய்ய விட்டு, அவர்களது ஏகாந்தத்தைக் கலைக்க விரும்பாமல், அவர்கள் அடிமை செய்த அடியார் வரலாறுகளைப் பார்த்தோம். இனி சுந்தரர் வரலாற்றினை விட்ட இடத்திலிருந்து தொடருவோம்:

பரவையாருடன் சில காலம் இல்லறம் நடத்திவிட்டுத் தேசந்தோறும் சென்று தொண்டாற்றும் செய்யும் பொருட்டாகச் சுந்தரர் அடியார்களுடன் புறப்பட்டார்.

குருகாவூர் செல்லும் வழியில் சுந்தரருக்குப் பசியும் தாகமும் ஏற்பட்டன. அதே சமயத்தில் வழியில் நிழற்பந்தர் ஒன்று தெரிந்தது. வேதியர் ஒருவர் தண்ணீரும் பொதி சோறும் தயாராக வைத்துக் கொண்டு பரவைக்கேள்வரைப் பரிவுடன் எதிர்பார்த்துக்கொண்டிருப்பவரைப் போல் அமர்ந்திருந்தார். பசியோடு வந்த ஆரூரர், அப்பந்தரின் நிழலில் தங்கி வேதியர் வழங்கிய திவ்விய உணவினை உண்டார்.

அவருடன் வந்த பரிசனங்களும் உண்டனர். அத்தனை பேர் உண்டும் அப்பொதி சோறு குறையாது பெருகிக் கொண்டேயிருந்தது. திருவருள் போன்ற குளிர்ந்த நீரையும் பருகிச் சுந்தரரும் ஏனைய அடியார்களும் உறங்கினர். உடனே பந்தரும் மறைந்தது; வேதியரும் மறைந்தனர்.

பாடுவார் பசிதீர்ப்பாய் பரவுவார் பிணிகளைவாய்
ஒடுநன் கலனாக வுண்பலிக் குழல்வானே
காடுநல் லிடமாகக் கடியிருள் நடநாடும்
வேடனே குருகாவூர் வெள்ளடை நீயன்றே

எனப் பாடி ஆடினார் நம்பியாரூரர்.

இஃதே போல் திருக்கச்சூரில் நம்பியாரூரர் பசியால் வருந்திக் கொண்டிருந்த போது பரமனார் வேதியராகி ஓடு ஏந்தித் திருக்கச்சூர் மனைகள் தோறும் போய் அன்னம் இரந்துவந்தார்.


ஆரூரர் அன்னத்தை உண்ணும் போது, மறையவர் மறைந்து போயினார். "என்பொருட்டோ இறையவருக்கு இப்பாடு?" என இரங்கி, சுந்தரமூர்த்தி,

முதுவா யோரி கதற முதுகாட்
டெரி கொண்டாடல் முயல்வானே
மதுவார் கொன்றைப் புதுவீ சூடும்
மலையான் மகள்தன் மணவாளா
கதுவாய்த் தலையிற் பலி நீ கொள்ளக்
கண்டா லடியார் கவலாரே
அதுவே யாமாறிதுவோ கச்சூ
ராலக் கோயிலம்மானே.

எனப் போற்றினார்.

பின்னர் அங்கிருந்து புறப்பட்டுத் திருக்காஞ்சி மாநகர் வந்து சேர்ந்தார். திருவோணகாந்தன் தளியில் அமர்ந்துள்ள நாதரிடம் பொன் வேண்டிப் பெற்றார்.

திருக்காளத்தியில் மலையெழுகொழுந்தாகிய மணிகண்டரை என்புருகப் பாடி வழிபட்டார் சுந்தரர். அங்கிருந்தவாறே ஸ்ரீ சைலம், திருக்கேதாரம், காசி முதலிய வடநாட்டுத் திருத்



மூட்டுகளிலே வலி, பிடிப்பு?
'அயோடெக்ஸ்' தடவி உடனே வலியை அகற்றுங்கள். அதில் சேர்ந்துள்ள ஆற்றும் சக்திவாய்ந்த பொருள்கள் உள்ளே ஊடுருவி உடனடியாக நிவாரணமளிக்கின்றன.
'அயோடெக்ஸ்' இப்போது வசதியான ட்யூப் பாக்கிங்கில் கிடைக்கிறது.
IODEX
அயோடெக்ஸ் ®
ஸ்மித் க்லைன் & பிரெஞ்ச் (இந்தியா) லிட்., பம்பாய்-1



கோபால் பல்பொடி
பல் வலி, பல் அரணை, வாய் நாற்றம் பல்லில் இரத்தம் வடிதல், முதலிய பல் வியாதிகளை குணப்படுத்தி பல்களுக்கு வெண்மையும் பலத்தையும் தருகிறது.
GOPAL TOOTHPOWDER
கோபால் பல்பொடி
தயாரிப்பாளர்கள் — எஸ்.பி.எஸ். ஜெயம் அன் கோ.,
கீழ நாப்பாளையக் தெரு, மதுரை.

காத்திருக்க நேரமில்லை





விஞ்ஞானிகளின் கண்டுபிடிப்பு

வலியை அதி வேகமாக வெளியேற்ற

வலிதான் எங்கள் பிரச்னை: ...

மைக்ரோஃபைன் என்றால் என்ன? ...

வேகமாக செயல்புரிகிறது — நீடித்த பயனைத் தருகிறது: ...

இந்த வகைகளுக்கு புதிய மைக்ரோஃபைன் ஆஸ்ப்ரோ சாப்பிடுங்கள் ...

சாப்பிடும் அளவு: ...

புதிய மைக்ரோஃபைன் 'ஆஸ்ப்ரோ' இப்பொழுது கிடைக்கும் அதி நவீனமான வலிநிவாரணியாகும்.



புதிய

மைக்ரோஃபைன்

'ஆஸ்ப்ரோ'

அதி வேகமாக வலியை வெளியே இழுத்துவிடுகிறது.

A.G. 15.67 TA.

தலங்களை மனக் கண்ணால் பார்த்து, திசை நோக்கித் தொழுது, திருப்பதிகங்கள் பாடியருளினார்.

பூலோக சிவலோகம் போலப் பொலியும் திருவொற்றியூரை அடைந்தார் சுந்தரர். கடல் ஒரு சமயம் பொங்கி வர, "ஒற்றியிரு" என்று சிவபெருமான் கடலைப் பணித்தார். அதனால் "ஒற்றியூர்" எனப்படும் திருவொற்றியூர்த் திருக்கோயிலை வலம் வந்தார்.

ஊனும் உயிரும் கலந்து உருகப் பதிகம் பாடி அத்தலத்திலேயே அமர்ந்து கறைமிடற்றண்ணலாம் இறைவனை முப்போதும் தப்பாது வழிபட்டுக் கொண்டிருந்தார்.

94. மங்கலம் பொங்கும் சங்கிலியார்

முன்னே திருக்கயிலாய மலையில் சுந்தரரை விரும்பிய சேடியர்கள் இருவரில் ஒருவரான கமலினி ஆரூரில் பரவையாகப் பிறந்தார் அல்லவா? மற்றவரான அநிந்திதையார், தொண்டை நாட்டிலே ஞாயிறு என்ற ஊரிலே வேளாண் மரபிலே 'ஞாயிறு கிழவர்' என்ற சிவனடியார்க்குத் திருமகளாக அவதரித்துச் சங்கிலியார் எனப் பெயர் பெற்றிருந்தார். பண்டைத் தவச் சார்பினால் இளமையிலிருந்தே அவர் உமையம்மையாரிடம் அன்பு மிகுந்து இனிது வளர்ந்தார். தமக்குத் திருமணம் செய்வது குறித்துப் பெற்றோர் ஆலோசித்தபோது சங்கிலியார், "பெற்றோரே, என் திருமணம் குறித்துச் சிந்தனை செய்கிறீர்கள். எனக்கு அது இசையாது; நான் சிவனருள் பெற்ற திருவாளர் ஒருவருக்கு உரியவள். ஆதலால் இந்த எண்ணத்தை விட்டு விடுங்கள். நான் இனி திருவொற்றியூரை அடைந்து திருவருள் நெறியில் நிற்பேன்" என்று கூறினார். அவரது இடப்பக்கம் உணர்ந்த தாய் தந்தையர் அவர் சொல்லுக்கு மாறாக நடக்க அஞ்சினார்கள். அவரைத் திருவொற்றியூருக்கு அழைத்துச் சென்று, கன்னிமாடம் அமைத்து அதில் இருத்தினார்கள். வழிபாட்டுக்கு வேண்டிய நிதிகளையும் அங்கு அமைத்தார்கள்.

முக்காலங்களிலும் திருக்கோயிலுக்குச் சென்று முக்கட்பெருமானை ஆரா அன்புடன் வழிபட்ட சங்கிலியார், முற்பிறப்பில் கயிலையில் செய்தாற்போலவே ஒற்றியூரிலும் திருக்கோயில் மலர் மண்டபத்தில் திரையிட்டு மலர் தொடுத்து மாலைகளாக்கி, காலையும் மாலையும் மணிகண்டர்க்குத் தந்து பணிவிடை புரிந்து வந்தார்.

முந்தை ஊழ் கூட்டி வைக்க ஒரு நாள் சுந்தரர் திருக்கோயில் சென்று படம் பக்கநாதரை வழிபட்டுத் திரும்புகையில் மலர் மண்டபத்துக்குள் சென்றார். அங்கே திரை மறைவில் அன்பு என்ற நாரில் பஞ்சாட்சரமாகிய மலரை வைத்து உள்ளத்தில் ஒரு மாலை தொடுத்துக் கொண்டு, புறத்தே மலர்களைத் தொடுக்கும் சங்கிலியார் திரையை நீக்கி இறைவருக்குச் சாத்தும் படி மாலை தந்து மீண்டும் மின்னற் கொடிபோல் மறைந்தார். அத்திருவாட்டியை மதிவடிவாகிய ஆரூரர் விதியினால் கண்டார்.

> அன்பு நாரா அஞ்செழுத்து
>   நெஞ்சு தொடுக்க அலர் தொடுத்தே
> என்புள் உருக்கும் அடியாரைத்
>   தொழுது நீங்கி வேறிடத்து
> முன்பு போலத் திரை நீக்கி
>   முதல்வர் சாத்தும் பணிகொடுத்து
> மின் போல் மறையுஞ் சங்கிலியார்
>   தம்மை விதியாற் கண்ணுற்றார்.

கோவாத முத்தனைய சங்கிலியிடம் உள்ளம் பறிகொடுத்தார் நம்பியாரூரர். அருகில் நின்ற அடியவர்களை நோக்கி, "பொன்னையும் மணியையும் அமிர்தத்திற் கலந்து, சந்திர கலையிற் குழைத்துச் செய்த மின்னற்கொடி போன்ற அப்பெண்மணி என் உள்ளத்தைக் கொள்ளை கொண்டாள். அவ் வழகின் கொழுந்து யார்?" என்றார்.

அவர்கள் தகவல் கூறினர்.

"இருவரால் இப்பிறவியை எம் பெருமான் எய்துவித்தார்; மருவும் பரவையொருத்தி; இவள் மற்றையவளாம்" எனத் தெளிந்தார் சுந்தரர். "என்னுயிரையும் மலரையும் சேர்த்துத் தொடுக்கும் இப்பெண்ணரசைப் பிறைமுடிப் பெருமான்பால் வேண்டிப் பெறுவேன்" என்று எண்ணித் திருக்கோயிலுக்குச் சென்று சிவமூர்த்தியைப் பணிந்தார்.

"எம்பெருமானே! தேவரீர் மலைமகளாம் மங்கையை ஒருபால் கொண்டு மகிழ்ந்தது போதாதென்று சடையிலும் கங்கையை ஒளித்து வைத்துள்ளீர்! அடியேன் மீது திருவருள் வைத்து அடியேனுடைய உள்ளத் தொடையை அவிழ்த்த மதிமுக வனிதையாம் சங்கிலியைத் தந்து என் வருத்தத்தைத் தீர்த்தருளும்" என்று நயப்பட வேண்டிக் கொண்டார் நம்பியாரூரர்.

> மங்கை யொருபால் மகிழ்ந்ததுவும்
>   அன்றி மணிநீள் முடியின்கண்
> கங்கை தன்னைக் கரந்ததுவும்
>   காதலுடையீர் அடியேனுக்

இந்த ஞாலத்துத் திருமாலை
தொடுத்தே ஞானத் தொடையவிழ்த்த
திங்கள் வதனச் சங்கிலியைத்
தந்தேன் வருந்தும் திருமேனை.

95. மகிழ மரத்தடியில்

அன்றிரவே எம்பெருமான் வன்றொண்டர் கனவினில் வந்தார். 'இப்பூவுலகில் யாவரும் எய்தவொண்ணுத இருந்தவத்துக்கொம்பை உனக்குத் தருகின்றோம்'' என்று அருள் புரிந்தார்.

அங்கிருந்து நீங்கிய பிரான் சங்கிலியார் கனவில் தோன்றினர்.

''எம்பால் மிக்க அன்புடையவனும் மேரு மலையினும் மேம்பட்ட தவமுடையவனும், வெண்ணெய்நல்லூரில் எம்மால் உலகறிய அடிமையாகக் கொள்ளப்பட்டவனுமான நம்பியாரூரன் உன்னை வேண்டினன். அவனை மணம் செய்துகொள்க'' என்றார்.

'மேருவரையின் மேம்பட்ட தவத்தான்' என இறைவனே சுந்தரரைப் போற்றி அவருக்காக மணம் பேசினர்!

''எம்பிரானே! தேவரீர் யாருக்கென்று அருளிச் செய்தீர்களோ அவருக்கே நான் உரியேன். ஆனால் ஒன்று கூற விரும்புகிறேன். தாங்கள் குறிப்பிட்டவருக்குத் திருவாரூர் வாழ்க்கையே மிகவும் இச்சை என்பது சுவாமிக்குத் தெரியுமே! அதற்கென்ன செய்வது?'' — என்று மிக்க நாணத்துடன் நயமாகக் கூறினர் சங்கிலி.

''பாவாய்! சுந்தரன், 'உன்னை விட்டுப் போகேன்' என்று என் சந்நிதியில் சபதம் செய்வான்'' என்று திருவாய் மலர்ந்து மறைந்தார் இறைவர்.

பின்னர் பெருமான் வன்றொண்டரிடம் வந்து, ''அன்பனே! சங்கிலி தன்னை நீ பிரியாமலிருக்க எனது சந்நிதியில் சபதம் செய்து கொடுத்தால் மணக்க இசைவாள். இதற்கு என்ன சொல்லுகின்றாய்?'' என்று கேட்டார்.

இறைவன் எழுந்தருளியுள்ள பல தலங்களையும் தரிசிக்க விரும்பும் தமக்கு இச்சபதம் ஓர் இடையூறாக இருக்குமே என அஞ்சிய ஆரூரர் ஒரு தந்திரம் செய்தார். ''தேவ, தேவ! அடியேன் சபதம் செய்யச் சங்கிலியுடன் வரும்போது, தேவரீர் மூலஸ்தானத்தை விட்டு மகிழமரத்தின் கீழ்எழுந்தருளவேண்டும்'' என்றார்.

''அவ்வண்ணமே செய்வோம் நம்பி'' என்றுஅருளினர் ஆலமுண்ட அண்ணல்.

அண்ணலுக்கு விளையாட்டுப் பார்க்க ஆசை வந்தது போலும்!

சங்கிலியார் கனவில் மீண்டும் தோன்றினர். ''பெண்மணி! நமது தோழன் இலிங்கத்தின்முன் சபதம் செய்ய முன்வருவான். நீ இசையாது மகிழ மரத்தின் கீழ் சபதம் செய்து தருமாறு கேள்'' என்று கூறி மறைந்தார்.

திருப்பள்ளி யெழுச்சிக்கு மலர் தொடுத்துக் கொடுக்கும் வைகறைப் பொழுது அணுகியது. சங்கிலியார் சேடியருடன் நீராடித் திருக்கோயிலுக்குச் சென்றார். தம்பிரான்தோழரும் அதே சமயத்தில் சபதம் புரியும் பொருட்டு அடியார்களுடன் இவர் வரவை எதிர்நோக்கி நின்றார்.

சங்கிலியைக் கண்ட சுந்தரர், ''அணங்கரசே! நான் உன்னைப் பிரியேன் என்று சபதம் புரிகிறேன். சிவமூர்த்திக்கு முன் வருக'' என்றார்.

நாணமே உருவான சங்கிலியார் அவருடன் பேசவில்லை. அவரது கனவின் விவரத்தை அறிந்த நாயிமார் ஆரூரரை நோக்கி, ''தாங்கள் இதற்காக இறைவன் திருமுன்பு சபதம் செய்வது தகாது. கோயில் வெளிச் சுற்றில் உள்ள மகிழ மரத்தின் கீழ் சபதம் செய்தால் அதுவேபோதும்'' என்றனர்.

ஆரூரர் மனம் மருண்டார். ஆயினும், 'இவர்கள் கூறியபடி செய்ய மறுத்தால் பரிகசிப்புக்கும் பழிப்புக்கும் ஆளாவேன்' என்றுணர்ந்தார். ''சரி! வாருங்கள்!'' என்றார். மலர் மணம் நிறைந்த மகிழ மரத்தை மும்முறை வலம் வந்து, ''உன்னை நான் பிரியேன்'' என்று சங்கிலிக்குச் சபதம் செய்து தந்தார்.

இன்றும் திருவொற்றியூரில் 'மகிழடி சேவை' என்ற விழா ஆண்டுதோறும் நடக்கிறது.

அன்றிரவே திருவொற்றியூரில் உறையுந் திருத்தொண்டர்களின் கனவில் மாணிக்கத் தியாகர் தோன்றி ''நமது கட்டளைப்படி நம்பியாரூரனுக்கு நங்கை சங்கிலியை உலகறியத் திருமணம் செய்து கொடுப்பீராக'' என்று ஆக்ஞையிட்டருளினர். மண் நிறைந்த பெருஞ்செல்வத் திருவொற்றியூர் அன்பர்கள் மறுநாள் கண்ணிறைந்த பெருஞ்சிறப்புடன் கலியாணம் செய்து வைத்தனர்.

வன்றொண்டர் அம்மாதரசியுடன் கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்ற காதலுடன் வாழ்ந்தார். ஒற்றி மேவும் நெற்றிக்கண் நிமலனை முப்போதும் போற்றி, எப்போதும் தமிழ் மாலை சாற்றிக் கொண்டிருந்தார். (தொடரும்)

அட்டைப்படக் கதை

அக்கினி மலர்கள்



குன்றின்மேல் உள்ள குடிசைதான் சுந்தரக் குருக்களுடையது. குடிசைக்கு முன்னால் கோடைக்காகப் போட்ட பந்தல். வசந்தம் வந்தபிறகும் அப்படியே இருந்தது. சுற்றிலும் நாகலிங்க மரங்கள் பூத்துச் சொரிந்தன. மலர்களில் பறவைகள் தொத்திக்கொண்டு ஊஞ்சலாடின.

குருக்கள், மண வாழ்க்கையின் இளங் காலையில் தம் வாழ்க்கைத் துணைவியை இழந்தவர். அப்போது அவர் மகள் சங்கரிக்கு மூன்றே வயது. மர்ம அடியாக அந்த நிகழ்ச்சி இதயம் என்கிற மென் கவர்க் கோட்டையைத் தாக்க முயன்றபோது இந்தச் சூழ்நிலையில் ஓடிவந்து ஒதுங்கி விட்டார்.

அமைதியான சூழ்நிலை, ஆற்றங்கரைச் சிவன் கோயில், அருமைப் புதல்வி — இம் மூன்றும் அவர் மன நோய்க்கு, இயற்கை தந்த மாற்று மருந்துகளாயின.

மளமளவென்று இளநீரைக் குலை குலையாகத் தள்ளுகிறதே தென்னை, அது எத்தனை சிறிய கன்றாக இருந்தது! கூடை கூடையாக மலர்க் குழந்தைகளை ஈன்று கொட்டுகிறதே, மல்லிகையும், இருவாட்சியும், அவையெல்லாம் எவ்வளவு சிறிய செடிகளாக இருந்தன!

கூடவே சங்கரியும் வளர்ந்தாள்.

சிற்றரும்பு முற்றி வடிவானதொரு வல்லியாகத் திகழ்ந்தவளின் உடலிலும் உள்ளத்திலும் புரிபடாத ஒரு கிளர்ச்சி அச்சம், காரணமற்ற நாணம் யாவும் கூடிக் குழப்பின., காட்டுத் தென்றலும், புஷ்ப மணமும் சேர்ந்து ஒருவகை ஊமைச் சுகத்தை அவள் தன் மனத் திரையில் கோணல் மாணலான சில கோடுகளை வரைந்தாள். அந்தக் கோடுகளின் ஊடே ஓர் உருவை எழுப்ப முயன்றாள். அறிமுகம் இல்லாத அந்த உருவம் யாருடையதென்று அடையாளம் தெரியாதபடி அதன்மேல் மேக மூட்டம் போல் ஒரு மங்கல்!

கடல் அலைகள் ஓயாமல், ஒழியாமல் கரைப் பக்கம் வந்து யாரையோ கூப்பிட்டுத் திரும்புவது போல் விரைவில் தனக்கு ஏதோ ஓர் அதிர்ச்சி மட்டும் வரப் போகிறதென் பதை அவள் உள்ளுணர்வு எச்சரிக்கை செய்த வாறிருந்தது!

ஒரு நாள் மாலை—

உதிர்ந்த மலர்களை வாரி எடுத்துக் கொண்டு சிற்றாறு ஓடிக் கொண்டிருந்தது. ஆற்றை யொட்டிய காலடிப் பாதையில் ஆள் நடமாட்டம் குறைந்திருந்த நேரம். நாகலிங்க மரங்களுக்கு நடுவில், தன்னந் தனியாக ஒரு வைராகி இளைஞன் வந்து கொண்டிருந்தான்.

காவி உடை தரித்த வாட்ட சாட்டமான உடம்பு. தோளில் ஒரு நீண்ட பை. தேக பொலிவின்ற முகம்; ஒளி படைத்த கண்கள்; இளந் துறவிக்குரிய கம்பீரமான தோற்றம்.

"அப்பா, யாரோ வருகிறார்கள்."

வெளியே கயிற்றுக் கட்டிலில் அமர்ந்திருந்த குருக்கள் திரும்பிப் பார்த்தார். யாரோ ஒரு யாத்திரிகன் மாதிரி இருந்தது. அதுவும் இந்தப் பக்கத்து ஆசாமியைப் போல் தெரியவில்லை. சங்கரி எழுந்து உள்ளே போனாள்.

அவன் அங்கு வந்தான். தோளில் மாட்டியிருந்த ஒரு பையை ஒரு மூலையில் வைத்துவிட்டு, சற்றுத் தள்ளியிருந்த வழுவழுப்பான பாறையொன்றின் மேல் போய் அசதியோடு அமர்ந்து கொண்டான்.

"கொஞ்சம் தண்ணீர் கொடுங்கள்."

"அம்மா, சங்கரி! கொஞ்சம் தண்ணீர் கொண்டு வாம்மா" என்று உட்புறம் குரல் கொடுத்த குருக்கள், தொடர்ந்து, "நமக்கு எந்த ஊரு?" என்று பேச்சை ஆரம்பித்தார்.

"நான் போகிற ஊரெல்லாம் எனக்குச் சொந்த ஊர்தான். ஏகவெளிச் சாலையிலே எல்லையில்லா நீள்பயணம்!... இன்றைக்கு ஒரு ஊர்; நாளைக்கு ஒரு ஊர்" — பேச்சு வயசுக்கு மீறியதாக இருந்தாலும் சொற்களை ஆத்ம நம்பிக்கையோடு அளந்து பேசிய விதம் குருக்களுக்குப் பிடித்திருந்தது.

சங்கரி ஒரு செம்பில் தண்ணீரும், குளிர்ந்த மோரும் கொண்டு வந்து வைத்தாள். அவன் எழுந்து, முகம், கை கால்களைக் கழுவிக் கொண்டு வந்தான். குளிர்ச்சியான

'தபஸ்வி'

மோரி இதமாகத் தொண்டைக்குள் இறங்கு கையில் நடந்து வந்த களைப்பெல்லாம் நீங்கிய நிறைவு தோன்றியது. நன்றி ததும்ப அவன் பார்வை உயர்ந்தபோது,' குளிர்ந்த இரு மைச்சிமிழ் விழிகள் தன்னைக் கூர்ந்து பார்த்துக் கொண்டிருப்பதை அவன் தற்செயலாகக் கவனித்தான். உடனே அவள் திடுக்கிட்டு, உள்ளே ஓடி விட்டாள்.

''இவள் என் பெண்.''

''ஓ!''

குருக்கள் வெகு நேரம் வரை லோகாயதமாக ஏதோ பேசிக்கொண்டிருந்தார்.

இரவு சாப்பாட்டுக்குப் பின்னர், வெளியே கட்டிலில் படுக்கையை விரித்த குருக்கள், ''நீ எங்கே படுக்கப் போகிறாய்?'' என்று அவனைக் கேட்டார்.

''இப்படி எங்காவது படுத்தால் போகிறது! முதலில் கொஞ்சம் காலாரப் போய்விட்டு வருகிறேன்'' என்றான்.

''இந்த இருட்டிலேயா?'' என்று திகைப்புடன் கேட்டார் அவர்.

''இதென்ன இருட்டு?... இதோ வந்து விடுகிறேன்'' என்று கிளம்பினான் அவன்.

குருக்கள் படுத்துக் கொண்டார்.

அரை மணி, ஒரு மணி, இரண்டு மணி நேரமாயிற்று; 'இதோ வந்துவிடுகிறேன்'— என்று கூறிப் போன அவன் வரவேயில்லை.

குருக்கள் தூங்கிவிட்டார்.

வானத்து விண்மீன்களைப் பார்த்தபடி படுத்திருந்த சங்கரிக்குத் தூக்கம் வரவில்லை. புதிதாகச் சிறகு முளைத்த புள்ளினம் போல் அவள் உள்ளம் முற்றும் புதிதான, இன்பச் சிலிர்ப்பை மட்டும் கற்பனைகளில் மிதக்கத் தொடங்கியது.

'அவன் எவ்வளவு அழகு! அந்தக் காவி உடைக்கும், கரு கருவென்று வளர்ந்துள்ள தாடி மீசைக்கும் அலாதியான ஒரு காம்பீர்யம் இருக்கிறது. அந்தச் செவ்வரி ஓடியிருக்கும் கண்கள் என்னைக் கண்டவுடன் ஒளியை வீசவானேன்? என் பாக்கியம்தானோ அது!' — இவ்விதம் குழந்தையைப் போல் எண்ணமிட்டாள் சங்கரி.

இத்தனை நாட்களாக அவள் தன் நெஞ்சில் வரைந்த மானசீகமான ஓவியத்தின் உயிர் வடிவமே அவன் என்றும் நினைத்தாள்.

மகிழ்ச்சியால் அவள் மனம் துள்ளிக் கண்களில் நீர் திரையிட்டது.

''தூக்கமா?...'' என்ற குரல் கேட்டது. சங்கரி திடுக்கிட்டு எழுந்தாள்.

என்ன ஆச்சரியம்! எதிரில் அவன்! அவளுக்கு மிக அருகில் நின்று கொண்டிருந்தான். மிரண்ட புறுவின் சிறகுகளைப் போல் அவள் நெஞ்சு அடித்துக் கொள்ளத் தொடங்கியது. அவன் எப்போது அங்கு வந்தான்?

''தூக்கம் வரவில்லையென்றால், சற்று நேரம், அதோ அந்தப் பாறையின் மேலே உட்கார்ந்து ஏதாவது பேசிக் கொண்டிருக்கலாமே?'' என்றான் அவன்.

அவள் பதில் பேசவில்லை. 'முன் பின் அறிமுகமில்லாத ஒருவன் இப்படி அழைக்கத் தன்னிடம் என்ன உரிமை அவனுக்கு' என்ற விகல்பமான உணர்வே அப்போது அவளுக்கு எழவில்லை. தனக்கு மிக நீண்ட காலமாகவே நெருங்கிய ஒருவனைத்தான் அவள் சந்தித்திருப்பதாகவும், இதுவரையில் அவள் காத்திருந்ததெல்லாம் இந்த நிமிடத்துக்காகவே என்றும் அவள் மனம் கூறிற்று.

மந்திரத்தால் கட்டுண்டவளைப் போல் அவனைத் தொடர்ந்தாள் அவள்.

பாறையின் ஒரு புறத்திலே அவனும், மற்றொரு புறத்திலே அவளும் உட்கார்ந்து கொண்டனர். உதிர்ந்த மலர்கள் இருவருக்கும் நடுவில் அவர்களுடைய மனத்தைப் போலவே, மாசின்றி, அந்த இடத்தைப் புனிதமாக்கிக் கொண்டிருந்தது!

'ஏதாவது பேசுவோம்' என்று உற்சாகத்துடன் அழைத்தவனுக்கு எதுவுமே பேசத் தோன்றவில்லை.

''எவ்வளவு பெரிய மரம் இது!'' என்று மரத்தைப் பார்த்து வியப்பதுபோல் மௌனத்தைக் கலைத்து, ''ரொம்ப நாளாகவே இருக்கிறதோ?'' என்று கேட்டான்.

அவளுக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை. அவள் பேசாதிருந்தாள். அவளுக்கு விவரம் தெரிந்த நாளிலிருந்து அந்த மரம் அங்கிருக்கிறது. எத்தனை நாளாக இருக்கிறதென்றால் அவளுக்கு எப்படித் தெரியும்?

''இந்தப் பூக்களிலேதான் எப்படிப்பட்ட மணம்! இவற்றை மாலையாகத் தொடுத்து வைத்துக் கொண்டால் எவ்வளவு அழகாயிருக்கும்! நீ ஏன் வைத்துக் கொள்ளவில்லை?'' என்றான் அவன் தொடர்ந்து.

இது இன்னொரு சங்கடமான கேள்வி என்று நினைத்துக் கொண்டாள் சங்கரி. ஏனென்றால் உதிர்ந்த மலர்களை யெல்லாம் மாலையாகத் தொடுக்க வேண்டும் என்றோ, தலையில் சூடிக்கொள்ள வேண்டும் என்றோ எப்போதுமே அவளுக்குத் தோன்றியதில்லை. அவள் தந்தைதான் பூஜைக்காக எடுத்துப் போவார்.


''என் பையிலே நூல் இருக்கிறது. இவற்றை நான் மாலை தொடுக்கவா?'' என்று கேட்டான் அவன்.


'நன்றாயிருக்கிறது! மாலை தொடுக்கிற நேரமா இது?' என்று சிரித்துக்கொண்டாள் அவள்.

அவனும் சிரித்தான். பிறகு ஏதோ நினைத்துக் கொண்டவன் போல் அவன் மிகவும் ஆசையோடு தன் இரு கரம் நிறைய மலர்களை அள்ளி அவளிடம் கொடுத்தான்.

கடவுள் சந்நிதானத்தில் நின்று முடிவற்ற குறைகளைக் கூறி முறையிடும் ஒரு பெண்ணுக்கு அகண்ட தீபத்திலிருந்து சொட்டும் சுடர் என்னென்ன கனவுகளை எழுப்புகிறது! சங்கரியின் மனத்திலும் அந்த மலர்களைப் பெற்றுக் கொண்டபோது அந்தக் கனவுகள் தோன்றின!

அவளுக்கு மயிர்க்கூச்செறிந்தது. நெஞ்சை அடைத்தது. கண்கள் நிறைந்தன. அவள் அழவில்லை. ஆனந்தத்தில் ததும்பிய கண்ணீர் அது. அவன் அவள் உள்ளத்தின் ஜீவநாதத்தை மீட்டி விட்டுவிட்டான். பல நாட்களாய்க் கவனிப்பாரற்றுத் தூசி படிந்து இருண்ட மூலையில் வைக்கப்பட்டிருந்த அபலையான உள்ளம் அது! அதை மிகவும் லாகவ


சுலேகா
டிராயிங்
இங்க்.
சுலேகா
தினப்படி உபயோகப் பொருள்கள்
Adsol
அட்சால்
ஆபீஸ் பசை
& கோந்து
சுலேகா
பவுண்டன்
பேனா
இங்க்.
ஸிகுரிடி
முத்திரை
அரக்கு
சுலேகா
ஸ்டாம்ப்
பேட்
சுலேகா
ஒர்க்ஸ்
லிட்.
சுலேகா பார்க், கல்கத்தா - 32
Progressive/SW 21


"உங்கள் குழந்தைக்கும் பிரத்தியேகமான
பவுடர் தேவைப்படுகிறது —
கால்கேட்டே அந்த
நேர்த்தியான பவுடர்!"
காஸ்கேட் பேபிபவுடர் மிகவும் மென்மையானது, அதிகமாக வேர்வையை உறிஞ்சக்கூடியது, பட்டுப்போல் மிருதுவானது. அது குழந்தையின் இளம் சருமம் எரிச்சலடையாமல், நமைச்சலடையாமல் பாதுகாத்து குழந்தையை குளுமையுடன், சுகமாகவும், ஆனந்தத்துடனும் வைத்திருக்கும். உங்கள் குழந்தைக்கு இன்றே காஸ்கேட் பேபி பவுடர் வாங்குங்கள்!
COLGATE
Borated
BABY
POWDER
காஸ்கேட் பேபி பவுடர்
வாங்குங்கள்
— அதிக பவுடர்...
அதிக சிக்கனம்!
CBP.G.7 TAM

மாக எடுத்து, அதில் அபூர்வ ராகத்தை இசைத்து விட்டான் அவன். எல்லா அரவங்களும் அடங்கிய அந்த வேளையில் அந்த இன்னிசை தண்ணென அவளைத் தழுவி, அவளுடைய பிறவிப் பயனை உணர்த்தியது போன்ற மகிழ்ச்சி அவளுள் அலை பொங்கிற்று. அதில் தன்னையே இழந்து, இனியும் தாங்க முடியாது என்ற நிலையில் பூங்கொடி போல் துவண்டாள். அஞ்சலியாய்க் குவிந்த அவள் கைகள் பிரிய மறந்தன. சொல் எழவில்லை. சொல் அங்கே தேவையும் இல்லை.

மறுநாள் புலர்ந்த வைகறையில், சங்கரி ஆற்றில் நீராடிவிட்டுத் திரும்பினாள். அவள் வந்தபோது அவனும் குருக்களும் புறப்படத் தயாராக இருந்தனர். அவளுக்கு என்னவோ போலிருந்தது.

''நான் கோவிலுக்குப் புறப்படுகிறேன். நீ...'' என்று தயங்கினார் குருக்கள். பிறகு, ''இந்த வழியாக வந்தால் மறுபடியும் வருகிறாயா?'' என்று கேட்டார்.

அவன் மனம் திடீரென்று கனிவுற்றது. மனப் புயலை மிகவும் சிரமப்பட்டு அடக்கிக் கொண்டு, இதழ்களில் புன்முறுவலை வரவழைத்துக் கொண்டான். ''நான் வந்த வழியாக மறுபடியும் வருவதில்லை. சென்ற இடத்துக்கு மீண்டும் செல்வதில்லை. அதுதான் என் நியதி. அதன்படி இதுவரையில் என் பிரயாணம் நடந்து வந்திருக்கிறது. இனியும் அதேபோல் தொடருமென்று நம்புகிறேன்.''

சங்கரியின் கன்னத்து மேட்டில் கரகரவென்று கண்ணீர் இறங்கிற்று.

அவன் பையை எடுத்துக் கொண்டு கிளம்பினான். குருக்கள் பூக்குடலையை எடுத்துக் கொண்டு புறப்பட்டார்.

நெஞ்சுக்கு மிக நெருங்கின மிக யாரோ மனசைப் பிய்த்துக் கொண்டு போகிற மாதிரி இருந்தது!

அதன்பின் அவள் அறவே மாறிவிட்டாள். வாழ்வின் வசந்த காலத்துத் தேவன் போகிற போக்கில் தன்மீது அமிர்த மழையைப் பொழிந்து கொண்டே வந்ததும் போய்; அவன் சென்றதும் போய் எனச் சென்று விட்ட மாதிரி அவள் இதயத்தின் ஒரு மூலையில் விடிவற்ற இருள் சூழ்ந்து விட்டது.

எந்த நேரமும் உதிர்ந்த மலர்களையெல்லாம் கொண்டு வந்து மாலைகளாகத் தொடுத்தாள். பிறகு தலையில் சூட்டிக் கொண்டது போக மீதியைக் கழுத்தில் போட்டுக்கொண்டு 'கலகல'வென்று சிரித்தாள்.

''சங்கரி, என்னம்மா இது?'' என்று குழப்பத்துடன் வினவிய குருக்களுக்கு அவளிடமிருந்து பதில் இல்லை. முகத்தை மூடிக் கொண்டு குமுறிக் குமுறி அழுதாள்.


காலம் கடந்து அவள் மனநிலையைப் புரிந்து கொண்டார் குருக்கள். ஆனால் இனி அவர்தான் என்ன செய்ய முடியும்? நடந்து விட்ட நிகழ்ச்சியைப் பழுதுபார்க்க வாழ்க்கை ஒரு கடிகாரமா என்ன?

அவர் யோசித்தார். 'திருமணம் செய்து விட்டால் எல்லாம் சரியாகி விடும்' என்று அவருடைய நண்பர் ஒருவர் கூறிய ஆலோ

'இஞ்சின்' இல்லாத கார்

புகைக்கும் லாரிகள் நான் பார்த்திருக்கிறோம். தேக ஆரோக்கியத்துக்குக் கேடு விளைவிக்காத இஞ்சின் இல்லாத வண்டி என்றால் அபூர்வம் தானே?

இஞ்சின் இல்லாமலும் இரைச்சல் இல்லாமலும் தேக ஆரோக்கியத்துக்குக் கேடு விளைவிக்கும் புகையைப் பின்புறமாகக் கக்காமலும் ஓடுகின்ற லாரி ஒன்றை அமெரிக்காவில் இப்பொழுது வெள்ளோட்டம் விட்டுப் பார்த்து வருகிறார்கள்.



மின் விசையால் ஓடுகிறது இந்தப் புதுமை வண்டி. மின் விசை வழங்குவதற்கு அதில் நான்கு ''எரி பொருள் மின் கலங்கள்'' வைத்திருக்கிறார்கள்.

இப்பொழுது இவ்வண்டி, சமதளமான நல்ல சாலையில் மணிக்கு 47 மைல் வேகம் வரை செல்லும். சாதாரண மேடுகளிலும் ஏறும். இன்னும் நான்கு எரிபொருள் மின் கலங்களைச் சேர்க்கத் திட்டமிட்டிருக்கிறார்கள். அப்பொழுது சாதாரணமாக இன்றைய லாரிகள் செய்யும் வேலைகளையெல்லாம் இந்தப் புதிய வண்டியும் செய்யும் என்று எதிர்பார்க்கிறார்கள்.

எரிபொருள் மின்கலங்களில் அசையும் இயந்திர உறுப்புக்கள் கிடையா. ரசாயன மின்கலங்களை (பாட்டரிகளை) விட இவை பல வகையில் மேலானவை. இரு வகை மின்கலங்களையும் ஒப்பிட்டால், எடைக்கு எடை அதிகம் மின் விசை தருவது எரிபொருள் மின்கலமே.

ரசாயன மின்கலங்களின் விசை தீர்ந்து போனால், திரும்ப விசை (சார்ஜ்) ஏற்ற வேண்டும். எரிபொருள் மின்கலமோ, எரிபொருள் போடப் போட மின்விசை தந்த வண்ணம் இருக்கும்.

இந்த மின்கலத்துக்கு வேண்டிய எரிபொருள்கள் ஹைட்ரஜனும் ஆக்ஸிஜனுமாகும். கார் இஞ்சினைப் போல் காற்றிலிருந்தே அது ஆக்ஸிஜ

சரிவ அவருக்கும் உகந்ததாகவே பட்டது. கடைசியில் பக்கத்துக் கிராமத்திலேயே ஒரு வரன் கிடைத்தது. அவர் பார்த்துக் கொண்டு வந்த மாப்பிள்ளையை அவள் அங்கீகரிக்கவும் இல்லை; நிராகரிக்கவும் இல்லை. திருமணம் ஒவ்வொரு பெண்ணின் வாழ்க்கையிலும் இன்றியமையாத சடங்கு! அதை மறுப்பதால் என்ன பயன்?

விவாகம் நடந்து முடிந்த சில நாட்களுக்கெல்லாம் தன் மனைவியை அழைத்துப் போக வந்திருந்தான் சங்கரியின் கணவன்.

"போய்விட்டு வருகிறேன் அப்பா!" என்று புதுப் புடவை சலசலக்க வந்து நமஸ்கரித்தாள் சங்கரி. அவள் புறப்படுகிற போது அன்று புதிதாகத் தொடுத்த மலர்களையெல்லாம் ஒரு துணிச் சுருளில் ஞாபகமாக எடுத்துக்கொள்ள அவள் மறக்கவில்லை.

"சங்கரி!" என்று பதறினவர் போல் ஏதோ சொல்ல வாயெடுத்த குருக்கள், பக்கத்தில் மாப்பிள்ளை நிற்பதை உணர்ந்து தம்மைச் சமாளித்துக் கொண்டார். "சங்கரி! உனக்குச் சொல்ல வேண்டியதைக் கூற உன் அம்மா இல்லை. நான் உனக்கு என்ன சொல்லப் போகிறேன்? கல்யாணத்துக்குப் பிறகுதான் பெண்ணாய்ப் பிறந்தவளுக்கு வாழ்க்கையே ஆரம்பமாகிறது. அதுவரையில் அவள் வாழ்ந்ததெல்லாம் கனவுதான். இந்த வெறும் கனவுகளைத் தவிர பிறந்த இடத்தில் நீ தேடிக் கொண்டது ஒன்றுமில்லை. புகுந்த இடம்தான் நிரந்தரமானது. அங்கே பெரியவர்கள் மனம் கோணாமல் நடந்து நல்ல பெயர் எடுக்க வேண்டுமம்மா!" என்று குருக்கள் கண்களில் நீர் [illegible] சமாளித்து[illegible] கொண்டார்.

'கனவு' என்று அவர் மறைமுகமாகக் குறிப்பிட்ட அறிவுரையைப் புரிந்துகொண்ட சங்கரியால் பேச முடியவில்லை. அவள் தொண்டையில் ஏதோ அடைத்துக் கொண்டாற்போன்ற உணர்ச்சி! அவள் விடை பெற்றுக் கொண்டாள்.

அதோ, அவனும் அவளும் உட்கார்ந்திருந்த பாறை; உதிர்ந்த புஷ்பங்கள் தூவப் பட்ட மலராசனம் போல அவளைப் பார்த்துச் சிரிக்கிறது! அதைக் கடந்து செல்கையில் அவள் கால்கள் பின்னிக் கொண்டன. என்ன முயன்றும் நெஞ்சின் தடுமாற்றத்தை அவளால் மறைக்க முடியவில்லை. ஆனால் ஒரு கணம்தான் அந்த நிலை. மறு கணமே அவள் உள்ளத்தில் எங்கிருந்தோ ஒரு விவேகம் தோன்றியது. கையில் வைத்திருந்த மலர்களையெல்லாம் அந்தப் பாறையின் மேல் ஒருவித வெறுப்புடன் வீசி எறிந்தாள். அவை அக்கினி மலர்கள்!

"அடடா!... என்ன சங்கரி?" என்று வியப்போடு அவளைப் பார்த்தான் அவள் கணவன்.


"ரொம்பக் கனமாக இருக்கிறது; என்னாலே சுமக்க முடியவில்லை!" என்று பதிலளித்த ஞானப் பெண் சங்கரி, திரும்பிப் பாராமல் கணவனைத் தொடர்ந்து சென்றாள்.

லைப் பெற்றுக் கொள்கிறது. ஆகவே, நாம் தனியே வைத்திருந்து கொடுக்க வேண்டியதெல்லாம் ஹைட்ரஜனே. இந்த வாயுவைக் கொள்கலன்களில் அடைத்து வைக்கலாம். அல்லது ஹைட்ரஜன் கலந்துள்ள ஹைட்ரஸைன் போன்ற கூட்டுப் பொருள்களை வைத்திருக்கலாம்; இவை எளிதில் சேர்த்து வைக்கக் கூடியவை. அல்லது அமோனியாவை அடைத்து வைத்து அதிலிருந்து ஹைட்ரஜன் கிடைக்கும்படி செய்யலாம். பெட்ரோல் முதலிய வழக்கமான எரிபொருள்களிலிருந்தும் ஹைட்ரஜன் எடுக்கலாம்.

அமெரிக்கா இன்று வெள்ளோட்டம் விட்டுப் பார்க்கும் வண்டியில் பயன்படும் பொருள் ஹைட்ரஸைன்.

எரிபொருள் மின்கலத்தினுள்ளே ஹைட்ரஜனும் ஆக்ஸிஜனும் ஒன்றோடொன்று ரசாயன முறைகளில் சேர்கின்றன; அப்போது நீராவியும் வெப்பமும் உண்டாகின்றன; மின் அணுக்களும் (எலெக்ட்ரான்களும்) வெளியிடப்படுகின்றன — மின் அணுக்கள் வெளியிடப்படுவதுதான் மின் விசை ஓட்டமாகிறது.





இந்த மின்விசை ஒரு மின் அழுத்தக் கட்டுப்பாட்டுக் கருவி வழியாக 27 குதிரைத் திறன் உள்ள ஒரு மின்விசை மோட்டாரை இயக்கி வண்டியை இயங்கச் செய்கிறது. கட்டுப்பாட்டுக் கருவி, மின் கலத்திலிருந்து ஒரே சீரான மின் அழுத்தத்தில் தனக்கு வரும் மின்விசையை, வண்டியை இயக்குவதற்கு வேண்டிய பல்வேறு மின் அழுத்தங்களில் மாற்றி வழங்குவதற்காகும்.

புதிய மின்கல ஏற்பாடு நெடுநாட்கள் உழைக்கக் கூடியது. வழக்கமான பெட்ரோல் இஞ்சினும், பேட்டரியுடன் இயக்கமுள்ள ஏற்பாட்டைவிட இது செலவு குறைவானதாகவும் எளிதில் பேணக்கூடியதாகவும் நாளடைவில் ஆகலாம்.

வட்ட மேஜை

- தேசியப் படை முகாம்
- ஒரு வருடம் வீண்
- அரசியல் சார்பற்ற அணி

சில வாரங்களுக்குமுன் ''வட்டமேஜை''ப் பகுதியில் திரு எஸ். ஆர். கே. என்பவரால் எழுதப்பெற்ற, ''தேசியப் படை முகாம்களில் நடப்பதென்ன?'' என்ற கடிதத்தைக் கண்டு மன வேதனை அடைந்தேன்.

மகாராஷ்டிரத்தின் முக்கிய நகரமான ஔரங்காபாத்திலிருந்து பதினெட்டு மைலில் உள்ள குல்தாபாத்தில் 1966 அக்டோபர் 31ந் தேதி முதல் 1966 நவம்பர் 9ந் தேதி வரை நடந்த ''ஸீனியர் லீடர்ஸ் கேம்ப்'' பயிற்சி முகாமில் நான் கலந்து கொண்டிருந்தேன். அங்கு என்னுடைய தேசிய மாணவர் படைப் பயிற்சி வாழ்க்கையில் பெறாத பல பயிற்சிகளைப் பெற்றேன்.

முகாமின் கடைசி மூன்று நாட்களும் அளிக்கப்பட்ட போர்க்களப் பயிற்சி எங்கள் பயிற்சியின் சிகரம் போன்றது. குல்தாபாத்திலிருந்து பத்து மைல் தொலைவில் உள்ள தெளலதாபாத் என்ற இடத்தில் உள்ள கோட்டையைப் பிடிக்கத் திட்டம் போட்டோம். எங்களுக்கு 'எதிரி'களாக விளங்க அகமதாபாத்திலிருந்து நன்கு பயிற்சி பெற்றிருந்த சிப்பாய்கள் வரவழைக்கப்பட்டிருந்தனர். மூன்றாவது நாள் காலை எங்கள் திட்டப்படி எதிரிக் கோட்டையைப் பிடித்த போது நாங்கள் ஒவ்வொருவரும் எங்கள் பயிற்சியின் எல்லையை அடைந்துவிட்ட ஆனந்தத்தை அநுபவித்தோம்.

எங்களுக்கு எந்த நேரமும் ஓய்வு கொடுக்கப்படவில்லை. ஆகையால் நாங்கள் உழைப்பின் பலனை உணர்ந்தோம். தோளோடு தோள் இணைந்து உழைப்பதால் உண்டாகும் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டோம். பலரும் பயிற்சி முகாம் என்றால் வயிறார உண்பது; ஓய்வு எடுத்துக் கொள்வது; பாட்டு, நடனம் என்று கேளிக்கைகளில் நேரத்தைக் கழிப்பது என்று தப்பபிப்பிராயம் கொண்டிருக்கிறார்கள். இந்த அபிப்பிராயம் தவிர்க்கப்பட்டால் பயிற்சியின் முழுப் பலனையும், அதன் மகிமையையும் உணரலாம்.

என்னைப் பொறுத்தவரை நான் இம் முகாமில் கலந்து கொண்டதால் மக்கள் பணத்தின் ஒரு பகுதி என்றாலும் நல்ல முறையில் செலவழிக்கப்பட்டதை எண்ணிப் பெருமை அடைகிறேன்.

பம்பாய் — கேடட் அண்டர் ஆபீஸர்
17–6–67 — வி. ராமாநுஜம்

நான் எஸ். எஸ். எல். ஸி. பரீட்சையைக் கடந்த மார்ச் மாதம் எழுதி பாஸ் ஆனேன். ஆனால் இன்று வரை (19–6–67) எனக்கு மட்டும் எஸ். எஸ். எல். ஸி. புத்தகம் வரவில்லை. மற்ற எல்லா மாணவர்களுக்கும் வந்து விட்டது. நான் அது பற்றி என்னுடைய தலைமை ஆசிரியரைக் கேட்டதற்கு அவர் தமக்கு ஒரு தந்தி வந்திருப்பதாகக் கூறினார். அதில் நான் எஸ். எஸ். எல். ஸி.யில் கணக்குப் பரீட்சை எழுதியிருக்கிறேனா இல்லையா என்றும் அப்படி எழுதியிருந்தால் அது 'காம்போஸிட்'டா அல்லது 'ஜெனரலா?' என்றும் கேட்டிருந்தார்களாம். தலைமை ஆசிரியர் என்னை விசாரித்து விட்டு டி. பி. ஐ. அலுவலகத்துக்கு நான் 'காம்போஸிட்' கணக்குப் பரீட்சை எழுதியிருப்பதாக ஒரு கடிதம் எழுதினார். மறு நாள் நான் டி. பி. ஐ. அலுவலகத்துக்குச் சென்று விசாரித்ததில் என்னுடைய கணக்கு விடைத் தாள்கள் தொலைந்து விட்டதாகவும், கணக்கைத் தவிர மற்ற எல்லாப் பாடங்களுக்கும் எஸ். எஸ்.எல்.ஸி. புத்தகத்தில் மார்க்குகள் போட்டு இருப்பதாகவும் கூறினார்கள். உடனே நான் கேட்டேன், ''பின்பு எப்படி நீங்கள் பத்திரிகைகளில் நான் பாஸ் என்று மட்டும் போட்டீர்கள்?'' என்று. ஆனால் அதற்குச் சரியான பதில் சொல்லாமல் மழுப்பி விட்டார்கள். கடைசியில் என்னுடைய புத்தகத்தை ஒரு மாதம் கழித்து அனுப்புவதாகக் கூறினர். ''நீங்கள் இப்படிச் சொன்னால் நான் கல்லூரியில் சேருவதற்கு என்னதான்வழி?'' என்று கேட்டேன். அதற்கு ''நாங்கள் என்ன செய்ய முடியும்?'' என்று கைவிரித்து விட்டனர். நான் பல கல்லூரி முதல்வர்களைச் சந்தித்து 'இன்டர்வ்யூ' சமயத்தில் எஸ். எஸ். எல். ஸி. புத்தகத்தைக் கொணர்ந்து தருவதாகக் கூறினேன். ஆனால் ஒருவரும் என்னுடைய வேண்டுகோளுக்குச் செவிசாய்க்கவில்லை. இறுதியில் இந்த வருட முழுவதும் வீண் என்று விட்டு விட்டேன்.

திருவள்ளூர்
19–6–67 — சுப்பிரமணியம்

தமிழக முதலமைச்சர் திரு அண்ணாதுரை சிரணி ஒன்று உருவாக்கத் திட்டமிட்டுள்ளார். இவ்வாறு அமைக்கப்படும் அணிக்குச் செலவு செய்யப்படும் பணம் மக்களின் வரிப் பணம் என்பதை மனத்தில் கொண்டு, அரசியல் சார்பற்ற அணியாக அமைவதோடு, அரசியல் லாப நோக்கத்துக்கு இடம் கொடுக்காமலும், நாட்டின் நன்மை கருதியும் உருவாதல் வேண்டும் இந்த அணி. இவ்விதம் அமையாது என்று தோன்றினால் மாற்றுத் திட்டம் கொண்டு வந்தால் மிக நல்லது. நல்லவர்கள் — பெரியவர்கள் பாராட்டுவார்கள்.

செங்கோட்டை
6–7–67 — டாக்டர் முழுமதி

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Kilpauk, Madras-10.
Managing Editor: T. Sadasivam.



திட்டமிட்ட வெற்றிக்குக் கட்டமிட்ட ஆடை. கவர்ந்திழுக்கும் கட்டங்கள். பளிச்சென்ற தெளிவு. நறுக்கென்று கேட்கும் தோரணை. வீராவேசத் துள்ளல். எங்கே? துணிவோடு அணியுங்கள் பார்ப்போம். இது போன்ற கட்டங்களை உங்களைப் போன்ற ஒரு ஆண் மகன் அணிந்தால்... அடடா, எப்படித்தான் இருக்கும்.

மபத்லால் க்ரூப்

பாப்ளின்கள் மற்றும் ஷர்ட்டிங்குகள்

2x2 'டெரீன்'/காட்டன், பிரிண்டெட், 'டெபினேஸ்டு' 'மஃபினேஸ்டு' மற்றும் ஸ்ட்ரெச் ரகங்கள்

நியு ஷாரக். (ஷாரக்) அகமதாபாத். நியு ஷாரக், நடியாத். ஸ்டாண்டர்ட், பம்பாய். ஸ்டாண்டர்ட், (நியு சைனா) பம்பாய். ஸ்டாண்டர்ட், தேவாஸ். ஸாஸூன், பம்பாய். ஸாஸூன் (நியு யூனியன்) பம்பாய். ஸூரத் காட்டன், ஸூரத். மபத்லால் ஃபைன், நவ்ஸாரி. மிஹிர் டெக்ஸ்டைல்ஸ், அகமதாபாத்

LPE Aiyars M. 192 TM

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

இலங்கையில் 40 சதம்
தபால் செலவு தனி